CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருநள்ளாறு நகவிடங்க
ஸ்ரீ செண்பக தியாகராஜ ஸ்வாமி



ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி
தேவஸ்தான வெளியீடு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

திருநள்ளாறு நகவிடங்க ஸ்ரீ செண்பக தியாகராஜ ஸ்வாமி



ஆசிரியர்: **க. ஜெயராமன்**

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தான வெளியீடு

30-10-2016

விலை ரூ. 40/-

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Printed at :

RNR Printers & Publishers
19, Thandavarayan Street,
Triplicane, Chennai - 600 005.
© 044-2844 7071

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொருளடக்கம்

எண்	தலைப்பு		பக்கம்
	வாழ்த்துரை	....	4
	அணிந்துரை	....	5
	ஆசிரியர் முன்னுரை	....	6
1.	சிவ ஆலய மரபுகள்	....	9
2.	சிவ மூர்த்தங்கள்	....	14
3.	சிவாகமங்கள்	....	17
4.	சோமாஸ்கந்தர்	....	18
5.	விடங்கர்	....	23
6.	முசுகுந்தன்	....	27
7.	சப்தவிடங்கர்	....	33
8.	தில்லையும் – திருவாரூரும்	....	42
9.	திருவாரூர் மகிமை	....	49
10.	தியாகராஜ ஸ்வாமி	....	54
11.	திருநள்ளாறு தியாகராஜரும் உன்மத்த நடனமும்	....	63
12.	தியாகராஜர் நடனம்	....	73
13.	தியாகராஜாஷ்டகம்	....	81
14.	சப்தவிடங்கத்தலங்கள் உணர்த்தும் சிவயோக விளக்கம்	....	82

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாழ்த்துரை

நம் நாட்டுப் புராதன ஆலயங்கள் வெறும் சமூக வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமின்றி கலை, பக்தி, இலக்கியம், ஆன்மீகம், தத்துவம், யோகம் போன்ற பல்வேறு பரிமாணங்களைப் பிரதிபலிக்கும் அற்புதப் படைப்புகள். இதை உணர்ந்து கொண்டால் தான் அவற்றின் புனிதத்தையும் பாரம்பரியத்தையும் பராமரிக்க முடியும்.

திருநள்ளாறு என்ற தலம் சனி பகவானுக்குகந்த ஸ்தலம் என்ற முறையில் திருநள்ளாறு தேவஸ்தானம் சனிபகவான் பற்றிய பல விளக்கங்களை, வழிபாட்டு முறைகளைத் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியிட்டுள்ளது பெருமையளிக்கிறது.

திருநள்ளாறு நவக்ரஹங்களில் சனிக்குரிய தலம் என்பது போலவே சப்தவிடங்கத் தலங்களில் தனி விடங்கர், தனித் தியாகராஜ சபை, தனி நடனம் ஆகியவை கொண்டு விளங்கிவரும் விடங்கத்தலமும் ஆகும். ஆயினும் விடங்கர் பற்றிய முழு உண்மைகள் தெரியாத காரணத்தால் மேலோட்டமாக வழிபட்டுச் செல்லும் நிலையைக் காண்கிறோம்.

தியாகராஜர் விடங்கர் பற்றிய ஏராளமான உண்மைகளை உள்ளடக்கிய புதிய வெளியீட்டைத் திருநள்ளாறு தேவஸ்தானம் அறிமுகப்படுத்துவது குறித்து பெருமைப்படுகிறேன். அந்த முயற்சியை வரவேற்று, நிர்வாக அதிகாரி திரு. S.K. பன்னீர்செல்வம் அவர்களின் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன்.

திருநள்ளாறு ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வர
ஸ்வாமி தேவஸ்தானம் – 609 607.
01–10–2016

ப. பார்த்திபன், I.A.S.,
மாவட்ட ஆட்சியர் / தனி அதிகாரி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அணிந்துரை

தமிழ் நாட்டில் அஷ்ட வீரட்டத்தலங்கள், சப்த விடங்கத்தலங்கள் என்ற தொகுப்பு ஆலயங்களுக்குப் பக்தர்கள் ஏதோ ஒரு சடங்காக சென்று வந்தார்களே தவிர அவற்றின் பின்னணியில் புதைந்து கிடக்கும் இரகசியங்களை பெரும்பாலோர் அறியவில்லை, அறிய முற்படவுமில்லை.

தமிழ்நாட்டைச் சேர்ந்த திருமதி ராஜேஸ்வரி கோஷ் என்ற ஆராய்ச்சிச் செம்மல், தியாகராஜ வழிபாடு என்ற நூலில் தனது ஆய்வு முத்துக்களை வாரி வழங்கியுள்ளது கண்டு, தியாகராஜர் சிலைக்குப் பின்னால் எத்தனை பெரிய ரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன என வியந்தேன். எங்கள் தேவஸ்தானத்திற்குச் சனிபகவான் பற்றிய ஆங்கில மற்றும் ஹிந்தி கையேடுகளை எழுதிட உதவிய ஆன்மீக அறிஞர் திரு. ஜெயராமன் இந்தப் பணியை மனமுவந்து ஏற்று எங்கெங்கோ உள்ள விஷயங்களைத் தேனீ போலச் சேகரித்துத் தியாகராஜர் பற்றிய நூலை எழுதி உதவியுள்ளார். அவருக்கு எங்கள் நன்றி. சப்தவிடங்க ஸ்தலங்களும் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களையும் அவற்றைக் கடந்த ஸஹஸ்ராரத்தையும் குறிக்கின்றன என்று அறியும் போது மெய் சிலிர்க்கிறது. நம்நாட்டில் ஆலயங்கள் பலவற்றின் பல அரிய பொக்கிஷங்கள் காலத்தால் அழியாது புதைந்து கிடைக்கின்றன. உரிய காலம் வரும்போது அவை வெளிப்படும் என்று நம்பலாம்.

இந்த ஆய்வு நூலின் மூலம் தியாகராஜ வழிபாடு, தியாகராஜ நடனம் ஆகியவை மேலும் பொலிவும் புத்துணர்வும் பெறும் என்று நம்புகிறேன்.

S.K. பன்னீர் செல்வம்,
நிர்வாக அதிகாரி (கோயில்கள்)

திருநள்ளாறு ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வர
ஸ்வாமி தேவஸ்தானம் – 609 607.
01–10–2016

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆசிரியர் முன்னுரை

கலைகளுக்கும், பக்திக்கும் ஏற்ற விளைநிலங்களை அன்றைய மன்னர்கள் உருவாக்கித் தர இறைத்தூதுவர்களான நாயன்மார்களும், ஆழ்வார்களும் அந்தப் புனித மண்ணில் தெய்வீகம், ஆன்மீகம் என்ற பயிர்களைப் பயிரிட்டு உரமிட்டு வளர்த்தனர். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழிக்கேற்ப ஊர்தோறும் ஆலயங்கள் உருவாகிப் பக்திக்கும் வாழ்வாதாரத்திற்கும் ஊற்றுக்கண்களாக விளங்கின.

அக்காலத்தில் ஆலய நிர்மாணப் பணியில் நியமிக்கப்படும் போது கல்தச்சர்கள் ஆவுடையார் கோயில் கொடுங்கை, திருவீழிமிழலை வௌவால் நத்திமண்டபம், திருவலஞ்சுழிப்பலகணி, திருநனி பள்ளி கோடி வட்டம் என்ற நான்கினைத் தவிர வேறு எந்த வகை அமைப்புகளையும், உருவாக்கி தருவதாக உறுதியளிப்பார்களாம் எனக் காஞ்சி மஹாபெரியவர் கூறுவார். நம் புராதன ஆலயங்கள் வெறும் கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டவையல்ல, அவற்றுக்குள் எண்ணற்ற தத்துவ யோக ரகசியங்கள் மறைந்து கிடக்கின்றன.

பாரதமெங்கும் பரந்து ஒளிவீசும் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள் போலத் தமிழ்நாட்டில் மட்டிலும் ஏராளமான பழம்பெருமை நிறைந்த ஆலயங்கள் உள்ளன. இவற்றுள் சோழவளநாட்டில் உள்ள சப்தவிடங்கத்தலங்கள் தமக்கென்று தனித்தன்மை கொண்டவை. இவற்றின் அருமை பெருமை முழுமையாகத் தெரியாத அன்பர்கள் ஏதோ சடங்காக இவற்றைத் தரிசித்து விட்டுச் செல்லும் நிலைதான் இருக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சிச் செம்மல் திருமதி. ராஜேஸ்வரி கோஷ் தியாகராஜ வழிபாட்டை ஆழ்ந்தும் அகன்றும், ஆய்ந்து வெளியிட்ட அறிக்கை, விடங்கத் தலங்களைப் பற்றிய புரியாத புதிர்களை மக்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் தமிழில் கொண்டு வரவேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டியது. திருநள்ளாறு தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. S.K. பன்னீர்செல்வம், அவர்களும், ஆலய ஆர்வலர் திரு. மஹாதேவன் அவர்களும் இது குறித்து எடுத்த முன் முயற்சியில் விளைந்ததே இந்த நூல் தொகுப்பு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எத்துணையோ சிவநெறிச் செம்மல்களின் எழுதுகோல்களில் பூத்த மலர்களிலிருந்து தமிழ் மண்ணிற்கே உரிய தியாகராஜர் பற்றிய இந்த அலங்கலைத் தொகுத்துள்ளேன். திருநள்ளாறு சனிபகவான் பற்றி ஆங்கிலத்திலும் இந்தியிலும் எழுத வைத்த தியாகராஜ பெருமான் விடங்கத்தலங்களைப் பற்றியும் எழுதுமாறு பணித்தமைக்காக அவனருளால் அவன்தாள் வணங்கி அவன் திருவடிகளில் இந்த அலங்கலைச் சூட்டுகிறேன்.

இந்நூல் வெளிவர மூலகாரண கர்த்தாக்கள் திருநள்ளாறு தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. S.K. பன்னீர்செல்வம், பல அரிய செய்திகளையும் படங்களையும் தந்து உதவிய ஆலய ஆர்வலர் திரு. மஹாதேவன், திருமதி ராஜேஸ்வரி கோஷ் எழுதிய 'தியாகராஜா வழிபாடு' என்ற ஆங்கில ஆராய்ச்சி நூலின் பிரதியைத் தந்து உதவிய காரைக்கால் ஆடிட்டர் திரு. பி. கணபதி சுப்ரமணியம் மற்றும் ஆலோசனைகள் வழங்கி உதவிய திருநள்ளாறு வழக்கறிஞர் திரு. எஸ்.பி. செல்வசண்முகம், அச்சிட்டு வழங்கிய சென்னை RNR பிரிண்டர் நிறுவனத்தார், அச்சுப் பிரதிகளைக் தொகுத்து உதவிய திருவல்லிக்கேணி, திரு. இராமநாராயணன், அவர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக புதைந்து கிடக்கும் மாபெரும் ரகசியங்களை வாரி வழங்கிய ஆன்றோர் பெருமக்களுக்கும் இறைவன் பெயரில் நன்றியை உரித்தாக்குகிறேன்.

க. ஜெயராமன்,
சென்னை – 600 083.
✆ 044 – 24890109
01–10–2016

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருநள்ளாறு நகவிடங்க ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

1. சிவ ஆலய மரபுகள்

"தென்னாடுடைய சிவனே போற்றி" என்றார் மாணிக்கவாசகர். இந்தியத் திருநாட்டிலே தமிழ்நாட்டில் மட்டும் 2,500க்கும் மேற்பட்ட சிவாலயங்கள் உள்ளதாக அறியப்படுகிறது. இந்தச் சிவாலயங்களால் தென்னாட்டுக்கு இந்த பெருமை கிடைத்தது. இந்தச் சிவாலயங்களில் புராதனமான பல சிவாலயங்கள் சிவ ஆகமங்களுக்கு உட்பட்டவை என்ற முறையில் ஒரு பெருந்தொகுப்பாக விளங்குவதோடு பொதுவான முறைப்படுத்தப்பட்ட வழிபாட்டு மரபுகளும் கொண்டு திகழ்கின்றன. இந்த சிவாலயங்களுக்குள் மற்றொரு தொகுப்பாக விளங்குபவை பாடல் பெற்ற தலங்களாகும். தேவாரம் பாடிய திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் தரிசித்து இறைவனாம் ஈசன் மீது பக்தி ரசம் ததும்பும் பாடல்கள் இயற்றிய 275 தலங்கள் இந்த தொகுப்பில் அடங்கும்.

இந்தத் தொகுப்புகளுக்குள்ளேயே பல்வேறு பொதுவான அடிப்படையில் தொகுக்கப்பட்ட சிவாலயங்களைக் காணலாம். பஞ்ச பூதங்கள் வடிவில் உள்ள சிவாலயங்கள், நடராஜப் பெருமானின் ஐந்து சபைகள் உள்ள தலங்கள், ஆறு ஆதாரங்களைக் குறிக்கும் தலங்கள், சிவபெருமான் சம்ஹார மூர்த்தியாக இடம் பெற்றுள்ள அஷ்ட வீரட்டத்தலங்கள், ஆகியவை பொதுவான ஒரு தலைப்புக்கு உட்பட்டு அமைந்த போதிலும், ஒவ்வொன்றும் தனித்தன்மை கொண்டவை. இவற்றிலிருந்து சற்று வேறுபட்டு ஒரே குழுமத்தை சேர்ந்த தலங்களாக மட்டுமன்றி இவற்றின் மூலம், வரலாறு, மூர்த்தி, ஸ்தாபகர், வழிபாட்டுமுறை ஆகியவற்றிலும் ஒத்த தன்மை கொண்ட ஏழு தலங்கள் தனித்துக் குறிப்பிடத்தக்கவை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவையாவும் காவிரிக்கரையைச்சார்ந்த சோழநாட்டுத் தலங்கள். இவற்றை சப்தவிடங்க ஸ்தலங்கள் என அழைப்பர்.

இங்குள்ள தியாகராஜமூர்த்திகள், சோமாஸ்கந்த வடிவம், விஷ்ணு பூஜித்தவை, இந்திரனால் வழிபடப்பட்டவை, முசுகுந்த சக்ரவர்த்தியால் பூமிக்குக் கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டவை. இந்த மூர்த்திகளுக்கென்றே ஏற்பட்டுள்ள தனித்தனி நடனமுறைகள் என்ற வகையில் ஒரே வழிபாட்டு மரபுக்குள் வரும் தலங்கள்.

இந்து மதத்தில் சைவ சம்ப்ரதாயம், வைணவ சம்ப்ரதாயம், நாத் சம்ப்ரதாயம், தசநாமி சம்ப்ரதாயம் என பலவிதமான சம்ப்ரதாயங்கள் தமக்கென்று தனித்தனி தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், சடங்குகள், ஆசார்யர்கள், கோட்பாடுகள் அடியார்கள் ஆகியவற்றைக் கொண்டு திகழ்வதைக் காணலாம். இவையாவும் சநாதன தர்மம் என்ற மாபெரும் கடலில் கலக்கும் நதிகளாகும். உருவில் சிறியதாயினும் பெரும்புகழுடனும் நீண்ட வரலாற்றுடனும் தொடர்ந்து வரும் ஒரு வழிபாடே, தியாகராஜ விடங்க வழிபாடு. அன்னியர் படையெடுப்புகளால் ஏற்பட்ட பாதிப்பு, பௌத்த, சமண மதங்களின் தீவிர பிரசாரத்தால் ஆட்சியாளர் மற்றும் மக்கள் மனங்களில் ஏற்பட்ட கொள்கை மாற்றம் ஆகிய பல்வேறு காரணங்களால் தமிழ்நாட்டில் சைவ சமயம் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகிய காலகட்டத்தில் மக்களை பக்தி இயக்கத்தில் ஈடுபடுத்தவும், ஆலயங்களின் முக்கியத்துவத்தையும் பெருமையையும் மக்களுக்கு உணர்த்தவும் சமயக்குரவர்கள் எனப்போற்றப்படும் திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார், திருஞானசம்பந்தமூர்த்தி, சுந்தர மாணிக்கவாசகப் பெருமான் ஆகிய அருளாளர்கள் ஆற்றிய சாதனை அளவிடற்கரியது.

அந்த காலகட்டத்தில் சிவாலயங்களுக்கிடையே ஒரு இணைப்பு, ஒரு பொதுவான தொடர்பு ஏற்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. திருவிழாக்கள் மூலம் பலபகுதி மக்களை ஒன்று திரட்ட முடிந்தது. அத்தகைய முயற்சிகளில் ஒன்றுதான் சோழ மன்னன் முசுகுந்த சக்ரவர்த்தி, தான் தேவர் உலகத்திலிருந்து கொண்டுவந்த ஏழு விடங்க தியாகராஜ மூர்த்திகளை திருவாரூரை மையமாகக்கொண்டு திருநள்ளாறு, திருக்கோளிலி, திருநாகைக்காரோணம், திருவாய்மூர்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்காறாயில், திருமறைக்காடு ஆகிய ஏழு தலங்களில் பிரதிஷ்டை செய்து ஒருமைப்பாட்டை நிலைநாட்டியது.

சோழமன்னர்கள் காலத்திற்குப் பிறகு ஆதரவு குன்றிய நிலையில் உள்ள இந்தத் தமிழ்நாட்டிற்கே தனிப்பெருமை சேர்க்கும் திருத்தலங்கள் மீண்டும் பொலிவும் சிறப்பும் பெற்று விளங்க வேண்டுமாயின் மக்கள் அவற்றின் அருமை பெருமையை நன்கு உணர வேண்டியது அவசியமாகிறது.

தொகுப்புச் சிவாலயங்கள்

1. பஞ்சபூத லிங்கங்கள்

பூமி	–	திருவாரூர், காஞ்சி
நீர்	–	திருஆனைக்கா
வாயு	–	ஸ்ரீ காளஹஸ்தி
நெருப்பு	–	திருஅண்ணாமலை
ஆகாயம்	–	சிதம்பரம்

2. பஞ்ச நடன சபைகள்

பொற் சபை	–	சிதம்பரம்
வெள்ளியம்பலம்	–	மதுரை
தாமிர சபை	–	திருநெல்வேலி
ரத்ன சபை	–	திருவாலங்காடு
சித்ர சபை	–	திருக்குற்றாலம்

3. ஆறு ஆதார ஸ்தலங்கள்

மூலாதாரம்	–	திருவாரூர்
ஸ்வாதிஷ்டானம்	–	திரு அண்ணாமலை
மணிபூரகம்	–	திருஆனைக்கா
அனாஹதம்	–	ஆவுடையார்கோவில்
விசுத்தி	–	சிதம்பரம்
ஆக்ஞா	–	காசி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

4. சப்த விடங்க ஸ்தலங்கள்

வீதி விடங்கர்	–	திருவாரூர்
நக விடங்கர்	–	திருநள்ளாறு
நீலவிடங்கர்	–	திருவாய்மூர்
அவனிவிடங்கர்	–	திருக்கோளிலி
சுந்தரவிடங்கர்	–	நாகைக் காரோணம்
புவனி விடங்கர்	–	வேதாரண்யம்
ஆதிவிடங்கர்	–	திருக்காறாயில்

5. அஷ்ட வீரட்ட ஸ்தலங்கள்

திருக்கண்டியூர்	–	பிரம்மாவின் தலை
திருவதிகை	–	திரிபுரம்
திருக்கோவலூர்	–	அந்தகாசுரன்
திருப்பறியலூர்	–	தக்ஷன்தலை
திருக்குறுக்கை	–	மன்மதன்
வழுவூர்	–	கஜஸம்ஹாரம்
திருவிற்குடி	–	ஜலந்தராசுரன்
திருக்கடவூர்	–	யமன்

6. திருவையாறு சப்த ஸ்தான ஸ்தலங்கள்

திருவையாறு	–	திருவேதிக்குடி
திருப்பழனம்	–	திருக்கண்டியூர்
திருச்சோற்றுத்துறை	–	திருப்பூந்துருத்தி
திருநெய்த்தானம்		

7. ஜ்யோதிர் லிங்கங்கள்

ராமேஸ்வரம்	–	த்ரயம்பகம்
ஸ்ரீசைலம்	–	சோமநாதம்
பீமசங்கரம்	–	மகாகாளம்
நாகநாதம்	–	ஓங்காரம்–அமலேஸ்வரம்
வைத்யநாதம்	–	விஸ்வநாதம்
குஸ்ருணேசம்	–	கேதாரம்

8. நவக்ரஹ ஸ்தலங்கள்

சூரியன்	–	சூரியனார் கோயில்
சந்திரன்	–	திங்களூர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செவ்வாய்	–	வைத்தீஸ்வரன் கோயில்
புதன்	–	திருவெண்காடு
குரு	–	திருஆலங்குடி
சுக்ரன்	–	கஞ்சனூர்
சனி	–	திருநள்ளாறு
ராகு	–	திருநாகேஸ்வரம்
கேது	–	கீழ்ப்பெரும்பள்ளம்

9. பஞ்சமுக ஸ்தலங்கள்

சத்யோஜாதம்	–	அரியதுறை	–	வரமூர்த்தீஸ்வரர்
வாமதேவம்	–	ஆரணி	–	சம்பங்கி பிச்சாலீஸ்வரர்
அகோரம்	–	தென்கோகர்ணம்	–	பிச்சாலீஸ்வரர்
தத்புருஷம்	–	சுருட்டப்பள்ளி	–	பள்ளிகொண்டீஸ்வரர்
ஈசானம்	–	நாமகிரி	–	வாலீஸ்வரர்

10. மஹாலிங்க (திருவிடைமருதூர்) கோஷ்டக் கோயில்கள்

மூலவர் சிவன்	–	திருவிடைமருதூர்
நந்தி	–	திருவாவடுதுறை
விநாயகர்	–	திருவலஞ்சுழி
முருகன்	–	சுவாமிமலை
சண்டிகேசர்	–	சேங்கனூர்
பைரவர்	–	சீர்காழி
நடராஜர்	–	சிதம்பரம்
துர்கை	–	பட்டீஸ்வரம்
தக்ஷிணாமூர்த்தி	–	ஆலங்குடி
நவகிரஹங்கள்	–	சூரியனார்கோயில்
சோமாஸ்கந்தர்	–	திருவாரூர்

11. மகாமக பஞ்ச க்ரோச ஸ்தலங்கள்

திருவிடைமருதூர்	(மத்யார்ஜுனம்)
திருநாகேஸ்வரம்	
தாராசுரம்	(ருத்ராக்ஷாரண்யம்)
சுவாமிமலை	(குஹாசனம்)
கருப்பூர்	(பாடலவனம்)

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ. சிவ மூர்த்தங்கள்

அறுபத்தி நான்கு மூர்த்தமாகிய சிவபராக்ரமத்தைப் பற்றிக்கேட்ட முனிவர்களுக்கு நைமிசாரண்யத்தில் சூதபுராணிகர் விளக்கமளித்தார். நந்திதேவர் சனத்குமார முனிவருக்குக் கூறியதாக உள்ள சனத்குமார சம்ஹிதையில் ஸ்கந்த மகாபுராணத்தில் இந்த சிவபராக்ரமம் கூறப்பட்டுள்ளது.

சகல காரிய சித்திக்கு நாமத் தியானம்

லிங்கம் லிங்கோத்பவம் சைவ முகலிங்கம் ஸதாசிவம்
மஹாஸதா சிவஞ்சைவ உமாமகேசம் அதபரம்
ஸீகாஸனம் உமேசம் து சோமாஸ்கந்தந் ததைவச
சந்த்ர சேகர மூர்த்திஞ்ச வ்ருஷாரூடம் வ்ருஷாந்திகம்
புஜங்க லளிதஞ்சைவ புஜங்கத்ராச மேவச
ஸந்த்யாந்ருத்தம் ஸதாந்ருத்தம் தாண்டவம் ஜாஹ்னவீதரம்
கங்கா விஸர்ஜனஞ்சைவ த்ரிபுராந்தக மேவ ச கல்யாண சுந்தரஞ்சைவ
அர்த்த நாரீஸ்வரந்ததா
கஜயுத்தம் ஜ்வராபக்னம் சார்த்தூல ஹர விக்ரஹம்
ததாபாசுபதஞ்சைவ கங்காளம் கேசவார்த்தகம்
பிக்ஷாடனந்து ஸிம்ஹக்னம் சண்டேஸ்வர ப்ரஸாதகம்
ஆபதுத்தாரணஞ்சைவ வடுகம் க்ஷேத்ரபாலகம்
தக்ஷிணாமூர்த்தி தத்பேதம் யோகவீணா தரந்ததா
காலாந்தகந்து காமாரிம் வகுளேஸ்வரபைரவம்
வீரபத்ரம் அகோராஸ்த்ரம் தக்ஷயஞ்ஞஹரந்ததா
கிராதம் குருமூர்த்திஞ்ச அஸ்வாரூடம் கஜாந்திகம்
ஜலந்தர வதஞ்சைவ ததாகௌரீவரப்ரதம்
சக்ரதாநஸ்வரூபஞ்ச கௌரீலீலா ஸமன்விதம்
விஷாபஹரணஞ்சைவ கருடாந்திகமேவச
ததாப்ரம்ம சிரஸ்சேதம் கூர்ம ஸம்ஹாரமேவச
மத்ஸ்யாரிந்து வராஹாரிம் ப்ரார்த்தனாமூர்த்தமேவச
ரக்தபிக்ஷா ப்ரதானஞ்ச சிஷ்ய பாவந்ததைவ ச
ஷடாநநந்ததாஷ்ட விக்ரகம் பாவயேத் ஸதா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவனது 64 மூர்த்தங்கள்

1.	லிங்கமூர்த்தி	–	திருவிடைமருதூர்
2.	லிங்கோத்பவ மூர்த்தி	–	திருஅண்ணாமலை
3.	முகலிங்க மூர்த்தி	–	கொட்டையூர், கச்சபேஸ்வரர் திருவக்கரை
4.	சதாசிவ மூர்த்தி	–	சிதம்பரம்
5.	மகாசதாசிவ மூர்த்தி	–	கைலாசமலை, காஞ்சி சுரஹரேஸ்வரர்
6.	உமா மகேச மூர்த்தி	–	கோனேரி ராஜபுரம்
7.	சுகாசன மூர்த்தி	–	சீர்காழி தோணியப்பர்
8.	உமேச மூர்த்தி	–	திருவிடைமருதூர்
9.	சோமா ஸ்கந்த மூர்த்தி	–	திருவாரூர்
10.	சந்திரசேகர மூர்த்தி	–	திருப்புகலூர்
11.	ரிஷபாரூட மூர்த்தி	–	திருவாவடுதுறை
12.	ரிஷபாந்திக மூர்த்தி	–	திருவாரூர்
13.	புஜங்கலளித மூர்த்தி	–	பெரும்புலியூர் (தில்லை ஸ்தானம்)
14.	புஜங்கத்ராச மூர்த்தி	–	திருக்கொள்ளம் பூதூர்–16 கி.மீ. பெரும்புலியூர்
15.	சந்த்யா நிருத்த மூர்த்தி	–	மதுரை வெள்ளிஅம்பலம், கைலாசம்
16.	சதா நிருத்தமூர்த்தி	–	சிதம்பரம்
17.	சண்ட தாண்டவ மூர்த்தி	–	கும்பகோணம் நாகேஸ்வரர்
18.	கங்காதர மூர்த்தி	–	கங்கோத்ரி
19.	கங்கா விசர்ஜனமூர்த்தி	–	கேதாரம்
20.	த்ரிபுராந்தக மூர்த்தி	–	திருவதிகை
21.	கல்யாண சுந்தரமூர்த்தி	–	திருவீழிமிழலை
22.	அர்த்தநாரீஸ்வர மூர்த்தி	–	திருச்செங்கோடு
23.	கஜயுக்த மூர்த்தி	–	வழுவூர்
24.	ஜ்வராபக்ன மூர்த்தி	–	சாட்டியக்குடி
25.	சார்த்தூலஹர மூர்த்தி	–	வழுவூர்
26.	பாசுபத மூர்த்தி	–	திருக்கொள்ளம் பூதூர்
27.	கங்காள மூர்த்தி	–	சீர்காழி, சிறுபுலியூர்
28.	கேசவார்த்த மூர்த்தி	–	சங்கரன்கோயில்
29.	பிட்சாடன மூர்த்தி	–	வழுவூர்
30.	சிம்ஹக்ன மூர்த்தி	–	திரிபுவனம், சரபமூர்த்தி
31.	சண்டேச அனுக்ரஹ மூர்த்தி	–	திருவாய்ப்பாடி
32.	தக்ஷிணாமூர்த்தி	–	ஆலங்குடி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

33.	யோகதக்ஷிணாமூர்த்தி	–	மாயூரம் வள்ளலார் கோயில், குறுக்கை
34.	வீணாதக்ஷிணாமூர்த்தி	–	லால்குடி
35.	காலாந்தக மூர்த்தி	–	திருக்கடையூர்
36.	காமதஹன மூர்த்தி	–	குறுக்கை
37.	லகுளேஸ்வர மூர்த்தி	–	சக்திமுற்றம்
38.	பைரவ மூர்த்தி	–	காசி, சீர்காழி
39.	ஆபதோத்தாரண மூர்த்தி	–	சீர்காழி
40.	வடுக மூர்த்தி	–	வடுகூர் (திருவாண்டார் கோயில்)
41.	க்ஷேத்ரபால மூர்த்தி	–	க்ஷேத்ரபாலபுரம்
42.	வீரபத்ர மூர்த்தி	–	பெருந்துறை (நாச்சியார் கோயில் அருகில்)
43.	அகோர அஸ்த்ர மூர்த்தி	–	திருவெண்காடு
44.	தக்ஷயக்ஞக்ஷத மூர்த்தி	–	திருப்பறியலூர்
45.	கிராத மூர்த்தி	–	திருக்கொள்ளம் பூதூர்
46.	குருமூர்த்தி	–	திருப்பெருந்துறை
47.	அஸ்வாரூட மூர்த்தி	–	மதுரை
48.	கஜாந்திக மூர்த்தி	–	திருவெண்காடு
49.	ஜலந்தரவத மூர்த்தி	–	திருவிற்குடி
50.	ஏகபாதத்ரி மூர்த்தி	–	திருஇடைமருதூர்
51.	த்ரிபாத த்ரிமூர்த்தி	–	திருஇடைமருதூர்
52.	ஏகபாத மூர்த்தி	–	தப்பளாம்புலியூர்
53.	கௌரி வரப்ரதமூர்த்தி	–	காஞ்சிபுரம்
54.	சக்ரதான மூர்த்தி	–	திருவீழிமிழலை
55.	கௌரிலீலாசமன்வித மூர்த்தி	–	காஞ்சிபுரம்
56.	விஷாபஹரண மூர்த்தி	–	சுருட்டப்பள்ளி
57.	கருடாந்திக மூர்த்தி	–	பட்டீஸ்வரம்
58.	பிரம்ம சிரச்சேத மூர்த்தி	–	திருக்கண்டியூர்
59.	கூர்ம சம்ஹார மூர்த்தி	–	கச்சாலீஸ்வரர்
60.	மச்ச சம்ஹார மூர்த்தி	–	காஞ்சிபுரம்
61.	வராஹ சம்ஹார மூர்த்தி	–	காசி, பழமலை
62.	பிரார்த்தனா மூர்த்தி	–	ருத்ர கங்கை
63.	ரத்த பிக்ஷாப்ரதான மூர்த்தி	–	காசி
64.	சிஷ்ய பாவமூர்த்தி	–	ஸ்வாமி மலை

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

3. சிவாகமங்கள்

வேதங்கள் பிரம்மம் ஒன்று என்று சொல்லி பலவித கடவுள்களையும் அறிமுகப்படுத்துகின்றன. ஆனால் ஆகமங்கள் ஒரே ஒரு தெய்வ வழிபாட்டை மட்டும் வலியுறுத்துகின்றன. ஆகமதீக்ஷை பெறாமல் எவரும் எந்த தெய்வத் திருமேனியையும் தீண்டவோ பூஜை செய்யவோ கூடாது. தென்னாட்டில் பெரும்பாலான ஆலயங்களில் காமிக ஆகமம் மட்டுமே பின்பற்றப்படுகிறது. காமிக ஆகமம் மிக நீளமான ஆகமங்களில் ஒன்று. அது சிவபெருமானுடைய திருவடியாக கருதப்படுகிறது.

சிவ ஆகமங்கள் 28ம் சதாசிவ மூர்த்தியின் அங்கங்களாகும்.

	அங்கம்		ஆகமம்
1.	திருவடிகள்	–	காமிகம்
2.	கணுக்கால்கள்	–	யோகஜம்
3.	திருவடிவிரல்கள்	–	சிந்தியம்
4.	கெண்டைக்கால்கள்	–	காரணம்
5.	முழந்தாள்கள்	–	அஜிதம்
6.	தொடைகள்	–	தீப்தம்
7.	குஹ்யம்	–	சூட்சுமம்
8.	இடுப்பு	–	ஸஹஸ்ரம்
9.	முதுகு	–	அம்சுமான்
10.	கொப்பூழ்	–	சுப்ரபேதம்
11.	வயிறு	–	விஜயம்
12.	ஹ்ருதயம்	–	நிச்வாசம்
13.	ஸ்தனங்கள்	–	ஸ்வயம்பூதம்
14.	கண்கள்	–	ஆக்னேயம் (அனல்)
15.	கழுத்து	–	வீரம்
16.	செவிகள்	–	ரௌரவம்
17.	கிரீடம்	–	மகுடம்
18.	கரங்கள்	–	விமலம்
19.	மார்பு	–	சந்த்ரஞானம்
20.	திருமுகம்	–	முகபிம்பம்
21.	நாக்கு	–	ப்ரோத்கீதம்
22.	கன்னங்கள்	–	லலிதம்
23.	நெற்றி	–	சித்தம்
24.	குண்டலம்	–	சந்தானம்
25.	யக்ஞோபவீதம்	–	சர்வோக்தம்
26.	ஆரம்	–	பாரமேசம்
27.	ரத்னாபரணம்	–	கிரணம்
28.	பரிவட்டம்	–	வாதூலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

4. சோமாஸ்கந்தர்

சிவபெருமானின் 64 மூர்த்தங்களில் ஒன்று சோமாஸ்கந்த மூர்த்தி. சிவபெருமான் திருவிளையாடல் புரிவதற்காக எடுத்துக்கொண்ட 32 வடிவங்களில் ஒன்று சோமாஸ்கந்த வடிவம் (சிவ ரஹஸ்ய காண்டம்) ஸ+உமா+ஸ்கந்த, அதாவது உமாவுடனும், ஸ்கந்தனுடனும் இணைந்த இந்த உருவம் சோமாஸ்கந்தர் என்ற பெயர் பெற்றது. வியப்பு என்னவென்றால் வடநாட்டில் எங்கும் இல்லாது தமிழ் நாட்டிற்கே மட்டும் உரித்தான இந்த உருவம் வடமொழிப் பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது. தமிழோடு சமஸ்க்ருதமும் இணைந்து வழக்கில் வந்த காலத்தை இது குறிக்கிறது.

இந்த சோமாஸ்கந்த வடிவத்தில் ஒரே பீடத்தில் சைவத்தின் தெய்வமான சிவபெருமான் வலதுபுறம் வலது காலை தொங்கவிட்டு இடது காலை மடித்து அமர்ந்திருப்பார். உலக அன்னை உமாதேவியார் இடதுபுறம் இடதுபுற காலை தொங்கவிட்டு வலது காலை மடித்து அமர்ந்திருப்பார். இவ்விருவருக்கும் இடையில் தமிழ்க்கடவுளாம் குமரன் எனப்படும் ஸ்கந்தர் நின்று கொண்டிருப்பார்.

இதற்கு முன் இத்தகைய உருவம் இல்லாத நிலையில் முதன்முதலாக இது மஹாவிஷ்ணுவின் இதயக்கமலத்தில் த்யானத்தின்போது மலர்ந்தது. மகப்பேறு வேண்டி மஹாவிஷ்ணு சிவபெருமானைக் குறித்து தியானம் செய்ய "காமன்" என்ற ஆண்மகன் பிறப்பான் என்ற வரத்தினைப் பெற்றார். ஆயினும் தன்னைப் பொருட்படுத்தாது திருமால் பெற்ற இந்த வரத்தினால் அவர் மீது சினம் கொண்டு உமாதேவி அவ்வாறு சிவன் அருளால் பிறக்கும் உன் மகன் அந்த சிவனின் நெற்றிக்கண்ணுக்கே இரையாவான் என சபித்தாள்.

தவற்றை உணர்ந்து வருந்திய திருமால் மீண்டும் சிவனையும், பார்வதிதேவியையும் சேர்த்து மகப்பேற்றிற்காக நீண்ட த்யானம் மேற்கொண்டார். அவரது இதயத்தில் பிள்ளைப்பேற்றைக் குறிக்கும் குமரனுடன் கூடிய சிவபார்வதி வடிவம் தோன்றியது. இதுதான் சோமாஸ்கந்த வடிவத்தின் முதல்தோற்றம். பார்வதி மனம் அமைதி கொள்ளப்பெற்று தனது முந்தைய சாபத்தை மாற்றியமைத்தாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சோமாஸ்கந்தர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவனால் எரிக்கப்பட்டாலும் உன்மகன் உடலிழந்தாலும் மீண்டும் உயிர் பெற்று பிறப்புத் தொழிலுக்கு உதவியாக இருப்பான் என வரமளித்தாள். ஆகவே தான் காமனுக்கு 'அனங்கன்' என்ற பெயர் வந்தது.

தன் இதயத்தில் தோன்றிய இந்த அற்புத உருவத்தை என்றும் நினைவில் இருக்கும் அளவிற்கு நிலைக்கச் செய்ய இதை வடித்துக் கொடுக்குமாறு திருமால் தேவ சிற்பி விஸ்வகர்மாவிடம் வேண்ட அவரும் இந்த மானசீக உருவத்திற்கு உருவம் வடித்துத் தந்தார். எவ்வித கருவி கொண்டும் செதுக்கப்படாமல் உருவான இந்த மூர்த்தி விடங்கர் என்ற பெயர் பெற்றது. வடமொழியில் ''வி+டங்க'' என்பதற்கு உளிகொண்டு செதுக்கப்படாதது என்றுபொருள். தமிழில் 'விடம் உண்டவர்' என்றும் மிக்க அருளுள்ளவர் என்றும் பொருள்படும்.

முதன்முதலாக சோமாஸ்கந்த மூர்த்தி இவ்வாறு தான் உருவானதாக கமலாலயச்சிறப்பு கூறுகிறது. இம்மையிலும் மறுமையிலும் நன்மைகள் பெற்றுத்தரும் பல சிவவடிவங்கள் இருப்பினும் பிள்ளைப் பேற்றினை வேண்டி வழிபடத்தக்கதாக சோமாஸ்கந்த மூர்த்தி திகழ்கிறது என சிவரஹஸ்ய காண்டத்தில் திருமூலநாயனார் குறிப்பிடுகிறார். குடும்பத்தின் மகிழ்ச்சிக்கும் வம்சத்தின் வளர்ச்சிக்கும் குழந்தைப்பேறு எத்துணை முக்யம் வாய்ந்தது என்பதையே இது காட்டுவதாக திருவாரூர் தலபுராணம் சுட்டிக்காட்டுகிறது. பல்லவமன்னன் ராஜசிம்மனின் மனைவி திருமணமண்டபத்தில் சோமாஸ்கந்தர் ஓவியத்தைக் கண்ணுற்று அதிலுள்ள ஸ்கந்தனைப் போன்ற அழகிய மகவை தனக்கு அருளுமாறு வேண்டிக்கொண்டதாக அவந்தி சுந்தரி கதாசாரம் கூறுகிறது. சோமாஸ்கந்தர் வடிவத்தில் உள்ள சிவன், உமா, ஸ்கந்தன் ஆகியோர் இச்சா சக்தியையும், க்ரியா சக்தியையும், ஞான சக்தியையும் குறிப்பதோடு சத், சித் ஆனந்தம் ஆகியவற்றையும் குறிப்பிடுவதாகவும், சத்வ, ரஜோ, தமஸ் குணங்களைக் குறிப்பதாகவும் குமரகுருபரர் கூறுகிறார். கந்தபுராணம் சிவனை இருள் என்றும் உமாதேவியை பகல் என்றும் கந்தனை இந்த இரண்டும் இணையும் அந்திப்பொழுது என்றும் விவரிக்கிறது. பெரும்பாலும் எல்லா சிவாலயங்களிலும் சோமாஸ்கந்த மூர்த்தி உற்சவ மூர்த்தியாக இருப்பதால் அவருக்கென்று தனிகோஷ்டம் அல்லது மண்டபம் அமைந்திருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சோமாஸ்கந்த வடிவத்தை மூன்று நிலைகளில் காணப்பெறலாம். ஒன்று சிவாலயங்களில் உற்சவ மூர்த்தியாக விளங்கும் சிலை அமைப்பு. இரண்டாவது ஆலய அமைப்பே சோமாஸ்கந்த வடிவத்தில் இருக்கும். உதாரணமாகத் திருக்கருகாவூர் முல்லைவனநாதர் ஆலயத்தில் முல்லைவனநாதருக்கும் கரும்பனையாளம்மை என்ற கர்ப்ப ரக்ஷாம்பிகை சந்நிதிக்கும் நடுவில் சுப்ரமணியர் சந்நிதி இருப்பது சோமாஸ்கந்த நிலையைக் குறிக்கிறது. சோமாஸ்கந்த வடிவில் உள்ள இந்த ஆலயத்தை மூன்றுமுறை வலம் வந்தால் மகப்பேறு வாய்க்க வாய்ப்புண்டு என்று இவ்வாலயக் குறிப்பில் காணலாம். மூன்றாவதாகக் காஞ்சிபுரத்தில் ஊரே சோமாஸ்கந்த அமைப்பில் விளங்குவதைக் காணலாம். ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்திற்கும் காமாட்சி அன்னை ஆலயத்திற்கும் இடையே குமரக்கோட்டத்தில் கந்தப்பெருமான் காட்சிதருகிறார்.

சோமாஸ்கந்தர் என்ற பெயர் சங்க இலக்கியத்தில் இடம் பெறவில்லை. பல்லவர்கள் காலத்தில் (கி.பி. 200) தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள சிவ ஆலயங்களில் கருவறையில் மூல லிங்கத்திற்குப் பின்புறச் சுவரில் சோமாஸ்கந்தர் புடைப்புச் சிற்பத்தைக் காணலாம். ஒன்பதாவது நூற்றாண்டு தொடங்கிச் சோழர் ஆட்சிக்காலத்தில் தான் சோமாஸ்கந்த வெண்கலச் சிலைகள் உருவாகின.

மிகப்பழமையான சோமாஸ்கந்த உலோகச்சிலை திருவாலங்காடு ஆலயத்தில் இருந்தது. அது பத்தாம் நூற்றாண்டு சோழர் காலத்தைச் சேர்ந்ததாக கருதப்படுகிறது. இன்று அது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது.

சோமாஸ்கந்த மூர்த்தங்களின் சில குறிப்புகளை டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் எழுதிய 'திருத்தலங்கள் வரலாறு' என்ற நூலில் காணலாம்.

கீரனூர் சோமாஸ்கந்தர் கையில் சர்ப்பம் உள்ளது.

திருவீழிமிழலை மூலத்யாகர் கையில் சர்ப்பம் உள்ளது.

ராம நந்தீஸ்வரம் சோமாஸ்கந்தரின் அம்பிகை கையில் ரிஷபம் உள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(மதுராந்தகம் - விஜயேஸ்வரர் ஆலயம்) சோமாஸ்கந்தர்

(மஹாபலிபுரம் - ஆதிவராக பெருமாள்) சோமாஸ்கந்தர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

(காஞ்சிபுரம் - கைலாசநாதர் ஆலயம்) சோமாஸ்கந்தர்

(காஞ்சிபுரம் - ஐராவதீஸ்வரர் ஆலயம்) சோமாஸ்கந்தர்

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சோமாஸ்கந்தர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிதம்பரம் நடராஜா, ஆலங்குடி தக்ஷிணாமூர்த்தி, வீழி சக்ரதானம் விண்ணெழுந்தார் ஆகிய இடங்களில் விசேஷ மூர்த்தங்களுக்கு எஜமானத்துவம் என்றால் சோமாஸ்கந்தருக்கு நாயகத்வம். ஸ்தல விசேஷ மூர்த்திகள் உள்ளிருந்தால் சோமாஸ்கந்தர் வெளியே இருக்கலாம், இல்லாவிட்டால் கூடாது.'

அகலிகையின் காரணமாக சாபம் பெற்ற இந்திரன் உடலெல்லாம் கண்ணாகியிருந்த நிலை நீங்கி விமோசனம் பெற்ற கண்ணாயிரம் (கிணார்) என்ற தலத்தில் மூலவரான நேத்ரபுரீஸ்வரர் கருவறையில் லிங்கத்தின் பின்புறச் சுவரில் அற்புத சோமாஸ்கந்தர் விக்ரஹம் செதுக்கப்பட்டுள்ளது. அதில் ஸ்கந்தர் உமையின் மடியில் அமர்ந்திருப்பதாக அமைந்துள்ளது.

திருப்பைஞ்சீலி சுற்றுப்பிரகாரத்தில் உள்ள குடவரைக்கோவிலில் சோமாஸ்கந்தர் ரூபத்தில் சிவன் அம்பாள் இருவருக்கும் இடையே முருகன் அமர்ந்திருக்க, சுவாமியின் பாதத்தின் கீழே குழந்தை வடிவில் எமன் இருப்பது ஒரு சிறப்பான அமைப்பு.

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata



நாகப்பட்டினம் தியாகராஜர் ஆலயம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. விடங்கர்

பிள்ளைப்பேறு வேண்டி திருமால் தியானத்தில் ஆழ்ந்தபோது அவரது இதயக்கமலத்தில் ஒரு உருவம் தோன்றியது. அதுதான் சோமாஸ்கந்த வடிவம். சிவன் ஒருபுறம், உமை மறுபுறம் நடுவில் முருகன் இம்மூவரையும் ஒரே பீடத்தில் கொண்ட அந்த உருவம் எந்த உளி கொண்டும் செதுக்கப்படாமல் வெளிப்பட்டதால் அது விடங்கர் எனப்பெயர் பெற்றது.

'விடங்கம்' என்றால் செதுக்கப்படாதது என்று வடமொழியில் பொருள் தமிழில் விடங்கர் என்பது அழகான வடிவத்தைக் குறிக்க வரும் சொல். விடு+தங்கல் அதாவது பறவைகள் தங்குமிடம் என்றும் பொருள். இங்கு பறவை என்பது ஹம்ஸத்தைக் குறிக்கும்.

இந்தவிடங்கமூர்த்திதெருவில்உலாவரும்போதுஅதன்அழகிலே மாதர்கள் மயங்கிவிடுவார்களாம். ஆகவே தியாகராஜரை ஆரூரன் என்னும் வீதி விடங்கனை என்று அப்பர் குறிப்பிடுகிறார். திருவாரூர் உலாவின் முன்னுரையில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் விடங்கரை முன்னிலும் மும்மடங்கு பின்னழகர் என்று கூறுகிறார்.

காலப்போக்கில் சோமாஸ்கந்த மூர்த்தியை விடங்கர் என்று குறிப்பிடாமல் விலையுயர்ந்த கற்களால் உருவான சிவலிங்கத்தைக் குறிப்பிடும் வழக்கம் வந்தது. ஒவ்வொரு தியாகராஜ மூர்த்தியின் அருகில் வெள்ளிப்பேழையில் பாதுகாக்கப்பட்டுவரும் சிவலிங்க வடிவத்தை விடங்கர் என்று கொண்டாடுகிறோம்.

மஹாவிஷ்ணுவின் மனதில் உதித்த சோமாஸ்கந்த உருவத்தை வடித்துக் கொடுக்குமாறு தேவசிற்பி விஸ்வகர்மாவிடம் கூற அவர் வடித்துத் தந்த சோமாஸ்கந்த மூர்த்தியை விஷ்ணு ஆராதித்து வந்தார். தேவலோகத்தை காளியன் என்ற அசுரன் பெரிய சேனையுடன் தாக்க வந்தபோது பீதியடைந்த இந்திரன் அந்த ஆராதனாமூர்த்தியை தன் பாதுகாப்பிற்காகத் தருமாறு திருமாலிடம் வேண்டினான். தேவலோகத்தின் நலன்கருதி விஷ்ணு அந்த விக்ரஹத்தை இந்திரனிடம் கொடுத்திருந்தார். அதை வழிபட்டு புது உற்சாகத்துடன் இந்திரன் அசுரர்களை விரட்டியடித்தான். சிறிது காலத்திலேயே வலாசுரன் என்ற வலிமை மிக்க அசுரன் படைஎடுத்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

வந்தான். மனிதனால் மட்டுமே தனக்கு மரணம் நேரிடலாம் என்ற வரம் பெற்றிருந்த அவனை வெல்ல வேறுவழியின்றி இந்திரன் முசுகுந்தனின் உதவியை நாடினான். முசுகுந்தன் முருகப்பெருமானின் சகோதரர்களான நவவீரர்களின் துணை கொண்டு வலாசுரனை வென்று இந்திரனுக்கு உதவினான்.

வலாசுரனைத் தோற்கடித்து இந்திரனுக்கு தேவலோகத்தை மீட்டுத் தந்த சோழ மன்னன் முசுகுந்த சக்ரவர்த்திக்கு இந்திரன் நன்றியுடன் பரிசு அளிக்க விரும்பினான். முருகபக்தனான முசுகுந்தன் அங்கிருந்த சோமாஸ்கந்தர் மூர்த்தியின் அழகில் மயங்கி அதைத் தருமாறு கேட்டான்.

முசுகுந்தன் சோமாஸ்கந்த மூர்த்தியை கேட்டபோது அதைப் பிரிய மனமின்றி, தான் திருமாலிடமிருந்து அதைப் பெற்றதால் அவரது அனுமதியின்றி தர முடியாது என்று தட்டிக் கழித்தான். ஆனால் திருமால் உலக நன்மைகருதி அதை எடுத்துச் செல்ல முசுகுந்தனுக்கு அருள் செய்தார். அப்போதும் இந்திரன் அந்த மூர்த்தியைப் பிரியமாட்டாது அதைப்போல் விஸ்வகர்மாவைக் கொண்டு வேறு ஆறு விக்ரகங்களை உருவாக்கி வைத்தான். முசுகுந்தன் மீண்டும் வந்தபோது நீர் விரும்பியதை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி ஏமாற்ற நினைத்தான். முசுகுந்தன் சிவனை வேண்ட எந்த சிலை மீது வண்டு வந்து அமர்கிறதோ அதுவே மூலமூர்த்தி என முசுகுந்தனுக்கு உணர்த்தினார்.

முசுகுந்தன் உண்மையான விடங்கரை அடையாளம் கண்டுகொண்டு அதைத் தருமாறு வேண்டினான். வேறுவழியின்றி இந்திரன் அந்த ஏழு விக்ரகங்களையும் முசுகுந்தனிடம் ஒப்படைத்தான்.

முசுகுந்தன் கொண்டு வந்த தியாகராஜ விடங்க மூர்த்திகளை ஒவ்வொரு க்ஷேத்திரத்தில் மண்ணின் எடையோடு பிரம்மா நிறுத்துப் பார்த்ததாகவும் திருவாரூர் மண்தான் அந்த மூலவிடங்கரை விட அதிக எடை உள்ளதாக இருந்ததால் அதனை திருவாரூரில் பிரதிஷ்டை செய்ததாக ‘திருவாரூர் உலா’ என்ற நூல் கூறுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதர ஆறு விடங்க விக்ரகங்களை முசுகுந்தன் திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருமறைக்காடு, திருவாய்மூர், திருக்கோளிலி, திருக்காறாயில் ஆகிய ஆறு இடங்களில் பிரதிஷ்டை செய்தான். இந்த ஏழு தலங்களும் சப்தவிடங்க ஸ்தலங்கள் என்று பெயர் பெற்றன.

ஒவ்வொரு தலத்திலும் இந்த விடங்க மூர்த்திக்கு தனிப்பெயரும், தனி நடனமும் அமையப்பெற்றன.

தலம்	விடங்கரின் பெயர்	நடனம்
திருவாரூர்	வீதிவிடங்கர்	அஜபா நடனம்
திருநள்ளாறு	நகவிடங்கர்	உன்மத்தநடனம்
திருவாய்மூர்	நீலவிடங்கர்	கமல நடனம்
திருக்கோளிலி	அவனிவிடங்கர்	பிருங்கநடனம்
திருநாகைக் காரோணம்	சுந்தரவிடங்கர்	பாராவாரதரங்க நடனம்
வேதாரண்யம்	புவனிவிடங்கர்	ஹம்ஸநடனம்
திருக்காறாயில்	ஆதிவிடங்கர்	குக்குடநடனம்

விடங்கரை முசுகுந்தரிடம் ஒப்படைத்த போதிலும் இந்திரனுக்கு அதன் பிரிவு மிகவும் வருத்தியது. எப்படியாவது அதை தேவலோகத்திற்கு எடுத்துச் செல்லக்கருதி திருவாரூரில் ஆலயத்தில் கிழக்கு வாயிலில் ஸ்வாமி வருவதற்கு காத்திருந்ததாகவும், இதை தியாகராஜர் உணர்த்த ஸ்வாமி புறப்பாடு வடகிழக்கு வாசல் வழியாக நடந்ததாகவும் ஆலயக் குறிப்புகளில் இருந்து தெரியவருகிறது. இதை ஒட்டியே பெரிய கிழக்கு கோபுரம் இருந்தும் பக்தர்கள் இன்றும் வடகிழக்கு வாசல் வழியாகவே ஆலயத்திற்குள் நுழைகிறார்கள் என்பதன் உண்மை புரிகிறது.

இந்திரன் ஒருவழியாக சமாதானமடைந்து திருவாரூரில் தினமும் சாயங்கால பூஜையிலும் இதரவிடங்கத்தலங்களில் ஆண்டுக்கு ஒருமுறை இந்திர பூஜையிலும் கலந்துகொள்ளும் நடைமுறை இருந்து வருவதைக் காணலாம். இந்த்ரன் முசுகுந்தன் ஆற்றிய உதவியை மறந்து அவரை ஏமாற்ற நினைத்ததற்குத் தண்டனையாக திருவாரூரில் சண்டாளனாகப் பிறந்து இசைக்கருவிகள் மூலம் தியாகராஜரை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மகிழ்வித்து தன் களங்கம் அகன்றதும் அமரர் உலகம் திரும்பினான் என்று சிவரஹஸ்ய காண்டம் கூறுகிறது.

இதை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் இந்திரனுக்கும், இந்திராணிக்கும் சண்டாள வடிவில் திருமணம் நிகழ்த்தப்படுகிறது. யானைமேல் இந்திரன் சண்டாள வடிவத்தில் வருவதைக் குறிக்க இன்றும் பரம்பரை பரம்பரையாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூத்தமகன் 'யானை ஏறும் பெரும் பறையன்' என்ற பட்டத்துடன் வருடாந்திர திருவிழாவிற்கு முன்பாக ராஜமரியாதையுடன் வெண் கொற்றக்குடையின் கீழ் இசை வாத்யங்கள் முழங்க தியாகராஜ சந்நிதியின் கொடிமரத்தின் பின்புற மண்டபத்தில் அழைத்து வரப்பட்டு ஆதி சண்டிகேஸ்வரர் சந்நிதியில் அவர் மனைவிக்குத் தாலிகட்டும் நிகழ்ச்சி நிறைவேற்றப்படுகிறது. அச்சமயம் அவர் தலையில் தியாகப்பரிவட்டம் கட்டப்படுகிறது. அவருக்கு ஒரு வேஷ்டியும் ஒன்பது கலம் நெல்லும் இதர பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இந்த சண்டாளத்திருமணம் முடிந்த பின்னர் தான் பிரம்மோத்சவம் தொடங்கும்.

விடங்க க்ஷேத்ரங்களில் மற்ற சன்னதிகளை ஆலயம் திறந்திருக்கும் காலத்தில் எப்பொழுது வேண்டுமானால் தரிசிக்கலாம். ஆனால் விடங்கலிங்கத்தை அதற்குரிய அபிஷேக காலங்களில் மட்டுமே தரிசிக்க முடியும்.

விடங்க லிங்கங்கள் விலைமதிப்பற்ற கற்களால் ஆனவை. அவற்றின் மேல் வைக்கப்படும் சந்தனம் பெரும் மருத்துவகுணம் கொண்டதாகும்.

திருப்பைஞ்ஞீலியில் உள்ள சிவனுக்கு ஆரண்ய விடங்கர் என்ற பெயர் உள்ளது. இது திருவானைக்காவின் 7 சப்தஸ்தலங்களில் ஒன்று. இங்கு வசிஷ்டரின் வேண்டுகோளுக்கிணங்க சிவன் ரத்னசபையில் நடனதரிசனம் தந்துள்ளார். முசுகுந்த சோழர் இங்கு வழிபட்டுள்ளார். காவிரிக்கு வடகரையில் சோழநாட்டைக் சேர்ந்த இந்த இறைவனுக்கும் ஆரண்ய விடங்கர் என்ற பெயர் உள்ளது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6. முசுகுந்தன்

முசுகுந்தன் என்ற பெயரில் பாகவத புராணத்தில் ஒரு குறிப்பும் கந்தபுராணத்தில் ஒரு குறிப்பும் இருப்பதைக் காணலாம்.

முருகப்பெருமான் தேவர்களின் சேனைத்தலைவனாக வருவதற்கு முன் இந்திரன் அமிருதக்கலசத்தை அசுரர்களிடமிருந்து மீட்கச்சென்ற காலத்தில் முசுகுந்தன் கண்துஞ்சாமல் தேவலோகத்தைக் காத்துவந்தான். அதற்குப் பதிலாகத் தேவகன்னிகைகளை பூமிக்கு மீட்டு வந்தான். நீண்டகாலம் கண்ணுறங்காமல் தேவலோகத்தைக் காத்ததற்குப் பரிசாக தனக்கு மோட்சம் வேண்டும் என்று தேவர்களைக் கேட்க அதைத் தம்மால் தர இயலாது என்ற தேவர்கள் கூறியதும் தொந்தரவு அற்ற உறக்கம் வேண்டும், எவராவது என்னை உறக்கத்திலிருந்து எழுப்பினால் என் பார்வைபட்டு அவர் சாம்பலாகிவிட வேண்டும் என்ற வரம் வாங்கி பூமியில் ஒரு குகையில் தூங்கலானான்.

கார்க்ய முனிக்குப் பிறந்த காலயவனன் என்ற திராவிட அரசன் ஒரு யவன அரசனால் வளர்க்கப்பட்டான். யாதவர்களால் அவமானப்பட்ட கார்க்யர் தென்கடல் ஓரம் இரும்புத் துகள்களை மட்டுமே உண்டு பன்னிரண்டு ஆண்டுகள் கடும் தவம் புரிந்தார். அவர் வேண்டியபடி யாதவர்களுக்கு எமனாக ஒரு மகன் பிறப்பான் என்று வரம்பெற்றார். அவ்வாறு பிறந்த காலயவனன் துவாரகையின் மன்னன் கிருஷ்ணனை எப்படியாவது தோற்கடிக்க சபதம் எடுத்து பெரும்படையுடன் வந்தான். கிருஷ்ணன் போர்க்களத்தில் சண்டையிட்டு ஜெயிக்க முடியாது என்று உணர்ந்து தேரைவிட்டு வேகமாக நடந்து செல்லலானார். காலயவனும் கிருஷ்ணனைப் பின்தொடர்ந்தான். கிருஷ்ணன் ஒரு இருண்ட குகைக்குள் சென்று ஒளிந்து கொண்டார். பின் தொடர்ந்த காலயவனன் குகையில் நுழைந்து இருளில் யாரோ ஒரு உருவம் படுத்திருப்பதைப் பார்த்து அதைக் கண்ணன் எனக் கருதி காலால் உதைத்து எழுப்பினான். உறக்கத்திலிருந்த முசுகுந்தன் கண்விழித்துப் பார்த்ததுமே காலயவனன் எரிந்து சாம்பலானான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

சிவரஹஸ்ய காண்டத்தின் தேவகாண்டத்தில் முசுகுந்தராஜ சரித்திரம் இடம் பெற்றுள்ளது. அதில் முசுகுந்தரின் வரலாறு பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

இந்த முசுகுந்தன் வானுலகில் ஒரு குரங்காயிருந்து விளையாட்டாக சிவலிங்கத்தின் மேல் வில்வ இலைகளைப் பறித்துப்போட்டதில் மகிழ்ந்த சிவபெருமான் அடுத்த பிறவியில் சோழ அரசனாகப் பிறக்குமாறு வரம் தந்தார். தன் சிவபக்தியை மறவாமலிருக்க தனக்கு குரங்கு முகம் வேண்டும் என்று கேட்டு குரங்கு முகத்துடன் பிறந்தான். ஈட்டி அடையாளத்துடன் குரங்கு முகத்துடன் பிறந்ததால் (முசு+குரங்கு, குந்த–ஈட்டி) முசுகுந்தன் என்ற பெயர் பெற்றான். திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தெய்வானை முருகனின் திருமணத்தில் முசுகுந்தன் கலந்து கொண்டான். அந்த திருமணத்தை திருப்பரங்குன்றத்தில் செய்திட அனைத்து உதவிகளையும் செய்து தந்தவன் முசுகுந்தன். அதனால் அந்த திருமணத்திற்கான முதல் திருமண ஓலையை இந்திரனிடமிருந்து முசுகுந்தன் பெற்றதாக கந்தபுராணம் கூறுகிறது. அப்போது வசிஷ்டர் முசுகுந்தனை கந்த வழிபாட்டில் ஈடுபடுத்தினார். அவரது அறிவுரையின் பேரில் கார்த்திகை ஷஷ்டி விரதங்களைக் கடைப்பிடித்து முருகப்பெருமானின் அருளைப் பெற்றான். முருகனது வீரர்களில் ஒருவனை தனது நாட்டுப் பாதுகாப்பிற்காக அனுப்பி வைக்குமாறு முசுகுந்தன் முருகனை வேண்ட முருகன் தன் நவவீரர்களையும் அவனுக்கு உதவ அனுப்பி வைத்தான். முருகனின் நவவீரர்களும் பூமிக்கு வந்து மானிட வடிவில் மானிட மங்கைகளை மணந்து தங்கினர். இது குறித்து ஈட்டி எழுபதில் ஒட்டக்கூத்தர் பாடியவரிகள் :

முந்தை நோன்பின்முருகவேள்
முசுகுந்தனுக்கொன்பான் குமரரைத் தர வந்த வீரர்
இவ் அகிலம் வென்றிசை தந்தகுந்தம்
இத்தகு செங்குந்தமே

பூமியில் நீர், நெருப்பு, பிரளயம் ஏற்பட்டு சூழ்ந்தபோது முசுகுந்தனும் நவவீரர்களும் தற்காலிகமாக வானுலகத்தில் தஞ்சம் புகுந்தனர். முசுகுந்தன் அங்கு சிவபெருமானை வழிபட்டபோது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவன் முசுகுந்தனை வீரபாகுவின் மகளை மணந்து பூமியில் புதிய வம்சத்தை நிறுவுமாறு கேட்டுக்கொண்டார். முசுகுந்தன் நவவீரர் தலைவர் வீரபாகுவின் மகள் சித்ரவல்லியை மணந்து புதிய வம்சத்தை ஸ்தாபித்தார்.

முதலாம் குலோத்துங்க சோழன் முதலாம் ராஜராஜ சோழனின் மகளை மணந்து சோழவம்சத்தின் புதியதலைமுறையை நிறுவியதற்கும் முசுகுந்தனின் வரலாற்றிற்கும் தொடர்பு இருப்பதாக இதன் மூலம் யூகிக்கப்படுகிறது.

இந்திரலோகம் காளியன் என்ற அசுரத்தலைவனால் தாக்கப்பட்டபோது இந்திரன் விஷ்ணுவிடமிருந்து விடங்கத்தியாகராஜரைப் பெற்று அவரது துணைகொண்டு அசுரப்படையை வென்றான். உடனே அடுத்துப் படை எடுத்து வந்த வலாசுரன் என்பவனை வெல்வதில் சிக்கல் இருந்தது. மானிடன் ஒருவனால் மட்டுமே தன்னை அழிக்க முடியும் என்ற வரம் பெற்ற அந்த அசுரனை அழிக்க இந்திரன் முசுகுந்தனின் உதவியை நாடினான்.

முசுகுந்தன் நவவீரர்களுடனும் தன் படைவீரர்களுடனும் வானுலகம் சென்று வலாசுரனை அழித்து இந்திரனுக்கு வானுலகை மீட்டுத்தந்தான். அதற்குப்பரிசாகத்தான் விஷ்ணுவால் ஆராதிக்கப்பட்டு இந்திரனின் பூஜையில் இருந்த சோமாஸ்கந்த விக்ரகத்தை ஒன்றுக்கு ஏழாகப்பெற்று வந்து சோழ நாட்டில் திருவாரூரில் மூலத்தியாகராஜா சிலையையும் அதைச்சுற்றியுள்ள திருநள்ளாறு, நாகப்பட்டினம், திருக்குவளை, திருவாய்மூர், வேதாரண்யம் திருக்காறாயில் ஆகிய இடங்களில் ஆறு விடங்கர்களையும் பிரதிஷ்டை செய்தான். இது பற்றி ஒட்டக்கூத்தர் பாடுகிறார்.

விண்டு மாா்பத்திடை இருத்தி வேலைக் கௌரி பணி மாற
பண்டு பூசித்திருங்காலை ஆகண்டலன் போய்ப் பாற்கடலின்
வண்டுழாய் மாயனை வணங்கி வானில் பழிச்சும் தியாகரை மேற்
கொண்டு போந்து பாரின் முசுகுந்தற்குதவும் செங்குந்தம்

முசுகுந்த ஸஹஸ்ரநாமத்தில் ஒரு பெயர் 'ஓம் நவவீர சமுபேத முசுகுந்த சுவந்திதாய நம:' என்பது இந்நிகழ்ச்சியைக் குறிக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

முசுகுந்தன் சூரபத்மன் காலத்தில் தமிழ்நாட்டில் ஆட்சி செய்த சோழப் பேரரசன். முந்திய புண்ணிய வசத்தால் மனுவின் குலமாகிய சோழகுலத்தில் உதித்தான் என்றும், கருரைத் தலைநகராகக் கொண்டான் என்றும் கந்தபுராணம் கூறுவதை மிகப் பழங்காலத்தில் சோழர்கள் கருரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதாகவும், பின்னர் திருவாரூர், உறையூர், தஞ்சாவூர் இவற்றைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதாகவும் வரலாறும் புறநானூறு போன்ற இலக்கியங்களும் உறுதிப்படுத்துகின்றன.

முசுகுந்தன் பரம்பரையில் வந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் செங்குந்தர்கள். இந்த செங்குந்தர்கள் நிர்வாகத்திலும் ராணுவ விவகாரங்களிலும் முக்கிய இடம் வகித்தார்கள். இந்த செங்குந்த வகுப்பைச் சேர்ந்தவர் ஒட்டக்கூத்தர் என்ற அரசவைப்புலவர் தொடர்ந்து விக்ரமசோழன், இரண்டாம் குலோந்துங்கன், இரண்டாம் ராஜராஜசோழன் ஆகியோர் அரசவைகளில் அவைப்புலவராக திகழ்ந்தார். இம்மூவரைப் பற்றியும் 'மூவர்உலா' என்ற நூலை இயற்றியவர். அவரது இயற்பெயர் கூத்தன். செங்குந்தர்கள் அவரை அணுகி தம் முன்னோர்களைப் பற்றி ஒரு நூல் இயற்றும்படி வேண்டினர். தன் குடும்பத்தைப் புகழ்ந்து எழுத அவர் மனம் இசையவில்லை. அவர்கள் வற்புறுத்த செங்குந்தர்களாகிய நெசவாளர்கள் தம் வீட்டில் பிறந்த மூத்த பிள்ளைகளின் தலைகளைக் கொடுத்தால் இயற்றுவதாக ஒரு கடினமான நிபந்தனையை விதித்தார். ஆனால் அத்தனை பேர்களின் வீட்டு மூத்தப்பிள்ளைகளின் மண்டைகள் வந்து குவிந்ததைக் கண்டு அவர் வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தார். அந்த மண்டை ஓடுகளை சிம்மாசனமாக அமைத்து அவற்றின் மேல் அமர்ந்து அவர் எழுதிய நூல்தான் ஈட்டி எழுபது. 73 செய்யுட்பத்திகளும் 292 பாக்களும் கொண்ட அந்த நூலில் செங்குந்தர் புகழ் பாடியுள்ளார். பாடி முடித்ததும் சரஸ்வதி தேவியை துதித்தார். அந்தத் தலைகள் யாவும் தத்தம் உடல்களுடன் ஒட்டிக்கொண்டன. அதனால் அவருக்கு ஒட்டக்கூத்தர் என்ற பெயர் வந்தது. ஒட்டம் (பந்தயம்) வைத்துப்பாடுவதில் வல்லவர் என்பதால் ஒட்டக்கூத்தர் என்று அழைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. 'அரும்பைத் தொள்ளாயிரம்' பாடும்போது அதில் வரும் ஒரு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடலை ஒட்டி மற்றொரு பாடலைப் பாடுமாறு விக்கிரம சோழன் கேட்டதாகவும், அதன்படி ஒட்டிப்பாடியதால் ஒட்டக்கூத்தர் என்ற பெயர் பெற்றார் என்கிறார் தமிழ் இலக்கிய வரலாற்று நூலில் திரு. மு. அருணாசலம் என்பவர். ஒட்டக்கூத்தர் தமிழ் இலக்கியத்தின் வால்மீகி என புகழப்படுகிறார். இரண்டாம் ராஜராஜன் இவருக்கு கூத்தனூர் எனப்படும் கிராமத்தை தானமாக வழங்கியதாக வரலாறு கூறுகிறது. அவர் வழிபட்ட சரஸ்வதி ஆலயம் பூந்தோட்டம் என்ற ஊருக்கருகில் கூத்தனூர் என்ற இடத்தில் இன்றும் சிறப்புற்று விளங்குகிறது. பெருந்தொகை என்ற நூலின்படி இந்த நிகழ்ச்சி ஈட்டி எழுபதின் ஒருபாயிரமாக இடம் பெற்றுள்ளது. ஈட்டி எழுபது என்ற இந்த நூலில் தான் முதன்முதலாக தியாகராஜர் வழிபாட்டின் குறிப்பு காணப்படுகிறது. இந்த நூல்கள் கந்தபுராணத்தை அடுத்து முசுகுந்தன் தியாகராஜவிடங்கர் பற்றிய நிகழ்ச்சிகளை நமக்கு அளிக்கின்றன.

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



வேதாரண்யம் தியாகராஜர் ஆலயம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

7. சப்தவிடங்கர்

திருமாலின் இதயத்தில் காட்சியளித்த உருவத்தை விஸ்வகர்மா விடங்கராக சிலைவடித்துக் கொடுத்தான். அதை திருமாலிடமிருந்து பெற்று இந்திரன் பூஜித்து வந்தான். வலாசுரனை அழித்து தேவலோகத்தைக் காத்ததற்கு பிரதியுபகாரமாக முசுகுந்தன் அந்த சிலையைக் கேட்க இந்திரன் அதே விஸ்வகர்மா உதவியுடன் அதேபோன்ற ஆறு விடங்கர்களை உருவாக்கினான். முசுகுந்தன் உண்மையான விடங்கரை இறைவன் அருளால் கண்டு கொள்ளவும் வேறுவழியின்றி ஏழு விடங்கர்களையும் இந்திரன் முசுகுந்தனிடம் ஒப்படைத்தான். முசுகுந்தன் தியாகராஜர் விருப்பப்படியே நவவீரர்கள் துணையுடன் அந்த விடங்கர்களை பூமிக்குக் கொண்டுவந்தான். மூலவிடங்கரை திருவாரூரிலும் மற்ற ஆறுவிடங்கர்களை திருநள்ளாறு, திருநாகைக்காரோணம் (நாகை) திருவாய்மூர், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருக்காறாயில் ஆகிய தலங்களில் பிரதிஷ்டை செய்தான். இவையே சப்தவிடங்க ஸ்தலங்கள் எனப்படும். மீனாட்சிசுந்தரம் பிள்ளை திருவாரூர் உலாவிலிருந்து எடுத்த பின்வரும் குறிப்பிலிருந்து இவை தெரியவந்தன.

சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில் பேரான
ஒத்த திருவாய்மூர் உவந்த திருக்கோளிலி
சத்த விடங்கத்தலம்.

திருவாரூர் :

சப்த விடங்கத் தலங்களில் முதன்மையானதும் க்ஷேத்திரமானதும் ஆன இத்தலம் சோழ மன்னர்கள் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து இடங்களில் ஒன்று. பிருத்வி தலம் ஆன இது மூவராலும் பாடல் பெற்றது. இதற்குள் அமைந்துள்ள இரண்டு இறைவர்கள் பெயரில் பாடல்கள் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. 62 நாயன்மார்களைத் தொகைப்படுத்தி முதல்முதல் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் திருத்தொண்டர்தொகை இயற்றியது இங்குள்ள தேவாசிரியமண்டபத்தில்தான். இந்த க்ஷேத்திரத்துடன் தொடர்புள்ளவர்களில் சுந்தரர், நமிநந்தியடிகள், தண்டியடிகள், சேரமான் பெருமாள், சோமாசி மாறனார், கழற்சிங்க நாயனார், அரசவைப்புலவர் ஒட்டக்கூத்தர், சங்கீத – மும்மணிகளில் ஒருவரான முத்துசாமி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

தீட்சிதர், விறன் மீண்டார். மறைஞானசம்பந்தர், சம்பந்தமுனிவர், எல்லப்பநாயனார், குமரகுருபரர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். திருமுறைகளை வகுக்க உதவிய அபயகுலசேகர சோழரும் அநபாய சோழரும் ஆண்ட பதி.

இது ஒரு ஸ்ரீவித்யா க்ஷேத்ரமாயும் விளங்கியது. இங்குள்ள மூலவர் வன்மீகநாதர் ஆயினும் இங்கு அனைத்து சிறப்புகளும் தியாகராஜருக்கே. இங்கு முசுகுந்த சக்ரவர்த்தியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தியாகராஜவிடங்கர் வீதிவிடங்கர் எனப்போற்றப்படுபவர். இவரது நடனம் அஜபா நடனம் அல்லது ஹம்ஸ நடனம் எனப்படும் இந்த தியாகராஜர் அரசராக இருந்து ஆட்சி செய்ததோடு, சுந்தரர் நண்பர் என்ற முறையில் பரவை நாச்சியாரிடம் தூதுபோனார். மாகாளத்தில் சோமயாசி நாயனாரின் யாகத்தில் கலந்து கொள்ள புலையன் வடிவில் சென்றார். இங்கு தியாகராஜர் வருவதற்கு முன் ஹாடகேஸ்வரர் வழிபாடு இருந்தது. அங்கு பூமிக்கடியில் நாகப்புற்று இருப்பதாகவும் ஆகவே மூலவர் புற்றிடங்கொண்டவர் என்ற வடிவில் தனி மூலவராக விளங்குவதாகவும் வரலாறு கூறுகிறது. இக்கோயில் பூங்கோயில் என்றும் இதன் தீர்த்தம் கமலாலயம் என்றும் தேர் ஆழித்தேர் என்றும் கொண்டாடப்படுகிறது. தலவிருட்சம் பாதிரி.

இங்கு நித்ய பிரதோஷம் பிரதிதினம் மாலையில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இங்குள்ள விடங்க லிங்கத்திற்கு தினமும் 3 முறை அபிஷேகம் நடைபெறுகிறது. சோமாஸ்கந்தர் வருடத்தில் ஆறு அபிஷேகங்கள் கண்டருளுகிறார். இவருடைய முகம் தவிர மற்ற பகுதிகள் மலர்களால் மறைக்கப்பட்டிருக்கும் இவரது மேனியில் யந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. மார்கழி திருவிழாவின் போது தக்ஷிண பாதத்தையும் பங்குனி உத்திரத்தின் போது உத்தர பாதத்தையும் தரிசிக்கலாம். மற்ற நாட்களில திருவாரூரில் முகதரிசனத்தையும் அருகில் உள்ள விளமல் என்ற க்ஷேத்திரத்தில் பாத தரிசனத்தையும் பெறலாம்.

இங்கு வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழா 51 நாட்கள் நடைபெறும் (வடமொழியில் உள்ள 51 அட்சரங்களைக் குறிப்பது). இதில் 10 நாட்கள் பிடாரியம்மன் வழிபாட்டுடன் தொடர்ந்து 5 நாட்கள் ஐயனார் வழிபாடும் எஞ்சிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

36 நாட்கள் வன்மிகநாதருக்கும், தியாகராஜருக்கும் விழா நடைபெறும். பங்குனி உத்திரத்தைப் பற்றி சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தியாகராஜாவின் அடியார்கள் 12,000 பேர் என்றும் பக்கத்துக்கு 2,000 என்று ஆறு பக்கத்திலும் அவர்களால் தேர் இழுக்கப்படுகிறது. இந்தத் தேர் மேருமலையை குறிப்பதாகவும் நான்கு குதிரைகள் நான்கு வேதங்கள் எனவும், தேரோட்டி பிரம்மாவாகவும், அதைத் தாங்கும் தூண்கள் 64ம் அறுபத்து நான்கு கலைகளையும், ஆறு சக்கரங்கள் ஆறு தத்துவங்களை குறிப்பதாகவும் முசுகுந்த ஸஹஸ்ரநாமத்தில் விளக்கப்பட்டுள்ளது. கௌசிக, பரத்வாஜ, கௌதம, அகஸ்திய, துர்வாச முனிவர்களிடமிருந்து பரம்பரையாக வந்த ஆகம தீட்சை பெற்ற ப்ரம்மராயர்கள் மற்றும் நாயனார் மட்டுமே இங்கு குருக்கள் பணியில் இருக்கலாம். அதிலும் நாயனார் மட்டுமே தியாகராஜர் பூஜை செய்ய முடியும். மற்றவர்கள் அவர்களுக்கு உதவியாக இருப்பார்கள். தற்போது ஐந்து ப்ரம்மராயர்களும் 4 நாயனார் குடும்பங்கள் மட்டுமே உள்ளதாக அறியப்படுகிறது.

பரம்பரையாக யானை ஏறும் பெரும்பறையன் என்ற ஒரு குடும்பத்தின் மூத்த மகனுக்கு யானைமேல் கொண்டு வந்து திருமணம் நடத்தியபிறகே பங்குனித் திருவிழா தொடங்கும். திருவாரூரில் தியாகராஜர் நித்ய வழிபாடு ஆறுகால பூஜை மூலம் நடைபெறுகிறது. திருவனந்தலின் போது தியாகராஜரின் திருப்பாதம் நீலோத்பலாம்பிகை சன்னதியிலிருந்து கொண்டு வரப்பட்டு பால் நைவேத்யம் நடைபெறுகிறது. தீபாராதனையும் நடைபெறும். பின்னர் பால் பிரசாதம் வழங்கப்படும். காலை சந்தியில் விடங்கருக்கு அபிஷேகமும் இரண்டு முக்கிய சன்னதிகளில் நைவேத்யமும் வழங்கப்படுகிறது. 12 மணிக்கு மரகத விடங்கருக்கு அபிஷேகம் தியாகராஜருக்கு புனுகு சாத்தப்படும், மாலை திருவந்திக்காப்பு, இக்கோயிலின் சிறப்பு நிகழ்ச்சி. சுத்தமத்தளம், பாரிநயனம், பஞ்சமுகவாத்யம் இவற்றின் இசையுடன் பிரதோஷ பூஜை நிகழ்த்தப்படும். இரண்டாம் காலம் மரகத விடங்கருக்கு அபிஷேகம் அர்த்தஜாமத்தின்போது சொக்கநாதர் (தியாகராஜர் வெள்ளிப்பாதம்) பல்லக்கில் பள்ளியறைக்கு கொண்டு வரப்பட்டு ஊஞ்சலாடும் நிகழ்ச்சிக்கு பிறகு கோயில் கதவுகள் மூடப்படும். இந்த ஆலயத்தில் ஆகம முறைப்படி பூஜைகள் நிகழ்த்தப்படுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருநாகைக்காரோணம் :

நாகப்பட்டினம் என்ற கடலோரப்பட்டினத்தைக் குறிக்கும் இங்கிருந்து திருமங்கை ஆழ்வார் ஒரு முழு புத்தரின் தங்க விக்ரஹத்தை எடுத்துச் சென்று உருக்கியதாகக் கூறப்படுகிறது. இங்கு புத்த மடாலயம் இருந்தது. அதற்கு சைலேந்திரர்களும் கடார அரசர்களும் ஆதரவு தந்தனர். அதிபத்த நாயனாருடன் தொடர்புள்ள தலம். சுந்தரர் பாடல் பெற்ற தலம். பாசுபதர்களால் மிகவும் விரும்பப்பட்ட காயா ரோகணமூர்த்தி தான் இங்கு பிரதான தெய்வம். ஒரு காலத்தில் நாக வழிபாடு பிரபலமாக இருந்ததால் ஊருக்கு நாகப்பட்டினம் என்று பெயர் வந்தது. இங்குள்ள விநாயகரும் நாகாபரணத்துடன் காணப்படுகிறார். இங்குள்ள சோமாஸ்கந்தருக்கு சுந்தரவிடங்கர் என்று பெயர். செந்நிற மாணிக்கக்கல்லாலான விடங்கலிங்கம் இங்கு உள்ளது. இங்குள்ள அம்பிகை நீலாயதாட்சி மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி போல மிக சக்தி வாய்ந்த அம்மன்.

காரோண ஈஸ்வரன் நாகையிலும் திருமறைக்காடு, திருவாய்மூர், கீழ்வேளூர், திருஒற்றியூர் ஆகிய இடங்களில் வெளிப்பட்டதாக அப்பர் கூறுகிறார். இங்குள்ள விடங்கரின் தனிநடனம் பாராவாரதரங்க நடனம்.

இங்கு கருவறைக்கு இணையாகத் தெற்கில் தியாகராஜரின் சன்னதி அமைந்துள்ளது. இதில் பெரிய மேடை மீது முத்துவிதானத்தின் கீழ் தியாகராஜர் அழகிய சிம்மாசனத்தில் சுந்தர விடங்கர் என்ற பெயரில் எழுந்தருளியுள்ளார். இவருக்கு முன்புறத்தில் இரண்டு வீர கட்கங்கள் வைக்கப்பட்டுள்ளன. தியாகராஜருக்கு முன்புறம் மகா மண்டபத்தில் உலோகத்திலான நின்ற நிலையிலுள்ள ரிஷபமும் அவருக்குப் பின்புறம் பரவை நாச்சியாருடன் இணைந்த சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் எழுந்தருளியுள்ளனர்.

இங்குள்ள தியாகராஜருக்கு ஆண்டிற்கு ஆறுகால அபிஷேகத்துடன் கிரகண புண்யகால அபிஷேகங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. சப்த விடங்கதலங்களில் அமைந்துள்ள தியாகராஜர் சந்நிதிகளில் மிக்க பெரிய சன்னதி இது.

முசுகுந்தன் இங்கு வழிபட்டுத் தனது பிரம்மஹத்தி தோஷத்தையும் போக்கிக் கொண்டான் என்று இவ்வூர் தல புராணம் கூறுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுந்தரவிடங்கரை ஓராண்டு காலம் நினைத்து தொழுவார்க்கு பிள்ளை பேறுகிட்டும் என்று நம்பப்படுகிறது.

திருக்காறாயில் :

திருவாரூரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ள சிறிய கிராமம். காலாகருவனம், தேவதாருவனம், பனஸாரண்யம் என்று அழைக்கப்பட்டது. இங்குள்ள தியாகராஜர் ஆதிவிடங்கர் அவரது நடனம் குக்குட (கோழி) நடனம். இவ்வூரில் ஆதிவிடங்கர் கால்வாய் இருந்ததாக கல்வெட்டு கூறுகிறது. தலபுராணத்திலிருந்து இந்த ஊர் கபாலிகர்களின் கேந்திரமாக இருந்தது என்று தெரிகிறது. இங்குள்ள கண்ணாயிரநாதர் கருவறைக்கு இணையாக உள்ள சந்நதியுள்ள விமானத்துடன் கூடிய உயர்ந்த மேடை மீது சிம்மாசனத்தில் தியாகராஜர் எழுந்தருளியுள்ளார். முன்புறம் வீரவெண்டயங்கள் காணப்படுகின்றன. தியாகராஜருக்குரிய ஆறு அபிஷேகங்கள், கிரகண புண்யகால அபிஷேகங்கள் யாவும் சிறப்பாக நடைபெறுகின்றன. இவ்வூர் தலபுராணத்தில் முசுகுந்தன் தியாகராஜரை இந்த தலத்தில் பிரதிஷ்டை செய்தது, அவருடைய சிங்காதனச் சிறப்பு அவருக்குச் செய்ய வேண்டிய அபிஷேகமுறை, தியாகராஜ ரகசியம் ஆகியவை தனித்தனி சருக்கங்களால் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. தியாகராஜருக்கு அணிவிக்கப்படும் தியாகப்பரிவட்டம் என்ற துணிகளைப் பற்றிக் கூறும்போது சதுரவடிவமான பூமி தத்துவ ஆடை ஐந்தும், முக்கோண வடிவமான அக்னி தத்துவ ஆடை மூன்றும் ஆறுகோண வடிவாயுள்ள வாயுதத்துவ ஆடை மூன்றும் ஆகாச தத்துவ ஆடை ஆறும் ஆக இருபத்தியொரு ஆடைகளை அணிவிக்க வேண்டும் என்று குறித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள ஆதிவிடங்கர் வெள்ளை செவ்வந்தி மலர்களை சிறப்பாக சூடுகிறார் என்றும் இந்த நூல் கூறுகிறது.

தியாகராஜரின் சிம்மாசனம் பற்றி கூறும்போது அது நல்ல சந்தன மரத்தால் செய்யப்பட்டு தங்கத்தகடுகளால் கவசமிடப்பட வேண்டும் என்றும் இதன் நான்கு கால்களும் நான்கு வலிய சிங்கங்களால் தாங்கப்படவேண்டும் என்றும், இதன் எட்டுத்திக்கிலும் அஷ்டதிக் பாலகர்களின் உருவங்கள் அமையவேண்டும் என்றும் கூறுகிறது. நான்கு பக்கமும் கற்பக விருட்சம் காமதேனு இடபங்கள் பொறிக்கப்பட்டிருக்க

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேண்டும். அதன்மீது ஸ்ரீசக்ரம் அமைந்திருக்க அதன் நாற்புறமும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் மஹேசன் முதலிய தேவர்களின் உருவங்கள் அமைந்திருக்க வேண்டும். இது பிருத்வி ப்ரஸ்தாரத்தின் வடிவமாகும். இதன்மீது அமர்த்தியே தியாகராஜரை பூஜிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் தான் திருவாரூர் தியாகராஜர் சிம்மாசனம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமறைக்காடு :

திருமறைக்காடு இன்று வேதாரண்யம் என்று அழைக்கப்படுகிறது. திருவாரூருக்கு தெற்கே 60 கி.மீ. தூரத்தில் வங்காளக்குடாக்கரையில் உள்ளது. வேதங்களால் மூடப்பட்ட இக்கோயில் கதவுகளை அப்பரும், சம்பந்தரும் தம் இனிய தமிழ் பாக்களை கொண்டு திறந்து மூடினார். வேதங்களுக்கு ஒப்பானவை தேவாரப்பாடல்கள் என்பதை இது நிரூபித்தது. திருவாரூரில் இருப்பது போலவே இந்த தியாகராஜ சந்நிதியிலும் சுந்தரமூர்த்தி மற்றும் பரவைநாச்சியார் விக்ரகங்கள் அமைக்கப்பட்டு வழிபடப்படுகின்றன. இங்குள்ள இறைவன் மீது சம்பந்தரும், அப்பரும் இணைந்து பத்து பாக்களை பாடியுள்ளனர். இங்கு பல சோழ, பாண்டிய, மராட்டிய கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இங்கு முக்கிய மூர்த்தி மறைக்காட்டீஸ்வரர். இங்குள்ள விடங்கர் புவனிவிடங்கர் இந்த தலம் சுந்தரபீடம் என்று புகழ்பெற்ற ஒரு சக்திபீடம், பச்சைமரகத விடங்க லிங்கம் இங்கே உள்ளது. வேதகாலத்திற்கு முந்தியதாகக் கருதப்படும் இது கோடிக்கரை அருகில் உள்ளது. விடங்கர் ஹம்ஸ நடனம் ஆடிய இடம்.

தியாகராஜருக்குரிய ஆறு அபிஷேகங்களும் கிரகண புண்யகால அபிஷேகங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. இவருடைய சந்நிதிக்கு நேர் எதிரில் நின்ற ரிஷபம் உள்ளது. அதற்குப் பின்னணியில் அமைந்த விமானத்தில் இவரைத் தொழுது நிற்பவராக சுந்தரமூர்த்தி சுவாமிகள் உள்ளார். திருவாரூரில் நடப்பது போலவே பெருந்திருவிழாவில் சந்திர சேகரருக்குப் பட்டம் கட்டும் பட்டோற்சவம் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

திருநள்ளாறு :

புதுவைப் பகுதியில் காரைக்காலை அடுத்து உள்ள ஊர். பிரம்மா, சரஸ்வதி, நளன் ஆகியோர் பூஜித்த இறைவன். தர்ப்பை வனத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இருந்ததற்கு அடையாளமாக மூலலிங்கத்தில் தர்ப்பைக்கோடு தெரிகிறது. மூலவருக்கு எதிரில் சற்று விலகி இருக்கும் பலிபீடம் தவறிழைத்த கணக்கன் மீது மழுவை எறியும் போது ஒதுங்கியது. இங்குள்ள விடங்கர் நகவிடங்கர். இவரது நடனம் உன்மத்த நடனம். சைவ சமயத்தின் பெருமையை நிலைநாட்டிய பச்சைப் பதிகத்தின் போகமார்த்த பூண்முலையம்மை (பிராணாம்பிகா) இங்குள்ள மூலசக்தி. இறைவன் தர்ப்பாரண்யேஸ்வரர் இங்கு சனிபகவானே ப்ராதான்யம் பெற்றுள்ளார். நளனுக்கு முழு விமோசனம் தந்த சனிபகவான் பிராகாரத்தில் வாயிலிலே தனிக்கோஷ்டத்தில் சுவாமிக்கும் அம்பாளுக்கும் இடையில் காட்சியளிக்கிறார். இங்குள்ள மரகத விடங்கலிங்கம் மிகப் பெரியது.

திருவாய்மூர் :

இறைவனின் ஆணைப்படி அப்பர் இங்கு வேதாரண்யத்திலிருந்து வந்து வழிபட்டார். சம்பந்தரும் பின்தொடர்ந்தார். இங்குள்ள விடங்கர் நீல விடங்கர், நடனம் கமல நடனம், இங்குள்ள நடனமூர்த்திகளை வட்டணையாடல் உடையார் என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இங்குள்ள சோமாஸ்கந்தர் சோழக்கலையின் ஒரு சிறந்த படைப்பு சமணமதம் ஓங்கியிருந்த காலத்தில் இறைவனே சம்பந்தர் கனவில் வந்து சைவநெறியைப் பரப்புமாறு ஆணையிட்டார். ஒரே பிரகாரம் கொண்ட இக்கோயில் கருவறைக்கு இணையாக தெற்குப் பிரகாரத்தில் தியாகராஜரின் மண்டபம் உள்ளது. இதில் அழகிய பெரிய மஞ்சத்தினுள் அமைந்த சிம்மாசனத்தில் நீலவிடங்கர் கொலுவிருக்கிறார். இங்கே தினமும் மாலையில் சிறப்பு வழிபாடும் அவ்வேளையில் வடையும் புட்டும் நிவேதனம் செய்யப்படுகின்றன. இவரது கோயில் பொற்கோயில் என்று அழைக்கப்படுகிறது.

திருக்கோளிலி :

திருக்குவளை என்று அழைக்கப்படும் இத்தலம் திருவாய்மூருக்கு 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. தருமபுர ஆதினத்திற்கு உட்பட்ட இந்த ஆலயத்தில் அவனிவிடங்கர் பிருங்கி நடனக்காட்சி தருபவர். சுந்தரர் தன் மனைவி பரவை நாச்சியாரின் ஜீவனத்திற்காக நெல் மூட்டைகளைப் பெற்று திருவாரூருக்கு கொண்டு செல்ல பூதகணங்களை அனுப்புமாறு செய்தவர். வசந்த உத்ஸவத்தில் முசுகுந்தனை கொண்டாடும் மரபு இங்கு காணக்கிடக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

இங்கு ஆலயத்தின் வாயிலில் பிரம்ம தீர்த்தம் உள்ளது. பிரம்மன் வெண்மணல் கொண்டு சிவலிங்கம் செய்து வழிபட்டுப்பேறு பெற்ற இடம். சுவாமி பிரம்மபுரீஸ்வரர் என்றும் அம்பிகை வண்டார் பூங்குழலி என்றும் அழைக்கப்படுகிறார். கருவறைக்கு இணையாகத் தென்பகுதியில் மகாமண்டபம், திருவோலக்க மண்டபத்துடன் கூடிய தியாகராஜ சபை உள்ளது. தியாகராஜர் பெரிய விதானத்தின் கீழ் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார். முன்புறம் இரண்டு வீரகட்கங்கள் உள்ளன. மகா மண்டபத்தில் உலோகத்திலான நிற்கும் ரிஷபம் உள்ளது. எதிரே சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் பரவைநாச்சியாருடன் எழுந்தருளியுள்ளார். மகாமண்டபத்தின் முகப்பின் மீது பள்ளி கொண்டுள்ள திருமால் தனது மார்பில் தியாகராஜரை வைத்துப் பூஜிக்கும் காட்சி சுதைச் சிற்பமாக இடம் பெற்றுள்ளது. இந்த அவனியை தான் இருந்த இடத்தில் இருந்தே ஆட்டுவதால் அவனிவிடங்கர் எனப் பெயர்பெற்றதாக கூறுவர் ‘ஊழிப்பரன்’ என்றும் ‘செல்வத்தியாகேசர்’ என்றும் இவரைக் குறிப்பர். ‘தேவாரத்துள்’ விண்ணுளோர் தொழுதேத்தும் விளக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். இக்கோயிலில் முப்பது வட்டத்துக்காணி உடையார் என்ற சிவ பிராமணர்கள் இருந்ததாகவும் திருவாதிரை நாள் விழா கொண்டாட சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 18வது ஆட்சியாண்டில் இவர்களிடம் 800 பொற்காசு கொடுத்ததாகவும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இங்கு முசுகுந்தார்ச்சனை சிறப்பாக நடைபெறுகிறது. மாசி மகநாளில் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்கு நெல் அள்ளித்தரும் விழா மூன்று நாட்கள் நடைபெறுகிறது. அப்போது பஞ்சமூர்த்திகள் குண்டையூருக்குச் சென்று விழாக் காண்கின்றனர்.

மார்கழியில் தியாகராஜர் வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளி பாத தரிசனம் அளிக்கிறார்.

கோள் (குற்றங்கள்) தன்மையை நீக்கி இறைவன் அன்பர்களுக்கு அருள் பாலிப்பதால் ‘கோளிலி’ எனப் பெயர் வந்தது. இறைவன் நவகோள்களாகிய நவக்கிரகங்களின் குற்றங்களை நீக்கி அருள்வதால் கோளிலி எனப்பட்டது என்றும் கூறுவர்.

இந்த அனைத்து விடங்க தலங்களுமே பாடல் பெற்றவை. இவற்றில் எல்லாம் இந்திரன் தியாகராஜர் மற்றும் விடங்கரை வழிபாடுகள் செய்வதாக ஐதீகம். ஏறக்குறைய இவையாவும் சீராக அமைந்துள்ளன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சப்தவிடங்க தலங்கள்

எண்	தலம்	ஸ்வாமி	அம்மன்	விடங்கர்	நடனம்	பாடல்
1.	திருவாரூர்	வன்மீகநாதர்	கமலாம்பிகா	வீதிவிடங்கர்	அஜபா (ஹம்ஸ)	மூவர்
2.	திருநள்ளாறு	தர்ப்பாரண் யேஸ்வரர்	ப்ராணாம்பிகை	நக விடங்கர் (நாகவிடங்கர் உ.வே.சு)	உன்மத்த	மூவர், அருணகிரியார்
3.	திருவாய்மூர்	வாய்மூர் நாதர்	க்ஷீரோபவசனி	நீல விடங்கர்	கமல	அப்பர், சம்பந்தர்
4.	திருக்கோளிலி	சுந்தரேஸ்வரர்	மீனாட்சி	அவனிவிடங்கர்	பிருங்க	மூவர்
5.	திருநாகைக் காரோணம்	காயாரோகணே ஸ்வரர்	நீலாயதாட்சி	சுந்தர விடங்கர்	பாராவாரதரங்க	மூவர்
6.	வேதாரண்யம்	வேதாரண்யே ஸ்வரர்	வேதநாயகி	புவனிவிடங்கர்	ஹம்ஸ	மூவர்
7.	திருக்காறாயில்	கண்ணாயிர நாதர்	கைலாச நாயகி	ஆதிவிடங்கர்	குக்குட	அப்பர், சம்பந்தர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

8. தில்லையும் - திருவாரூரும்

புராதன சிவ க்ஷேத்ரங்களில் திருவாரூரும்—தில்லையும் மிக பிரசித்தி பெற்றவை. இவ்விரண்டும் பல வகைகளில் ஒத்தும் வேறுபட்டும் இருப்பது வியப்பளிக்கிறது.

1. தில்லையிலுள்ள திருச்சிற்றம்பலம் என்ற பெயர் எல்லாச் சிவன் கோயில்களிலும் தேவாரப்பாடல்களின் முடிவில் ஒலிக்கப்படும். ஆனால் தில்லையை விடப் பழமையானது என்ற காரணத்தால் திருவாரூரில் மட்டும் அவ்வாறு கூறி முடிப்பதில்லை.

2. தில்லை நடராஜர் கயிலையிலிருந்து தேருடன் இறங்கி கோயில் கொண்டார். ஆரூர் தியாகராஜர் இந்திர லோகத்திலிருந்து முசுகுந்தசக்ரவர்த்தியினால் கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை ஆனார்.

3. தில்லையில் மூலவர் மூலநாதர், ஆனால் ஆலயம் மற்றும் ஊர் நிர்வாகம் எல்லாம் (சிதம்பரம்) நடராஜர் என்ற பெயரில் தான் பிரபலம். திருவாரூரிலும் மூலவர் வன்மீகநாதர், ஆயினும் ஆலயம் நிர்வாகம், திருவிழா புகழ் அனைத்தும் தியாகராஜர் பெயரில் விளங்குகிறது.

4. தில்லை பஞ்சபூதங்களில் ஆகாயக்ஷேத்ரம், மூலவர் கிடையாது. உற்சவரே மூலவராக இருக்கிறார். ஆகாயத் தத்துவம் ரகசியம் என்ற பெயரில் குறிக்கப்படுகிறது. திருவாரூர் பிருத்வீ க்ஷேத்ரம் (ஆர்—பூமி) 17வது நூற்றாண்டில் தில்லை நடராஜர் சிறிதுகாலம் திருவாரூரில் பாதுகாப்பாகத் தங்கியிருந்தார். அதைக் குறிப்பிட்டு தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் 'நீர் எவ்வளவு உயரத்தில் ஆகாயத்தில் இருந்தாலும் பூமிக்கு வந்து தானே ஆக வேண்டும்' என்று வேடிக்கையாக குறிப்பிடுவாராம்.

5. திருவாரூர் பிறக்க முக்தி தரும் தலம். தில்லை இருக்க முக்தி தரும் தலம். ஆகவே தான் சுந்தரர் திருவாரூர் பிறந்தார் எல்லோருக்கும் அடியேன் என்று கூறச் சேக்கிழார் தில்லைவாழ் அந்தணர்கள் அடியார்க்கும் அடியேன் என்று பாடினார்.

6. திருவாரூரில் எமன் சண்டிகேஸ்வரராக இருக்க, தில்லையில் பிரம்மா சண்டிகேஸ்வரராக இருக்கிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

7. திருவாரூரில் தியாகராஜருக்கு வருடம் ஆறுநாட்கள் மட்டுமே அபிஷேகம். தில்லை நடராஜருக்கும் வருடத்தில் ஆறு நாட்கள் அபிஷேகம்.

8. திருவாரூரில் விடங்கருக்கு தினம் அபிஷேகம், தில்லையில் ஸ்படிக லிங்கத்திற்கும், ரத்ன சபாபதிக்கும் தினம் அபிஷேகம்.

9. பஞ்ச நடன சபைகளில் ஒன்று சிதம்பரம். ஏழு விடங்கர்களில் ஒன்று திருவாரூர்.

10. தில்லையில் நந்தி விலகியிருக்கிறார். திருவாரூரில் நந்தி நின்று கொண்டிருக்கிறார்.

11. திருவாரூரில் தினமும் பிரதோஷபூஜை. ஆகவே சாயரட்சை விசேஷம். தில்லையில் அர்த்த ஜாம பூஜை விசேஷம்.

12. பூமியின் மூலாதார சக்ரத்தில் இருப்பது திருவாரூர். விசுத்தி சக்ரத்தில் உள்ளது தில்லை.

13. மிகப்பெரிய ஆழித்தேர் திருவாரூரில்; தில்லையிலும் ஆனி, மார்கழி மாதங்களில் தேர் உற்சவம் மிகப்பிரபலம்.

14. நடராஜரும் நடனமூர்த்தி, அவர் ஆடிக்கொண்டே இருக்கிறார். அவர் ஆட்டம் நின்று விட்டால் உலக இயக்கமே நின்றுவிடும். அவரது சபை சித்சபை (மனம் என்னும் மேடை) பொற்சபை தியாகராஜரும் நடனமூர்த்தி, அவர் உட்கார்ந்த வண்ணம் ஆசீன தாண்டவம் ஆடிக்கொண்டு இருக்கிறார். அவர் ஆடாவிட்டால் சுவாச இயக்கம் நின்று விடும். அவரது சபை ஹ்ருத்சபை (இதயமென்ற மேடை) நடராஜர் தாண்டவம், ஆனந்த தாண்டவம், தியாகராஜ தாண்டவம், அஜபா நடனம். இரண்டுமே அஜபா நடனத்திற்கு எடுத்துக்காட்டுகள்.

15. நடராஜரது நடனம் சிதாகாச உபாசனையைச் சேர்ந்தது. தியாகராஜரது நடனம் தகார வித்தையைச் சேர்ந்தது.

16. தில்லை நடராஜர் திருக்கோயில் 51 ஏக்கர் பரப்பளவு உடையது. தியாகராஜர் திருக்கோயில் 35 ஏக்கர் பரப்புள்ளது.

17. தில்லையின் தலவிருட்சம் தில்லைமரம். தற்போது இது பிச்சாவரம் ஈரப்பகுதிகளில் விளைகிறது. திருவாரூரின் தலவிருட்சம் பாதிரி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

18. தில்லை வரலாறும் திருவாரூர் வரலாறும் ஸ்கந்த புராணத்தில் இடம் பெற்றுள்ளன.

19. திருவாரூர் ஆலயத்தை நிறுவியவர் முசுகுந்த சக்ரவர்த்தி, தில்லை ஆலயத்தை நிறுவியவர் பதஞ்சலி முனிவர்.

20. தில்லையும்–திருவாரூரும் சோழர்கால அரசர்கள் ஆட்சியில் மான்யங்கள் பெற்று சிறப்புற்று விளங்கின.

21. சிவனின் மூர்த்தங்களில் நடராஜருக்கும் சோமாஸ்கந்தருக்கும் தனி சன்னதிகள் எல்லா சிவாலயங்களிலும் இருந்தாலும் நடராஜரை பிரதானமாக கொண்ட தலம் சிதம்பரம். தியாகராஜரைப் பிரதானமாக கொண்ட தலம் திருவாரூர்.

22. நடராஜர் தமிழ்நாட்டிற்கே உரித்தான தெய்வம். தியாகராஜரும் தமிழ்நாட்டுக்கே உரித்தான தெய்வம்.

23. தில்லையில் வேதநெறிப்படி பூஜைகள் நிகழ்கின்றன. திருவாரூரில் ஆகமங்கள் பின்பற்றப்படுகின்றன. தில்லையில் பூஜாவிதிகளை நெறிப்படுத்தியவர் பதஞ்சலி, திருவாரூரில் துர்வாஸர்.

24. தில்லையில் நடராஜருடன் கயிலையிலிருந்து வந்த மூவாயிரம் பேர் வந்து தங்கி தீட்சிதர்கள் என்ற பெயருடன் நடராஜர் ஆலயத்தின் பூஜை மட்டுமின்றி நிர்வாகமும் செய்கிறார்கள். 3000 பேரில் இன்று ஏறக்குறைய 360 குடும்பங்களே உள்ளன என்று தெரிகிறது.

திருவாரூரில் தியாகராஜரை பூஜை செய்யும் உரிமை துர்வாஸர் வழிவந்தவர்களுக்கு மட்டுமே உண்டு. அவர்கள் நயனார் என்று அழைக்கப்படுகிறார்கள். தற்போது நான்கு குடும்பங்கள் தான் உள்ளன.

25. தில்லை சிவகாமி அம்மை ஸ்ரீவித்யா உபாசனையில் முக்கிய இடம் வகிப்பவர். ஆதிசங்கரர் இந்த அம்மனை மனதில் கொண்டே சௌந்தர்ய லஹரியை இயற்றியுள்ளார். திருவாரூர் கமலாம்பிகையும் ஸ்ரீவித்யா உபாஸனையில் முக்கிய இடம் பெறுகிறார். அவர் லலிதா ஸஹஸ்ரநாமத்தின் உருவமாக இருப்பவர். ஸ்ரீவித்யா உபாஸகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முத்துசாமி தீட்சிதர் கமலாம்பிகை மீது ஏராளமான கர்நாடக கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். திருவாரூரில் சிவவிஷ்ணு இணைந்த மஹாவித்யா மஹா சக்தியாக கமலாம்பிகா காட்சியளிக்கிறாள்.

சிவகாமியும் கமலாம்பிகையும் சிவன் கோயில் பிரகாரத்திற்கு வெளியே தனிக்கோயில் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

26. தில்லையில் நால்வரும் நான்கு கோபுர வாசல்கள் வழியாக வந்து வழிபட்டது ஒரு விசேஷம்

திருநாவுக்கரசர்	–	மேற்கு
சுந்தரர்	–	வடக்கு
மாணிக்கவாசகர்	–	கிழக்கு
சம்பந்தர்	–	தெற்கு

திருவாரூரில் நான்கு திசைகளிலும் நான்கு கோபுரங்கள். கிழக்கே ராஜகோபுரம். இது வாஸ்து சாஸ்திரத்தை ஒட்டி நிறுவப்பட்டது.

27. தில்லையில் ஆயிரங்கால் மண்டபம் சிறப்பானது. தில்லையில் உள்ள பஞ்ச சபைகள் ராஜசபை, சித்சபை, கனகசபை, தேவ சபை, நிருத்த சபை, திருவாரூரில் உள்ள மண்டபங்கள் பக்தகாட்சி மண்டபம் / ஊஞ்சல் மண்டபம் / துலாபார மண்டபம் / புராண மண்டபம் / ராஜநாராயண மண்டபம் / சபாபதி மண்டபம் / தேவாசிரிய மண்டபம்.

28. கோயில் என்றால் சிதம்பரத்தைக் குறிக்கும். தியாகராஜர் என்றால் திருவாரூரைக் குறிக்கும்.

29. தில்லையில் ஆயிரங்கால் மண்டபம், திருவாரூரில் தேவாசிரிய மண்டபம் தனிச்சிறப்புடையவை.

30. தில்லையும் திருவாரூரும் நால்வராலும் பாடல் பெற்றவை.

31. தில்லையில் சேக்கிழார் பெரியபுராணம் இயற்ற, திருவாரூரில் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் புராணம் இயற்றினார். தில்லையில் திருவாசகம் முழுவதையும் பாட, அத்துடன் திருக்கோவையார் என்று நடராஜர் மீது பாட அனைத்தையும் நடராஜப்பெருமானே ஓலைச்சுவடியில் எழுதி "மாணிக்கவாசகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உரைக்க திருச்சிற்றம்பலம் உடையார் எழுதியது" என்று முத்திரையிட்டு பஞ்சாட்சரபடியில் வைத்துவிட்டு மறைந்து விட்டார். தேவாரம் எழுதிய மூவர் பாடல்களும் தில்லையில்தான் ஒரு அறையில் பாதுகாக்கப்பட்டு நம்பியாண்டார் நம்பி, திருமறைகண்ட சோழன் முயற்சியால் வெளிக்கொணரப்பட்டன.

32. சுந்தரமூர்த்தி திருவாரூரிலிருந்து நேரே கயிலைபோய் சேர்ந்தார். மாணிக்கவாசகர் "எனது பாடல்களுக்கு விளக்கம் இவர்தான்" என்று கூறி நடராஜர் சிலையில் ஐக்யமாகிவிட்டார்.

33. திருவாரூரில் பாம்புகள் வசிக்கும் புற்றை இடமாகக்கொண்டவர் மூலவரான வன்மீகநாதர். ஆடகேஸ்வரர் ஆலயத்தின் கீழ் நாகப்புற்று இருப்பதாகவும் நாகலோகத்துடன் தொடர்பு இருப்பதாகவும் தெரிகிறது. தில்லையில் நாகர்களின் தலைவன் ஆதிசேஷனே பதஞ்சலியாக அவதரித்து வழிபட்டார். இரண்டு தலங்களுமே நாகர்தொடர்புடையவை.

34. திருவாரூரில் 9 ராஜகோபுரங்கள் இருக்கின்றன. தில்லையில் 9 வாயில்கள் உள்ளன.

35. சிவனுடைய தோழர் சுந்தரர் தொடர்புடையது திருவாரூர். சிவனுடைய சீடர் மாணிக்கவாசகர். பாட்டை சிவனே எழுதிய பெருமை பெற்றது தில்லை.

36. நடராஜர் நந்தனாருக்கு காட்சிதந்து தன்னுடன் ஐக்யமாக்கிக் கொண்டார். உமாபதி சிவம் மூலம் சாம்பான் என்பவனுக்கு முக்தியளித்தார். தியாகராஜர் உத்ஸவம் யானை ஏறும் பெரும்பறையர் திருமணத்தில் தான் தொடங்குகிறது. இந்திரனே சண்டாளனாக வந்து இசைக்கருவிகளை வாசித்தான். தியாகராஜரே புலையனாக சோமயாசி மாறனார் யாகத்திற்கு சென்றார்.

37. சிதம்பர ரஹஸ்யம் என்பதிலும் தியாகராஜர் மேனியிலும் அட்சர பீடத்திலும் யந்திரங்கள் உள்ளன. தந்த்ர வழிபாடு இரு ஆலயங்களிலும் உள்ளது.

38. தில்லையில் நடராஜர் உருவமாகவும், சந்த்ரமௌளீஸ்வர ஸ்படிக லிங்கம் அருஉருவமாகவும் ரஹஸ்யம் அருவமாகவும் மூன்று

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நிலையிலும் காணலாம். திருவாரூரில் தியாகராஜர் உருவமாக உள்ளார். விடங்க லிங்கம் உருவ அருவமாக உள்ளது. ஆடகேஸ்வரர் அருபமாக உள்ளார்.

39. தில்லை திருவாரூர் இரண்டுமே மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் பிரசித்தி பெற்றவை.

40. இரண்டும் விஷ்ணு தொடர்புடையவை. விஷ்ணு நடனம் காண தில்லை வந்து அவரது குறிப்பின் பெயரில் திருவாரூரில் ஹம்ஸ நடனத்தைக் கண்டார். தில்லையில் நடராஜர் சன்னதிக்கு எதிரிலேயே கோவிந்தராஜர் பள்ளி கொண்டுள்ளார். திருவாரூரில் தியாகராஜ சபையின் கதவிலும் சுவரிலும் விஷ்ணுவின் சிற்பம், படம் உள்ளன. உள்ளே கர்ப்பக்கிருஹத்துக்குள் விஷ்ணுவின் சிலை இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது. அந்த அறை சுவர் கொண்டு தடுக்கப்பட்டுள்ளது.

41. குமரகுருபரர் நடராஜர் மீதும், திருவாரூர் தியாகராஜர் மீதும் பாடல்களை இயற்றியுள்ளார்.

42. திருவாரூரில் நவக்கிரஹங்கள் நேர்க்கோட்டில் சுவாமியை நோக்கி உள்ளன. தில்லையில் நவக்கிரஹங்கள் தனித் தனிலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபட்டுள்ளன.

43. திருவாரூரில் ருணவிமோசனர், மாற்றுரைத்த விநாயகர், ராகு காலதுர்க்கை, மூலாதார கணபதி ஆகியவை சிறப்பான சன்னதிகள். தில்லையில் வல்லப கணபதி, அர்த்தஜாம அழகர், புருஷாமிருகம் ஆகியவை சிறப்பு சன்னதிகள்.

44. திருமால் செய்த யாகத் தீயிலிருந்து தியாகராஜரின் திருமேனி வெளிப்பட்டதாக சாத்த நூல்கள் கூறுகின்றன. தில்லையில் பிரம்மன் நிகழ்த்திய வேள்வியிலிருந்து இரத்தின சபாபதி எனும் நடராஜர் தோன்றியதாக சொல்லப்படுகிறது.

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

திருக்காறாயில் தியாகராஜ ஸ்வாமி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

9. திருவாரூர் மகிமை

❖ பஞ்ச பூதங்களில் பூமித் தத்துவத்தைக் குறிக்கும் தலம் (ஆர்–பூமி).

❖ ஆறு ஆதாரங்களைக் குறிக்கும் தலங்களில் திருவாரூர் மூலாதார ஸ்தலம்.

❖ பிறக்க முக்தி தரும் தலம். எமனுக்கு வேலை இல்லை எமசண்டிகேஸ்வரராக உள்ளார். திருவாரூர் பிறந்தார் எல்லோருக்கும் அடியேன் என்கிறது சுந்தரர் தேவாரம்.

❖ சப்தவிடங்க தலங்களில் முதன்மையான தலம்.

❖ தமிழ்நாட்டில் உள்ள தியாகராஜ தலங்களுக்கு முன்னோடியான தலம்

❖ பரப்பளவில் மிகப்பெரிய ஆலயம், 9 ராஜகோபுரம், 80 விமானங்கள், 12 மதில் சுவர்கள், 13 மண்டபங்கள், 15 தீர்த்தங்கள், 3 நந்தவனங்கள், 3 பிரகாரங்கள், 365 நாட்களைக்குறிக்கும் சிற்பங்கள், உட்கோயில்கள் 60, விநாயகர் 84, மொத்தம் 30 ஏக்கர் பரப்பளவு.

❖ ஆரம்பகால சோழ மன்னர்கள் முடிசூட்டிக் கொண்டவிடம்.

❖ மூலவரை விட உற்சவருக்கே புகழ்தரும் தலம், இத்தலம் தியாகராஜ தேவஸ்தானம் என்றே வழங்கப்படுகிறது. எல்லா சிறப்புகளும் தியாகராஜருக்கே.

❖ தினம் இந்திரன் மாலையில் வழிபாடு செய்வதால் இங்கு நித்ய பிரதோஷம் உண்டு. திருவாரூர் சாயரட்சை பூஜைக்கும், சிதம்பரம் அர்த்த ஜாம பூஜைக்கும் பெயர் பெற்றவை.

❖ இங்குள்ள அம்பாள் கமலாம்பாள் படிதாண்டா பத்தினி; வெளியே வருவதில்லை.

❖ ஐந்து பருவ தேவிகளில் கமலாம்பாளும் போற்றப்படுகிறாள்.

குழந்தை	–	காசி	–	விசாலாட்சி
குமரி	–	காஞ்சி	–	காமாட்சி
கன்னி	–	நாகை	–	நீலாயதாட்சி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatt

இளம்பெண்	–	திருவாரூர்	–	கமலாயதாட்சி
மணமானவள்	–	மதுரை	–	மீனாட்சி

❖ மூர்த்தி (தியாகராஜர்) தலம் (பிருத்வி) தீர்த்தம் (கமலாலயம்) பெயர் பெற்றது.

❖ வருடம் ஒரு நாள் தியாகராஜர் சோமயாசி யாகத்திற்காக மாகாளம் போய்வருவார். அன்று கோயில் மூடப்படும்.

❖ யமனை விட நீதியில் சிறந்த மனுநீதி சோழன் ஆண்ட இடம். கன்றின் மேல் தேரேற்றிய தன் மகனின் மீது அரசன் தேரேற்றும் வரலாற்றை சித்தரிக்கும் தங்கத்தேர் இன்றும் காணக்கிடைக்கிறது.

❖ முசுகுந்த சக்ரவர்த்தி தேவலோகத்திலிருந்து கொண்டு வந்த மூலவிடங்கத் தியாகராஜரை பிரதிஷ்டை செய்த இடம்.

❖ சோமாஸ்கந்தர் தியாகராஜர் என்ற பெயரில் ராஜசபையில் வீற்றிருக்கிறார். தியாகராஜருக்கு வருடம் 6 முறை மட்டுமே அபிஷேகம்.

❖ நால்வராலும் பாடல்பெற்ற திருத்தலம்.

❖ மூலவர் புற்றிடம் கொண்ட சுயம்பு லிங்கம்.

❖ தமிழ்நாட்டிலே மிகப்பெரிய ஆழித்தேர் உள்ள தலம், திருவாரூர் தேர் அழகு எனப் பெயர் பெற்றது. முசுகுந்தன் ஒரு பெரிய தேரில் ஏழு தியாகராஜவடிவங்களையும்எழுந்தருளச்செய்துதேவலோகத்திலிருந்து சோழநாட்டுக்கு க் கொண்டுவந்ததை இந்த தேர் நினைவூட்டுகிறது.

❖ தியாகராஜர் அம்மன் முகம் மட்டும் தரிசிக்க முடியும்.

❖ ஜ்வரஹரேஸ்வர் உள்ள தலம்.

❖ நவக்ரஹங்கள் ஒரே நேர்க்கோட்டில் சிவனை நோக்கியுள்ள இடம்.

❖ திருவாரூரில் மட்டும் சிவன் நிகழ்த்திய திருவிளையாடல்கள் 364.

❖ கோயிலுக்குள் சித்திபைரவர், கமலாம்பாள் கோபுரத்தில் காவல் தெய்வமான ஆகாச பைரவர்.

❖ ஆலயத்தில் 8 துர்க்கை கோயில்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

❖ மற்ற ஆலயங்களில் தட்சிணாமூர்த்தியிடம் நான்கு சீடர்கள் உள்ளனர். திருவாரூரில் அம்பிகை பிராகார தட்சிணா மூர்த்தியிடம் ஆறு சீடர்கள் உள்ளனர்.

❖ இங்குள்ள சரஸ்வதியின் கையில் வீணை கிடையாது.

❖ திருவாரூர் மட்டும் 353 பாடல்கள் பெற்றுள்ளது.

❖ லலிதா சஹஸ்ர நாமத்தின் முழு உருவம் இங்குள்ள கமலாம்பிகை இவள் பெயரால் தீர்த்தம் கமலாலயம் என வழங்கப்படுகிறது.

❖ கும்பகோணத்தில் 12 ஆண்டுக்கு ஒருமுறை செய்யும் மகாமக ஸ்நானத்திற்கு கமலாலயத்தில் பங்குனி உத்திரத்தன்று செய்யும் ஸ்நானம் சமம்.

❖ இந்தியாவிலேயே மிகப்பெரிய ஆலயதீர்த்தம் கமலாலயம். அதற்கு நடுவிலும் ஒரு சிவக்ஷேத்ரம் உள்ளது. கமலா லயம் 25 ஏக்கர் பரப்புள்ளது.

❖ சிதம்பரம் போலே திருவாரூர் அஜபா நடனச்சிறப்பு கொண்டது. நடன க்ஷேத்ரங்களில் ஒன்று.

❖ தியாகராஜர் ஆட்சி செய்த தேவாசிரிய மண்டபம் இங்குள்ளது இங்குதான் சிவனடியார்கள் கூடுவர். தேவலோகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட தியாகராஜரை தரிசிப்பதற்காக தேவர்கள் தங்கிய (ஆஸ்ரயித்த) இடம் தேவாசிரிய மண்டபம். தியாகராஜர் அரசனாக ஆண்டபோது இங்கிருந்து தான் ஆணை பிறப்பித்தார்.

❖ சுந்தரருக்காக தியாகராஜர் பரவைநாச்சியார் இல்லத்திற்கு நடந்து தூது சென்ற இடம். பரவை நாச்சியார் மாளிகையும், தூது நடந்துவந்த வீதியும் இன்றும் காணலாம்.

❖ கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் அவதரித்த தலம்.

❖ தமிழ் பக்தி இலக்கியம் பிறந்த இடம்.

❖ 62 நாயன்மார்களைப் பற்றி 63வது நாயனார் சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டர் தொகை என்ற நூலை இயற்றிய இடம்.

❖ சிவன் கோயில்களில் தேவாரம் பாடல்களின் முடிவில் 'திருச்சிற்றம்பலம்' என்று கூறி முடிப்பது வழக்கம். சிதம்பரத்தை விட பழமையானது என்ற காரணத்தால் திருவாரூரில் அவ்வாறு சொல்வது கிடையாது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

❖ கமலமுனி சித்தர்பீடம் ஆலயத்திற்குள் உள்ளது.

❖ சிதம்பரத்தில் நடராஜர் இடது பதம் தூக்கி ஆடிக்கொண்டிருப்பவர். (ஆனந்த தாண்டவம்) திருவாரூரில் தியாகராஜர் அமர்ந்து கொண்டே ஆடிக்கொண்டிருப்பார் (ஆஸீனதாண்டவம்).

❖ சிதம்பரத்தில் ஸ்படிகலிங்கம் இருப்பதுபோல திருவாரூரில் விடங்க லிங்கம் உண்டு. அதற்கு தான் தினம் அபிஷேகம்.

❖ துர்வாசர் பரம்பரையில் வந்த நயனார் எனப்படும் சிவாசாரியார்கள் மட்டுமே தியாகராஜ மேனியை தீண்டும் உரிமை பெற்றவர்கள்.

❖ தியாகராஜர் பால் தீவிரபக்தி கொண்ட கமலை ஞானப்பிரகாசர் அவர்களின் சீடரால் தான் தருமபுரம் ஆதீனம் தோற்றுவிக்கப்பட்டது.

❖ வயது வராத அரசகுமாரன் சார்பாக தியாகராஜர் நாட்டை ஆட்சி செய்த இடம்.

❖ இங்கு தியாகராஜருக்கு எதிராக உள்ள நந்தி நின்று கொண்டிருக்கும் கோலத்தில் காணப்படுகிறார்.

❖ விஷ்ணுவின் தியானத்தில் வந்த சோமாஸ்கந்த மூர்த்தி தான் இங்கு சோமாஸ்கந்தராக எழுந்தருளினார். ஆலய கதவில் விஷ்ணுவின் சிற்பம் இருக்கிறது. ஆனால் கருவறைக்குள் விஷ்ணுவின் சயன கோலம் மூடப்பட்டுள்ளது.

❖ மார்கழி திருவாதிரையன்று தியாகராஜரின் தக்ஷிண பாததரிசனம், பங்குனி உத்திரம் அன்று உத்தர பாத தரிசனம் காணலாம்.

❖ தியாகராஜர் மன்னராக ஆண்டதற்கு அடையாளமாக இன்றும் உள்ளவை.

மணித் தண்டு	செங்கழுநீர்மாலை
ரத்னசிம்மாசனம்	உடைவாள்
பஞ்சமுக வாத்யம்	பாரிநாயனம் (நாதஸ்வரம்)
சுத்தமத்தளம்	ஆழித்தேர்
ஐராவதம் (யானை)	நிற்கும் நந்தி

❖ திருவாரூர் விடங்கர் பெயர் வீதிவிடங்கர். அவர் ஆடும் நடனம் அஜபா நடனம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

❖ திருவாரூருடன் தொடர்பு கொண்ட நாயன்மார்கள்–சுந்தரர்–நமிநந்தியடிகள்–தண்டியடிகள், சேரமான்பெருமாள், சோமாசிமாறனார் கழற்சிங்க நாயனார்.

❖ தஞ்சை பெரியகோவிலுக்கு கலாசார மூலமாக விளங்கியது திருவாரூர் ஆலயம்.

❖ திருவாரூர் பெரிய சமண தலமாக விளங்கியது (13–14 நூற்கண்டு).

❖ 16வது நூற்றாண்டில் ஸ்ரீவித்யா சக்திகேந்திரமாக திருவாரூர் விளங்கியது.

❖ 17வது நூற்றாண்டில் சிதம்பரம் நடராஜர் திருவாரூரில் பாதுகாக்கப்பட்டு வழிபடப்பட்டார்.

❖ ஆடகேஸ்வரம் உட்கோயிலில் ஸ்வாமி அருபமாயிருக்கிறார். அஜபாமந்திரம், குண்டலினியோகம், பயில ஏற்ற இடம், அஜபா ஜபித்து சேர்ந்த நந்தி சாய்ந்து எதிரில் உள்ளார். விஸ்வாமித்திரர் கோபம் தணிந்து லிங்க வடிவில் உள்ளார்.

❖ இசை உலகில் திருவாரூர் தெய்வங்கள் மீது இயற்றப்பட்ட கிருதிகள் மிகப் பிரபலமானவை. தியாகராஜர், முத்துசாமி தீக்ஷிதர், சாமாசாஸ்திரி மற்றும் பலரும் தமிழில் தேவார மூவரும் இயற்றியுள்ள பாடல்கள் தெய்வீக மணம் கமழ்பவை. அவற்றுள் ஷோடச கணபதி கிருதிகள் கமலாம்பா நவாவரணம், நீலோத்பலாம்பா விபக்தி எனப்படும் கௌள ராகத்தில் முடியும் கௌலாந்தக கிருதி என்ற எட்டு ராகங்கள் திருவாரூர் பஞ்சலிங்க கிருதிகள், திருவாரூர் ஆலயத்திலுள்ள நவகிரகங்கள் மீது தீட்சிதர் இயற்றிய நவக்ரஹ க்ருதிகள், தியாகராஜ விபக்திக்ருதிகள் 'வாதாபி கணபதிம்', 'தக்ஷிணா மூர்த்தே' ஸ்ரீதும் துர்கே பூர்ண சந்த்ர பிம்பவதனே என்ற கிருதிகளும் மிக பிரசித்தமானவை.

முத்துசாமி தீக்ஷிதர் க்ருதியில் கமலாம்பிகா பின்வருமாறு வருணிக்கப்படுகிறார்.

நீலோத்பலாம்பிகாயை நமஸ்தே ஜகதம்பிகாயை
மூலாதார க்ஷேத்ரஸ்திதாயை முசுகுந்த வர ப்ரதாயை
மூலமந்த்ராத்மிகாயை மூலாக்ஞாநகர குருகுஹவந்திதாயை

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

10. தியாகராஜ ஸ்வாமி

தமிழ்நாட்டிற்கு மட்டும் உரித்தான ஒரு சைவ மூர்த்தி தியாகராஜர். இவர் சோமாஸ்கந்த வடிவத்தில் இருப்பவர். ஆனால் எல்லா சோமாஸ்கந்த மூர்த்திகளும் தியாகராஜராகக் கருதப்படமாட்டா.

தியாகராஜமூர்த்தி திருவொற்றியூர், திருவான்மியூர், ஆச்சாள்புரம், இடக்கல், திருக்கச்சூர் போன்ற 27 ஆலயங்களில் காணப்பட்டாலும், முசுகுந்த சக்ரவர்த்தியால் பூமிக்குக் கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட சப்தவிடங்க தலங்களில் உள்ள தியாகராஜருக்கு மட்டுமே விடங்கர் என்ற பெயர் உண்டு. தியாகராஜரை சோமாஸ்கந்த சிலை வடிவத்தில் வெளிக்கொணர்ந்த பெருமை பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் ராஜராஜசோழனைச் சாரும். தியாகராஜருக்கென்று தனி கற்கோயில் ஆலய வளாகத்துக்குள் கட்டிய பெருமை முதலாம் ராஜேந்திரனைச்சாரும். அவர் தான் திருவாரூரிலும் திருவொற்றியூரிலும் தியாகராஜர் சந்நிதிகளை நிர்மாணித்தார்.

திருவாரூரில் மூலவர் புற்றிடங்கொண்டான் (வன்மீகநாதர்), திருவொற்றியூரில் மூலவர் புற்றிடங்கொண்டார் (வன்மீகர்) என்ற போதிலும் இங்குள்ள உற்சவ மூர்த்தியான தியாகராஜர் பேரிலேயே இந்த இரு தலங்களும் அழைக்கப்படுகின்றன.

தியாகராஜரைப் பற்றி 72 மேளகர்த்தா ராகங்களை தொகுத்த வேங்கடமஹி என்பவர் இயற்றிய கவிதையில் இவருக்கு தியாகராஜர் என்ற பெயர் வந்ததற்கான காரணத்தைக் கூறுகிறார்.

சதுர்ணாம் புருஷார்த்தானாம் த்யாகம் யஸ்மாத் கரோத்யத:
த்யாகராஜம் இதி க்யாதம் சோமாஸ் கந்தம் உபாஸ்மஹே
நான்கு வித புருஷார்த்தங்களையும் (தர்ம, அர்த்த, காம, மோட்ச)

நிலைபெறச் செய்ய சோமாஸ்கந்தர் செய்த தியாகத்திற்காக அவருக்கு தியாகராஜர் என்ற பெயர் வந்தது.

திருவாரூர் நான்மணி மாலையில் 'இந்த ஆரூரர் வையம் முழுவதையும் விஷ்ணுவுக்குத் தியாகம் செய்தார். நவநிதிகளையும் குபேரனுக்குத் தியாகம் செய்தார். தன்னில் பாதியை உமையவளுக்குத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தியாகம் செய்தார். உலகம் உய்ய தன் அடியார்களுக்கு அனைத்து இன்பத்தையும் தியாகம் செய்தார் என்பதால் தியாகராஜர் என்ற பெயர் இவருக்கு மிகவும் பொருந்தும்' என்கிறார் குமரகுருபரர்.

'அமரர் நாடாளாதே ஆரூராண்ட ஐராவணமே' என்கிறார் அப்பர் ஸ்வாமிகள்.

ஆச்சாள்புரத்தில் 1683ம் ஆண்டில் ஏகோஜியின் மராத்திய கல்வெட்டுகளில் தான் முதன்முதலாக இந்த மூர்த்திக்கு தியாகராஜர் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

தியாகராஜர் மீது அந்த மூர்த்தியை தேவலோகத்திலிருந்து கொண்டு வந்து திருவாரூரில் பிரதிஷ்டை செய்த சோழ சக்ரவர்த்தி முசுகுந்தர் தனது சஹஸ்ரநாமத்தில் பின்வரும் நாமங்களில் தியாகராஜர் தியாகத்தைப் போற்றிக் கூறுகிறார்.

அஞ்ஞான திமிர த்யாக விஞ்ஞானமய வேதனாய நம:
காரணேச பரித்யாக நித்யானந்த நிஜாஸனாய நம:
ஸர்வோபாதி பரித்யாக ஸர்வத்யாக ரமான் விதாய நம:
த்யாக வைபவ ஸம்யுக்த த்யாக த்வஜ விராஜி தாய நம:
வித்வத் ஜன தன த்யாகினே நம:
த்யாகி த்யாக பராயணாய நம:
ஸர்வ பந்த பரித்யாகி ஸர்வஸம் சுத்திகாரகாய நம:
ப்ரம்மாதி காரணத்யாக ராஜராஜ சிகாமணயே நம:
கலிதோஷ பரித்யாக கல்மஷாதி விவர்ஜிதாய நம:
அத்வஷட்க பரித்யாக ராஜமான பதாம்புஜாய நம:
ஷடாதார பரித்யாக பரமானந்த விக்ரஹாய நம:
துஷ்ட தூர பரித்யாக சிஷ்டமார்க ப்ரவர்த்தகாய நம:
அசேஷ துரித த்யாக ப்ரபாமண்டல மத்யகாய நம:
ப்ரபாமண்டல ஸத்யாக ராஜமான தடித்ப்ரபாய நம:
ப்ரமாணீதி ஸத்யாக ப்ரமாணைக சிரோமணயே நம:
காரணேச பரித்யாக கல்பிதாத்ம மஹாக்ருதயே நம:
கலாஷோடச ஸத்யாக நாதாந்த விகிதாக்ருதயே நம:
பஞ்ச மந்த்ர ஷடங்காதி பரித்யாக பதாம்புஜாய நம:
மேதாதி கோன் மனந்தாதி பரித்யாக விராஜிதாய நம:
அசேஷ சார த்யாகினே நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சங்கர சேவகனென்னும் சோழ மன்னன் வேண்டுகோளின்படி ஸ்ரீதியாகேசர் அரசு வடிவந்தாங்கி பல வருடங்கள் ஆட்சி செய்தார். திருவாரூர் தியாகராஜர் வயதுவராத அரசகுமாரன் சார்பாக நாட்டை ஆட்சி செய்திருக்கிறார். இவர் ஆட்சிக்கு துணை செய்வதற்காக நந்திகேஸ்வரர் தர்மநந்தியாக நின்றகோலத்தில் காணப்படுகிறார். தியாகராஜர் மன்னராக ஆண்டதற்கு அடையாளமாகவே இன்றும் அவரது சபையில் மணித்தண்டு, செங்கழுநீர்மாலை, ரத்ன சிம்மாசனம், உடைவாள், பஞ்சமுக வாத்யம், பாரிநாயனம், சுத்த மத்தளம், ஆழித்தேர், ஐராவதம், நிற்கும் நந்தி ஆகியவற்றை காணலாம்.

ஸ்ரீ உ.வே. சாமிநாத ஐயர் தனது உரையில் தியாகராஜரின் அரசருக்குரிய அணிகளை பின்வருமாறு பட்டியலிடுகிறார். இவர் அராக்கச்சையையும், ஆடரவக் கிண்கிணிக் காலையும், தியாக விநோதமென்னும் பரிவட்டத்தையும், உடைவாளையும், உதர பந்தனத்தையும், வீர கண்டயமென்னும் வாளையும், தலைச்சீராவையும் உடையவர். இந்த பரிவட்டம் ஐந்து கோடுகள் உடையதாய் தியாகவன்னமெனவும் இக்காலத்தில் வழங்கும்.

தியாகராஜருக்கு அசைந்தாடிய பெருமான் அடிக்காயிரம் பொன் அளிப்பவர். அந்தியும்–சந்தியும் ஆடுவார். இரத்தினசிங்காதனாதிபதி, இருந்தாடழகர், கம்பிக்காதழகர், கருணாகரத் தொண்டைமான், கனகத்தியாகேசர், கிண்கிணிக்காலழகர், செங்கழு நீர்த்தாமர், செம்பொற்சிங்காதனாதிபதி, செவ்வந்தித்தாமர், செவ்வந்தித் தோட்டழகர், மணித்தண்டில் அசைந்தாடிய பெருமான், முன்னிலும் பின்னழகர், வள்ளல், தியாக சிந்தாமணி, தியாகப் பெருமாள், திருவந்திக்காப்பழகர் வீதி விடங்கப்பெருமான் போன்ற பல பெயர்கள் உள்ளன.

மார்கழி மாதத்திலும் பங்குனி மாதத்திலும் நடைபெறும் திருவிழாக்கள் மிக்க விசேஷமுடையன. மார்கழித் திருவாதிரையும், பங்குனி உத்திரமும் ஸ்ரீதியாகேசருடைய பாத தரிசனத்திற்குரிய விசேஷ காலங்கள். முசுகுந்த சக்கரவர்த்தியால் வைவஸ்வத மன்வந்தரத்தில் செய்விக்கப் பெற்று அக்காலம் தொடங்கி இன்று வரையில் சோழ அரசர்கள் முதலியவர்களால் பரிபாலனம் செய்யப்பெற்று வந்த ஆழித்தேர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தியாகராஜருக்கே உரிய திருத்தேர். 'ஆழித்தேர் வித்தகனை யான் கண்டதாரூரே' என தேவாரத்தால் சிறப்பித்துப் பாராட்டப்பெற்றது.

இது திருவாரூர் சோழ மன்னர்கள் முடிசூட்டு விழாக் கொண்டாடிய ஐந்து நகரங்களுள் ஒன்று. மனுநீதிச் சோழனுடைய நகராக இருந்தது.

திருநாவுக்கரசர் சமண மதத்திலிருந்து சைவராக மாறிய இடமாகிய நல்லூரில் முசுகுந்தர் சோமாஸ்கந்தரை வானுலகிலிருந்து கொண்டு வந்து ஊஞ்சலில் வைத்திருந்ததாகவும், மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்தபோது தேவர்கள் அந்த ஊஞ்சலை ஆட்டி வந்தனர் என்றும், பிறகு தியாகராஜரின் குறிப்பின் பேரில் விடையேறி பழையாறு வந்து சிற்றூரில் நின்று தலையாலங்காட்டில் மறைந்து பெருவேளூரில் தங்கி பட்டீசுரத்தில் ஒரு இரவு தங்கி மணக்கால், புகுந்து தலைச்சாத்தங்குடியின் வீதியில் நடந்து திருவாரூரை அடைந்து அங்கே கோயில் கொண்டார் என திருவாரூர் தியாகராஜர் உலாவிலிருந்து அறியப்படுகிறது.

தியாகராஜ மூர்த்திக்கும் திருமாலுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம். திருப்பாற்கடலில் துயிலும் திருமால் பிள்ளைப்பேறு வேண்டி தியானத்தில் இருந்தபோது தியாகராஜமூர்த்தி அவரது இதயத்தில் தோன்றினார். திருமால் இம்மூர்த்தியை தன் இதய ஸ்தானத்தில் வைத்துப் பூசித்தார். மூச்சு இழுத்தல் விடுதல் காரணமாக ஏற்படும் அசைவான அஜபா நடனத்தில் தியாகராஜர் விஷ்ணுவின் இதயத்தில் ஆடிக்களித்தார். திருமால் அந்த உருவத்தை விஸ்வகர்மா மூலம் விடங்கராக வடிக்கச் செய்து ஆராதித்து வந்தார். தேவலோகத்தைக் காக்கும் பொருட்டு இந்திரன் கேட்டதன் பேரில் திருமால் அந்த விடங்கரை இந்திரனிடம் கொடுத்தார். அதற்குப் பரிகாரமாக ஆதிசேஷனாகிய பதஞ்சலியுடன் தில்லை க்ஷேத்ரத்துக்கு வந்து தவமிருந்தார். தில்லையில் கோவிந்தராஜாவின் சன்னதி இதற்கு சான்றாக உள்ளது. சிவன் திருமாலிடம் திருவாரூரில் தன் நடனத்தைக் காணுமாறு கூற திருமாலும் திருவாரூரிலும் அதைத் தொடர்ந்து திருவொற்றியூரிலும் பத்மநடனம் கண்டுகளித்தார்.

திருவாரூர், திருநள்ளாறு, நாகை ஆகிய விடங்க தலங்களில் தியாகராஜ சன்னதியில் கருவறை மூடப்பட்டுவிட்டது. அதற்கு வாயிலில் தேவசபையில் தியாகராஜர் வீற்றிருப்பதைக் காணலாம். சைவ–வைணவ பேதம் காரணமாக காலப்போக்கில் விஷ்ணு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சயனத்திருந்த கருவறையே மூடப்பட்டது. அதற்கு அடையாளமாக கோபுரம், கோமுகம் எல்லாம் இன்றும் உள்ளன. திருவாரூர் தியாகராஜர் சபையின் வெளிச்சுவற்றிலும் திருமாலின் சயனகோலமும் தியாகராஜரின் விடங்கமூர்த்தியும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது ஆராய்ச்சிக்குரியது.

சப்தவிடங்க தலங்களுமே சக்தி பீடமாக விளங்கின. அங்குள்ள அம்பாள் சக்தி வழிபாட்டில் முக்கிய இடம் பெற்றவர்.

திருவாரூர்	–	கமலாம்பிகை
திருநள்ளாறு	–	பிராணாம்பிகை
நாகப்பட்டினம்	–	நீலாயதாட்சி
வேதாரண்யம்	–	வேதநாயகி
திருவாய்மூர்	–	க்ஷீரோபவசனி
திருக்குவளை	–	மீனாட்சி
திருக்காறாயில்	–	கைலாச நாயகி

அடிப்படையில் ஸ்ரீவித்யை என்பதே மந்த்ரம், ஸ்ரீசக்ரம் மூலமாக சக்தியை லலிதாவாக வழிபடுவதையே குறிக்கவரும். லலிதா ஸஹஸ்ரநாமத்தின் முழு உருவமே கமலாம்பிகை.

தியாகராஜ ஸஹஸ்ரநாமமும் லலிதா ஸஹஸ்ரநாமமும் தொடங்குவதிலேயே ஒன்றுபோல் இருப்பதைக் காணலாம்.

<u>லலிதா ஸஹஸ்ரநாமம்</u>	<u>முசுகுந்த தியாகராஜ ஸஹஸ்ர நாமம்</u>
ஸ்ரீ மஹாராக்ஞை நம:	ஸ்ரீமத் த்யாக மஹாராஜாய நம:
ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேஸ்வர்யை நம:	ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேஸ்வராய நம:

தியாகராஜருக்கும் தந்திர மார்க்கத்திற்கும் தொடர்பு இருந்திருப்பதைக் காணலாம். திருவாரூர் ஸ்ரீசக்ர ஆன்மீக சக்தியின் மையமாக உள்ளது. ஒரு தகட்டில் ஸ்ரீசக்ரம் பொறிக்கப்பட்டு தியாகராஜர் மீது பதிக்கப்பட்டுள்ள காரணத்தால் சாதாரண மக்களின் கண்களுக்குப் படாதவாறு தியாகராஜரின் உருவம் முழுவதும் முகம் நீங்கலாக மறைக்கப்பட்டுள்ளது. திருவாரூரில் உள்ள சப்தமாத்ருகா சிற்பம் பல்லவர் காலத்தைச் சேர்ந்த பழமையானது. சைவத்துடன் இணைந்த சக்திவாய்ந்த உக்ர தேவதை வழிபாடும் இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்ததற்கு இதுபோன்ற சான்றுகள் உள்ளன. திருவாரூரில் உள்ள

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



நீலோத்பலாம்பிகை (அம்பாள் தேர்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுற்றுகளும், சப்தவிடங்க ஸ்தலங்களின் அமைப்பும் குண்டலியினின்று ஸஹஸ்ராரம் வரை ஆற்றலின் இயக்கத்திற்கு அடையாளமாகக் கருதப்படுகின்றன. திருவாரூர் அதற்கேற்றவாறு மூலாதாரக்ஷேத்திரமாக உள்ளது. இங்குள்ள மரகத லிங்கம் ஸ்ரீவித்யா தாந்திரிக மார்க்கத்தில் சிவசக்தி ஐக்யத்தைக் குறிக்கிறது. ஸோஹம் என்ற உள்மூச்சு வெளிமூச்சு குண்டலியின் அடையாளமான ஹம்ஸத்தைக் குறிப்பதாக தாந்த்ரீக நிபுணர்கள் கருதுகின்றனர். ஆகவே தான் விடங்கரை (விடு–தங்க) பறவைகள் தங்குமிடம் என்றும் கூறுகிறார்கள்.

கமலாம்பிகைக்கும் கருவறையில் உள்ளபோக அம்மனுக்கும் உள்ள வேறுபாட்டைப் பார்க்கும்போது பெண்மையின் புனிதத்தை தூய்மையை விளக்க கமலாம்பிகை யோகினி என்ற வடிவத்தில் கால்களை மடித்து சப்பணமிட்டு உட்கார்ந்திருக்க போக அம்மனோ பூமிதத்வத்தைக் காட்டுவதற்காக த்ரிபங்கி நிலையில் கையை பூமியை நோக்கிக் காட்டிய வண்ணம் காட்சி தருகிறாள். நீலோத்பலாம்பிகா தன் திருக்கரத்தில் நீலோத்பல மலர் ஒன்று விளங்குகின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறாள். இவள் அருகில் தோழி ஒருத்தி தோள் மீது முருகனை சுமந்து நிற்க, அன்னையின் இடதுகரம் முருகனது சுட்டுவிரல் பற்றிய வண்ணம் காணப்படுகிறது. இது பிற தலங்களில் பிறசக்தி ஆலயங்களில் இல்லாமல் இத்தலத்தில் மட்டுமே காணப்படும் அற்புதமான திருக்காட்சி. இவ்வன்னை இளையகுமாரனோடு எழுந்தருளி நிகழ்வது இல்லற மாண்பினை விளக்குவதாகும். அன்னை கமலாம்பிகை கால்மேல் காலிட்டு யோகாசன நிலையில் கைகளில் பாசம், ருத்ராக்ஷம், தாமரை, அபயமுத்திரை தாங்கி துறவற வாழ்வினர்க்குத் திருவருள் புரிபவளாக விளங்குகிறாள்.

சக்தி உபாசகர் ஸ்ரீவித்யா தந்திர நிபுணர் முத்துசாமி தீட்சிதர் கமலாம்பா நவாவரண க்ருதியில் கமலாம்பாவை யோகினி என்றே வர்ணிப்பது குறிப்பிடத்தக்கது. அஜபா யந்த்ரம் 51 அக்ஷரங்கள் கொண்ட வரைபடம். இந்த அக்ஷரங்கள் தாந்த்ரிக வழிபாட்டில் சக்தியின் 51 திருநாமங்களாக இருப்பதைக் காணலாம். இந்த அக்ஷரங்களின் முதல் எழுத்துக்களை கொண்ட அம்ருதா, ஆகர்ஷிணி, ஈசானி, உமா என்ற பெயர்கள் தந்திர வழிபாட்டில் உள்ளன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிதம்பரத்தில் உள்ள ரஹஸ்யத்தில் உள்ள யந்திரம் சிவபார்வதி சம்மேளன சக்ரத்தைக் கொண்டதாக உள்ளதுபோல திருவாரூரிலும் தியாகராஜர் மீதுள்ள அஜபாயந்திரம் திருவாரூர் ஆலய வளாகத்துக்குள் கமலாம்பிகா ஆலயத்தின் உள்பிராகாரத்தின் பின்புறம் உள்ள 51 அட்சரங்கள் கொண்ட அட்சர பீடம் ஆகியவை தாந்திரிக வழிபாட்டின் அம்சங்களின் சான்றுகளாக விளங்குகின்றன. விடங்கர் சூட்சுமத்தையும் தியாகராஜர் ஸ்தூலத்தையும் குறிப்பதைக் காணலாம். இதற்கு இசைந்தவாறு மூலாதார கணபதியும் ஐந்து தலை நாகத்தின் அருகில் மலர்ந்த தாமரை மலர்மீது சாய்ந்து ஆடுவதாகக் காணப்படுகிறார். ஸ்ரீவித்யா உபாசகரான பாஸ்கராசார்யார் தனது நவரத்ன மாலாமஞ்ஜூஷா என்ற நூலில் தியாகராஜ சிலையில் காணப்படும் பல்வேறு சாக்த நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளார்.

ஔவையார் தனது விநாயகர் அகவலில்

"குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து"...... என்பதை இது
குறிப்பதாகக் கொள்ளலாம். திருவாரூர் பிரதான சக்திகள்...

1. சோமகலாம்பா சமேத வல்மீகேஸ்வரர்
2. நீலோத்பலாம்பா சமேத தியாகராஜ மூர்த்தி
3. கமலாம்பாள்
4. கொண்டி

தியாகராஜருடைய ஸ்ரீவித்யா தொடர்பினை முசுகுந்த ஸஹஸ்ரநாமத்தில் பின்வரும் நாமங்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஸ்ரீவித்யாத்மக ரூபாய நம:
ஸ்ரீபீடாந்தர் நிவாஸினே நம:
ஸ்ரீவித்யாச்சாதித ஹ்ருதயாய நம:
ஸ்ரீவித்யா ஹம்ஸ ஸம்புடாய நம:
ஸ்ரீவித்யா பரிதானாக்யாய நம:
ஸ்ரீமூலாதார நிலயாய நம:
ஸ்ரீஹாதி வித்யாஸ்வரூபிணே நம:
ஸ்ரீ அம்பிகா குஹ ஸம்யுதாய நம:
ஸ்ரீவித்யா ஜபப்ரியாய நம:
ஸ்ரீ கலா ஷோடசகஸ்தம்ப ஸஹஸ்ர ஸ்தான மத்யகாய நம:

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கமலாம்பிகையின் மகுடம் கரண்ட மகுடமென்றும் ஆசனம் குட்டிகாசனமென்றும் கமலாம்பிகையின் தியான ஸ்லோகத்தில் கூறப்பெறும் தியாகேசரின் பக்கத்திலுள்ள தேவியின் திருநாமம் 'கொண்டி' என்று தியாகராசலீலை திருநகரப்படலத்திலிருந்து தெரிகிறது.

தியாகராஜருக்கும் பாம்புப்புற்றுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை காணமுடிகிறது.

விஸ்வகர்மா வாஸ்து சாஸ்திரத்தில் வல்மீகம் (புற்று) திருவாரூரின் லிங்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாம்புப் புற்றிற்கு பசு தானாகவே பால் சுரப்பது அந்த இடத்தில் தோண்டிப் பார்த்தத்தில் சுயம்பு சிவலிங்கம் காணப்பட்டது. பிறகு அதற்கு ஆலயம் எழுப்பியது ஆகிய சம்பவங்கள் பல இடங்களில் நிகழ்ந்துள்ளதை புராண வரலாறுகளில் காணலாம். திருவாரூரிலும் புற்று ஒன்று சிவலிங்கமாகவும் சிவன் புற்றிடங்கொண்டவராகவும் வணங்கப்பட்டு வருகிறார். திருவொற்றியூரிலும் இதேபோல புற்றிடங்கொண்டார் மூலவராக உள்ளார். திருவாரூரில் ஆலயத்திற்குள் உள்ள ஹாடகேஸ்வரத்தில் கீழே பாதாள லோகத்துடன் தொடர்புள்ள ஒரு பாம்புப்புற்று இருந்ததாக கருதப்படுகிறது.

விஷ்ணு தன் வில்லை நிறுத்தி அதன்மேல் தலைசாய்ந்து நீண்ட யோகநித்ரையில் ஆழ்ந்தபோது அவரை எழுப்புவதற்காக பிரம்மா தேவர்களை கரையான்களாக மாறி அவரது வில்லின் நாணை அறுக்குமாறு உத்தரவிட்டார். தேவர்களும் அவ்வாறே விஷ்ணுவின் நித்திரையை கலைத்தனர். அந்த கரையான்கள் தங்கியிருந்த புற்றே ஸ்வயம்பு லிங்கமாக மாறி வன்மீகநாதர் என்று பெயருடன் அருள்பாலித்தது. அதனால் அந்த ஊருக்கே வன்மீகபுரம் என்று பெயர் வந்தது.

திருவாரூருடன் தொடர்புள்ள தொண்டைமான் வரலாறு ஸ்காந்த புராணத்தில் இடம் பெற்றுள்ளது. மறு ஜன்மத்தில் அரசனாகப் பிறக்க திருமால் அருள கனவில் புற்றில் பசுபால் கறப்பதையும் பசுந்தளிர்கள் (பல்லவங்கள்) சிதறுவதையும் காண்கிறான். ஆகவே அவனது வம்சம் பல்லவ வம்சம் என்று பெயர் பெற்றதாக அது கூறுகிறது.

வெள்ளிப்பேழையில் வைக்கப்பட்டுள்ள விடங்கலிங்கம் குண்டலினி என்ற பாம்பு எழுவதற்கு அடையாளமாக விளங்குகிறது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எனக் கூறப்படுகிறது. திருமால் இதயத்தில் அவரது ஸ்வாச ஏற்ற இறக்கத்தில் அமர்ந்தபடியே ஆடிமகிழ்ந்த தியாகராஜர் நடனப்பிரியர். ஆகவே சப்தவிடங்க தலங்களில் தியாகராஜர் உத்சவ காலத்தில் தனிப்பட்ட நடனங்கள் நிகழ்த்தப்படுவது இன்றும் வழக்கமாக உள்ளது. திருவாரூரில் சுத்த மத்தளம், பஞ்சவாத்யங்கள் பஞ்சானன முரசு முதலிய வாத்யங்கள் முழங்க ஆடும் நடனம் ஹம்ஸ நடனம், அஜபா நடனம், நாதாந்த நடனம், புயங்க நடனம் என்றும் பாராட்டப் பெறுகிறது. திருநள்ளாற்றில் பித்துப்பிடித்தவன் தலையை இடது வலது பக்கங்களில் சாய்ந்து ஆடும் உன் மத்த நடனம் இடம் பெறுகிறது. திருவாய்மூரில் கமல (தாமரை) மலர் நீரில் அசைந்தாடுவது போன்ற கமல நடனம் மட்டுமென்றி வட்டணையாடல் என்ற ஒருவித ஆட்டமும் நிகழ்வதாகக் கூறப்பட்டுள்ளது. திருக்கோளிலியில் வண்டு மலரைச் சுற்றிசுற்றி வருவது போன்ற பிருங்க நடனம் நிகழ்த்தப்படுகிறது. நாகப்பட்டினத்தில் கடல் அலைகள் எழும்பி கரையை நோக்கி ஓடிவருவது போன்ற பாராவாரதரங்க நடனம் பிரசித்தமாக உள்ளது. வேதாரண்யத்தில் அன்னம் நடைபயில்வது போன்ற ஹம்ஸ நடனம் நிகழ்கிறது. திருக்காறாயில் தலத்தில் விடங்கர் ஆடும் நடனம் குக்குட நடனமாகும். கோழி கொத்துவது போன்ற அசைவுகளைக் கொண்டது இந்த நடனம். நடராஜர் போல நின்று ஆடாமல் பக்தர்களின் தோளில் அமர்ந்து ஆடும் ஆசீன தாண்டவம் தியாகராஜருடையது. தியாகராஜர் கொடி தியாகக்கொடி, அவரது தேர் ஆழித்தேர் அவர் மேனியில் சாத்தப்படும் வாசனைப்பொருள் தியாக விநோதன்.

சிதம்பரம் மறைஞான சம்பந்தர், அளகைச் சம்பந்தர், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை குமரகுருபர ஸ்வாமிகள், கமலைஞானப்பிரகாசர், ஒட்டக்கூத்தர், வைத்யநாத தேசிகர் குருசாமி தேசிகர், எல்லப்ப நாயனார், அந்தகக்கவி வீரராகவ முதலியார், தியாகராஜ செட்டியார் ஆகியோர் எழுதிய நூல்களிலிருந்து தியாகராஜர் சரித்திரமும் பெருமையும் தெரியவந்துள்ளன. தியாகராஜர் பரவை நாச்சியாருக்காக திருவாரூரில் தூதுபோனார் சுந்தரர் கேட்டு கொண்டதற்காக மாகாளம் சோமயாஜி மாறனார் யாகத்திற்கு புலையன் வேடத்தில் சென்றார். தேவாசிரிய மண்டபத்தில் இருந்து கொண்டு நாட்டை ஆண்டிருக்கிறார்.

தியாகராஜர் 360 லீலைகள் இயற்றியுள்ளதாக மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருநள்ளாறு ஸ்ரீ சனீஸ்வர பகவான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

11. திருநள்ளாறு தியாகராஜரும் உன்மத்த நடனமும்

தேவலோகத்தில் இந்திரன் வேண்டுகோளின்படி விஸ்வகர்மா உருவாக்கிய ஆறு விடங்கத் தியாகராஜர்கள் முசுகுந்த சக்ரவர்த்தியால் பூமிக்குக் கொண்டு வரப்பட்டு திருவாரூரைச் சுற்றிய ஆறுதலங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அவற்றுள் திருநள்ளாறும் ஒன்று. ஆகவே திருநள்ளாறு சப்த விடங்கத்தலங்களில் ஒன்றாக புகழ்பெற்றுள்ளது.

திருநள்ளாறு ஒரு தியாகராஜ க்ஷேத்ரமாயிருந்தும், சைவ சமயத்தைக் காத்த சக்திபீடமான பிராணாம்பிகை ஸ்தலமாயிருந்தும், நளனுக்கு விமோசனம் கொடுத்த இங்குள்ள இறைவனாம் தர்பாரண்யேஸ்வரரை வழிபடுவோருக்கு பூர்ண அனுக்ரஹம் வழங்கிடும் சனிபகவானின் சான்னித்ய விசேஷம் இந்த தலத்தை நவக்ரஹ ஸ்தலமாக சிறப்பித்துள்ளது.

சப்தவிடங்க லிங்கங்களில் மிகப்பெரியது இந்த தலத்தில் உள்ள மரகத விடங்கலிங்கமே. இதற்கு நாள்தோறும் ஐந்துமுறை அபிஷேக பூஜை செய்யப்படுகிறது.

வைகாசி மாதம் தியாகராஜர் திருவிழா இங்கு மிக சிறப்பாக பெரிய தேருடனும் உன்மத்த நடனத்துடன் நிறைவேற்றப்படுகிறது.

முதலாம் ராஜராஜன் சோழேந்திரசிங்கன் என்ற பட்டத்துடன் விளங்கியவன். அவனது கால கல்வெட்டுக்களில் திருநள்ளாறு சோழேந்திரசிங்க சதுர்வேதி மங்கலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு படைப்பிரிவிற்கு சோழேந்திரசிங்கவேளைக்காரன் என்று பெயரிடப்பட்டதாகவும் அதற்கு விக்ரம சோழனால் நிலம் மான்யமாய் அளிக்கப்பட்டதாகவும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இந்த சோழேந்திர சிங்கன் பெயருள்ள ஒரு ராணுவ தளபதி 'பிராணோபகாரி' என்ற பெயர் கொண்டு தியாகராஜருடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்ததாகவும் கல்வெட்டுக் குறிப்புகளிலிருந்து அறியலாம்.

திருநள்ளாறு தியாகராஜருக்கு ஆண்டுக்கு ஒருமுறை இந்திர பூஜை நடக்கும். பூசை செய்யும் சபையெங்கும் தோரண தீப

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அலங்காரங்கள் நிறைந்திருக்கும். இங்குள்ள தியாகராஜர் செண்பக மலர்களால் அலங்கரிக்கப்பட்ட காரணத்தால் செண்பகத்தியாகராஜன் என்ற பெயர் பெற்றார். ஆலயத்தின் வடமேற்கில் தியாகராஜர் எண்ணெய்க்காப்பு (அபிஷேகம் கொண்டருளும்) பெரிய மண்டபம் உள்ளது. வசந்த மண்டபம் திருஓலக்க மண்டபம் ஆகியவையும் உள்ளன.

சத்யகுப்தன் என்ற அசுரன் தேவர்களுக்கு பெரும் அச்சத்தை விளைவித்து வந்தான் சனி திசையில் அவனை சனிபகவான் பிடிக்க வந்தபோது அந்த அசுரன் அனைத்து கிரஹங்களுடன் போரிடத் தொடங்கினான். கிரகங்களின் பிரார்த்தனையின் பேரில் ஈஸ்வரன் அந்த கிரகங்களை காத்தருளி அவர்கள் சிவனடியார்களுக்கு எவ்வித துன்பமும் ஏற்படுத்தக்கூடாது என்ற வாக்குறுதியைப் பெற்றார். ஆகவே சனி பீடையிலிருந்து நிவாரணம் பெற திருநள்ளாறு சென்று தர்ப்பாரண்யேஸ்வரரை வழிபட வேண்டும். திருநள்ளாற்றில் உயிருக்கு மிக முக்யமான மூவர் சேர்ந்திருப்பது நீண்ட ஆயுளுக்கு உத்தரவாதமாக அமைகிறது.

- உன்மத்த நடனம் மூலம் சுவாச ஓட்டத்தை நிலைநிறுத்தும் தியாகராஜர்.
- நீண்ட ஆயுளை கொடுக்கும் ஆயுஷ்காரகனான சனிபகவான்.
- பிராணனுக்கு அதிகாரியான பிராணாம்பிகை அம்பாள்.

திருநள்ளாற்றில் விடங்கரை ஸ்தாபித்த முசுகுந்த சக்ரவர்த்தி இங்குள்ள சனிபகவானையும் வழிபட்டார் என்பது பின்வரும் சனிக்ரஹ சஹஸ்ரநாமத்திலிருந்து தெரியவருகிறது.

முசுகுந்த சமாராத்யாய நம: 673
முசுகுந்த வரப்ரதாய நம: 674
முசுகுந்தார்ச்சிதாய நம: 675

பெரும்பாலான சிவாலயங்களில் சோமாஸ்கந்தரே உற்சவ மூர்த்தியாக விளங்குகிறார். திருநள்ளாற்றில் தியாகராஜப்பெருமானே உற்ஸவ மூர்த்தியாக உலாவருகிறார்.

ராசிக்கட்டத்தில் சனி வீட்டில் தான் ராகு இடம் பெறுகிறார். திருநள்ளாற்றில் சனி தனி சன்னதி கொண்டுள்ள நிலையில் ராகுவை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தனக்குள் கொண்ட ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர் சன்னதியும் திருநள்ளாற்றில் உள்ளது.

திருநள்ளாற்றில் திருவோலக்க மண்டபம் ஆகியவற்றுடன் கூடிய தியாகராஜரின் சன்னதி உள்ளது. இதனுள் தியாகராஜர் பெரிய வெள்ளி விதானத்தின் கீழ் வெள்ளிமஞ்சத்திலுள்ள சிம்மாசனத்தில் எழுந்தருளியுள்ளார். இவருக்கு முன்னால் இரண்டு வீர கட்கங்கள் வைக்கப்பட்டுள்ளன.

நகவிடங்கர் என்று இவருக்கு பெயர். நாகவிடங்கர் என்ற பெயரே மருவி நகவிடங்கர் என்று வழங்கப்படுகிறது. (உ.வே.ச.) நாகம் பூண்டு கூத்தாடு நள்ளாறனே என்று பாடுகிறது தேவாரம். மலைபோல கம்பீரமாக இருப்பதால் நக (மலை) விடங்கர் என்றும் கூறலாம்.

கோயிலுக்கு ஒரு கிலோமீட்டர் தொலைவில் சம்பந்தர் ஓடை என்ற ஓடையில் மலரும் செங்கழுநீர் பூக்களைக் கொண்டே தியாகராஜருக்கு தினப்பூஜைகள் நடைபெறுகின்றன. இந்த ஆலயத்தில் நவக்கிரஹங்கள் இல்லை. முதல் உள்பிரகாரத்திற்கு வெளியே சனிபகவான் தனி சந்நிதி கொண்டுள்ளார். அவருக்கு நேர் பின்புறம் ஈஸ்வரனை நோக்கி மேற்கு நோக்கி சூரியன் காணப்படுகிறார். காசித்தலத்தில் இருக்கும் ஆன்மாக்களின் காதில் சிவனே தாரக மந்திரத்தை ஓதுகிறார். அதேபோல் திருநள்ளாறு க்ஷேத்ரத்தில் தென்குப்தன் என்பவனுக்கு அவன் விருப்பப்படியே யாருக்கும் தெரியாமல் அவன் காதில் ம்ருத்யுஞ்ஜய மந்திரத்தை ஓதினார் என்பது வரலாறு.

இங்கு தர்பாரண்யேஸ்வரர் என்ற மூர்த்தி தானாகத் தோன்றியது என்றாலும் அந்த மூர்த்தி தோன்றக் காரணமாக இருந்தவர் சனீஸ்வரர் தான் என்பதும் பிரசித்தம்.

திருநள்ளாற்றில் உள்ள தியாகருக்கு 'புத்திரத்தியாகர்' என்ற பெயரும் உண்டு. நெடுநாட்களாகப் புத்திரப்பேறு இன்றி வருந்திய இந்திரன் இவரை நோக்கித் தவம் புரிந்தான். இப்பெருமான் அவனுக்கு இந்திர லோகத்தில் இன்பத்திற்கு மட்டுமே இடம் உண்டு. இனவிருத்திக்கு இடம்இல்லை என்பதால் ஆயிரம் யாகங்களை செய்து முடித்து இந்திரனாகும் தகுதி பெற்றிருந்த ஒரு மன்னனை மானஸ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புத்திரனாகத் தந்தருளினார். அவனே ஜயந்தன் என்ற இந்திர குமாரன். இந்த ஜயந்தன் இவரை வணங்கிப் பேறுபெற்றதாக வரலாறு கூறுகிறது.

தியாகராஜர் வழிபாட்டில் அநேக முத்திரைகள் இடம் பெறுகின்றன. முன்னாளில் பூஜை செய்யும் அர்ச்சகர் முத்திரைகளை மந்திர பூர்வமாகச் சொல்ல ஆலய ஆடற்பணிப்பெண்கள் அந்த தெய்வத்தன்மை பொருந்தியதாகக் கருதப்படும் முத்திரைகளை அபிநயித்துக்காட்டினர். இதனால் தேவர்கள் மகிழ்ந்தனர் என்பர். இந்த பணிப்பெண்கள் கைகாட்டும் முறைக்காரிகள் என்று போற்றப்பட்டனர் என்று நூல்கள் மூலம் அறியப்படுகின்றன.

சிவபெருமான் ராஜாவாக எட்டு இடங்களில் எழுந்தருளி இருக்கிறார். தில்லையில் நடராஜர், சப்தவிடங்க ஏழு ஸ்தலங்களில் தியாகராஜராக எழுந்தருளி உள்ளார்.

ஜீவராசிகளின் இயக்கத்துக்கு உயிராக இருப்பவர் தியாகராஜர். உயிர் நிலைக்க சுவாசம் தேவை. சுவாசம் 64 கலைகளாக பிரிக்கப்படுகிறது. இதன் ஒரு நிலையே உன்மத்த நடனம்.

திருநள்ளாறு தியாகராஜர் உன்மத்த நடனமாடுபவர். சிவபெருமான் பித்தனாகவும் இருக்கிறார். ஆகவேதான் சுந்தரர் 'பித்தா பிறை சூடி' என்று தன் தேவாரத்தில் புகழ் மாலை சாத்துகிறார். சிவபெருமான் பித்தனாகி தன்னை மறந்த நிலையில் நடனமிடுவதே உன்மத்த நடனம். இது எல்லாவகையான நடனங்களில் உயர்ந்த நிலை. பரவச நிலையில் உயிர்கள் இறைவனோடு இணைகின்றன. அந்த நிலைக்கே இறைவன் இறங்கி வருவது உயிர்களை உய்விக்க.

திருநள்ளாறு தியாகராஜர் உன்மத்த நடனமிட்டுக்கொண்டுதான் யதாஸ்தானத்தை விட்டு வெளியே எழுந்தருளுவார். அதைக் காண்பவர்களுக்கு ஒரு பரவச நிலை ஏற்படும்.

திருநள்ளாறு திருக்கோவிலின் ராஜாதி ராஜாவாக இருக்கும் தியாகராஜர் தனது இருப்பிடமான யதாஸ்தானத்தை விட்டு புறப்படும்போது, ஒரு மகாசக்ரவர்த்தி தன் அரண்மனையை விட்டுப் புறப்படும்போது எப்படி விண்ணைமுட்டும் வாழ்த்தொலிகளும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆர்ப்பாட்டமும் பரவசமும் ஏற்படுமோ அத்தகைய நிலையை திருநள்ளாற்று தியாகராஜர் புறப்பாட்டின்போது உணர முடியும்.

திருநள்ளாற்று தியாகராஜர் நடனமிட்டுக் கொண்டுதான் எழுந்தருளுகிறார். சுவாமிகளின் திருமேனிகளை தாங்கும் மஞ்சம் மற்ற தெய்வங்களின் புறப்பாட்டின்போது, நின்ற நிலையில் தான் எழுந்தருளச் செய்யப்படுகிறது. ஆனால் தியாகராஜர் தனது மஞ்சத்துடன் தனக்கு இடது வலது பக்கங்களில் அரைவட்ட அளவுக்கு சாய்ந்தாடி வருவார். இப்படி சாய்ந்தாடுவதே உன்மத்த நடனம்.

பொதுவாக தெய்வ திருமேனிகள் மஞ்சத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டு, நான்கு பக்கங்களிலும் மஞ்சத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு வாரைகளை திருமேனி தாங்குவோர், தோளில் சுமந்து வருவார்கள்.

ஆனால் திருநள்ளாறு தியாகராஜரை புறப்பாடு செய்யும்போது, மேலே குறிப்பிட்டுள்ள இருவாரைகளிலும் தோள் கொடுத்து தூக்கமாட்டார்கள்.

சுவாமி மஞ்சத்துக்கு முன்னிலும் பின்னிலும் இரண்டு வாரைகளுக்கு உள்ள இடைவெளியில் சிறிய வாரை ஒன்று பெரிய வாரையோடு இணைக்கப்பட்டிருக்கும். அது பிள்ளைத் தண்டு என்று அழைக்கப்படும். நடுவில் உள்ள சின்ன வாரையைத்தான் தோளில் சுமப்பார்கள்.

முன்பக்க இரண்டு பெரிய வாரையிலும், பின்பக்க இரண்டு பெரிய வாரையிலும், இரண்டு குஞ்சங்கள் தொங்கும். முன்னால் ஒருவரும் பின்னால் ஒருவரும் இந்த குஞ்சத்தை பிடித்துக்கொண்டு இடது வலதாக ஆட்டுவார்கள். சுவாமி எந்தப் பக்கம் சாய்கிறதோ அந்த பக்கம் சிலர் பெரிய வாரையை தாங்கி பிடிப்பார்கள். உயர்ந்து இருக்கும் சுவாமி பக்கம் பெரிய வாரையை பிடித்துக்கொண்டு இருப்பவர்கள் அந்த வாரையை தாங்கி பிடித்துக்கொள்வார்கள். இப்படியாக இடது பக்கமும் வலது பக்கமும், முன்னேயும் பின்னேயும் சென்று ஆடிக்கொண்டே வருவார்கள். இதுதான் திருநள்ளாறு தியாகரின் உன்மத்த நடனம்.

திருநள்ளாறு கோயில் பிரம்மோற்சவத்தின்போது நடன நிலையில், ஆறுமுறை தியாகர் எழுந்தருளுகிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதல்முறை, வைகாசி விசாகத்துக்கு முன்பு ஒருநாள் இரவு யதாஸ்தானத்திலிருந்து வசந்த மண்டபம் எழுந்தருளல்; இரண்டாம்முறை, மறுநாள் வசந்த மண்டபத்தில் இருந்து யதாஸ்தானம் எழுந்தருளல்; மூன்றாவது முறை, தேரோட்டத்துக்கு முந்தைய நாள் இரவு அன்று, யதாஸ்தானத்திலிருந்து தேரடிக்கும், நான்காவது முறை, மறுநாள் தேரோட்டம் நிறைவு பெற்று அன்று இரவு தேரடியில் இருந்து எண்கால் மண்டபத்துக்கும், ஐந்தாம் முறை, மறுநாள் இரவு எண்கால் மண்டபத்தில் இருந்து யதாஸ்தானத்துக்கும், ஆறாவது முறை, பிரம்மோற்சவம் நிறைவு பெறும் விசாக தீர்த்தத்தன்று அதிகாலை இடையன் காட்சி மற்றும் தேர்கால் காணும் ஐதீகத்துக்காக யதாஸ்தானத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் யதாஸ்தானத்துக்கு திரும்புதல், இப்படி ஆறுமுறை தியாகர் நடனம் நடைபெறுகிறது.

பிரம்மோற்சவத்தில் எழுந்தருளும் தியாகரின் உன்மத்த நடன விழாவிற்கான ஏற்பாடுகள், தியாகர் முதல்நாள் புறப்பட்டு நடக்கும் அன்றைய காலையில் இருந்து தொடங்குகிறது. அன்று காலை தியாகருக்கு அபிஷேகம் நடைபெறும். அபிஷேகம் நடைபெறும்போது தியாகர் மஞ்சத்திற்கும் நிலைக்கும் "வாறை வறிதல்" பணிக்கான ஆயத்த வேலைகள் துவங்குகின்றன.

இரவு தியாகரின் புறப்பாட்டிற்கான பூஜைகள் நிறைவு பெற்ற பின்பு, தியாகர் பீடத்தில் இருக்கும் படிச்சட்ட புறப்பாடு வாத்தியம், தீவெட்டிகளுடன், தியாகர் எழுந்தருளும் இடத்துக்கு எழுந்தருளல் செய்யப்படுகிறது, படிச்சட்டத்தை சுமந்து செல்வோர் திரும்ப வரும்போது "வரிந்த வாரை" வாத்தியங்கள் முழங்க, தீவெட்டி தாங்குவோர் முன்செல்ல வாரை தியாகர் சந்நதிக்கு எழுந்தருளல் செய்யப்படுகிறது. வாரை தியாகர் சந்நிதிக்கு கொண்டு வரப்பட்டு, கதவுகள் சாத்தப்பட்டு, தியாகர் மஞ்சம், வாரையில் பொருத்தப்படுகிறது. கயிறு கொண்டு கட்டுவதில்லை. எவ்வித கட்டும் இல்லாமல் அரைவட்ட அளவுக்கு இரண்டு பக்கமும் சாய்ந்து சாய்ந்து தியாகர் உன்மத்த நடனம் நடைபெறுகிறது. ஒரு அற்புதமான தெய்வ நிகழ்வு. இதனை இன்றும் காத்து வருகிறார்கள்.

இந்த பணியை செய்திட இறையருள் வேண்டும். தியாகர் புறப்பாடு நடக்கும்போது நிகழும் கண்கொள்ளா காட்சியை எழுத்தில் வெளிப்படுத்த முடியாது. எங்கிருந்து வருகிறார்கள் என்று மலைக்க

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வைக்கும் அளவுக்கு தியாகர் சந்நிதி முன்பு பெரும் பக்தர்கள் கூட்டம் கூடி, "நள்ளாறா, தியாகேசா" என்று வேண்டுதல் ஒலியும், வாத்தியங்கள் எழுப்பும் உணர்ச்சிமிக்க நாதமும், தீவெட்டி தாங்குவோர் முன்செல்ல வாரை எடுத்துவரும் காட்சியும், சன்னதியில் இருந்து வான் பிளந்து வெளிவரும் சிவபெருமான்போல் வெளியே வரும் தியாகர், அதனைத் தொடர்ந்து நடைபெறும் தியாகரின் உன்மத்த நடனம் ஆகியவை ஒரு அற்புதமான தெய்வ நிகழ்வாகும். இதனைப் பார்த்து பரவசமடையும் பக்தர்களின் மனதில் உன்மத்த நடனம் "அழியாத தெய்வ காட்சியாக" என்றும் நிலைபெறுகிறது. அப்படிப்பட்டவர்கள் தியாகர் அருளை என்றும் பெறுகிறார்கள். தியாகர் அருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுவோம்.

தியாகர் அலங்காரம்:

திருவிழா காலங்களில் இவருக்கு அலங்காரம் செய்ய உள்ள பூ மற்றும் மாலைகள் மேளதாளத்துடன் செல்லும் – இந்த பூக்கள்/ மாலைகள் பணிசெட் என்று அழைக்கப்படும்.

தியாகருக்கும், அம்பாளுக்கும் குங்குமப்பூ+பச்சை கற்பூரம் கலவையில் நெற்றியில், திலகம் ஜொலிக்கும்.

இவரின் திருவாட்சியின் மேல் வரிசையாக வெட்டி வேர் மற்றும் மல்லிகை பூக்கள் சரமாக சிறிய துண்டுகளாக கட்டப்பட்டிருக்கும் – அவர் ஆடும்போது இவை அந்த ஆட்டத்துக்கு சுதி சேர்ப்பதுபோல் ஆடுவது பார்க்க மிக அழகாக இருக்கும்.

இவருக்கு மல்லிகைபூ மட்டுமே அலங்காரம் செய்வார்கள்.

சுவாமி மற்றும் அம்பாளின் முகத்தைத் தவிர, மற்ற பாகங்கள் பூக்களால் மறைக்கப்பட்டிருக்கும். இவரின் திருமேனியில் ஸ்ரீசக்கர இயந்திரம் இருப்பதால் திருமேனி முழுவதும் மறைக்கப்படுகிறது. (பார்க்க 120வது நாமாவளி – முசுகுந்த சகஸ்ரநாமாவளி).

சுவாமி அம்பாள் எப்பொழுதும் தியாகர் பரிவட்டம் என்ற சிறப்பு துணிகளினால் மூடப்பட்டே இருக்கும்.

சுவாமி வீற்றிருக்கும் மஞ்சம் எப்பொழுதும் பட்டு வஸ்திரங்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுவாமி அம்பாளுக்கு இருபுறமும் எப்பொழுதும் இரண்டு பட்டு திண்டுகள் வைக்கப்பட்டிருக்கும்.

இவரின் திருவாட்சி மட்டும் புதுமையான முறையில் உள்ளதைக் காணலாம். சிவ–விஷ்ணு அம்சம் சேர்ந்திருப்பதால் தட்டை வடிவிலான உருவமும், ஜ்வாலை போன்ற பகுதியும் திருவாட்சியில் மாறிமாறி இருக்கும்.

தியாகர் புறப்பாட்டின்போது எப்பொழுதும் இருபக்கமும் சாமரம் வீசுதல் தொடர்ந்து நிகழும்.

மரகதலிங்கம் / விடங்கர்:

அன்ன அபிஷேகத்தின்போது இவருக்கும் அன்ன அபிஷேகம் நடைபெறும்.

எண்கால் மண்டபத்திற்கும் பிராயச்சித்த அபிஷேகத்துக்கும் இவரும் எழுந்தருளி அபிஷேகம் காண்பார். அப்போது தேவார திருமுறை இன்னிசையும் நடைபெறுகிறது.

நைவேத்யம்:

வசந்த மண்டபத்தில் பெரிய அளவில் பாவாடை நைவேத்தியம் உண்டு. அதில் ஏராளமாக புளி சாதம், சம்பா சாதம், வடை, அதிரசம், புட்டு, தேன்குழல், சீவப்பட்ட இளநீர் வைக்கப்பட்டிருக்கும்.

ஆறு புறப்பாட்டிற்கும் தியாகருக்கு வடை பருப்பும் பானகமும் நைவேத்தியம் செய்யப்படும்.

தினமும் சாயரட்சை காலத்தில் இவருக்கு சர்க்கரை பொங்கல், புட்டு, வடை நைவேத்யம் உண்டு.

சுந்தரமூர்த்தி நாயனார்:

தியாகர் சன்னதிக்கு எதிரில் சுந்தரமூர்த்தி நாயனார் சன்னதி இருக்கிறது. தியாகருக்கு தீபாராதனை காலத்தில் இவருக்கும் அதே நேரத்தில் எதிர் தீபாராதனை உண்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



தியாகராஜர் திருத்தேர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விழாக் காலங்களில், வசந்தமண்டப நிகழ்ச்சியின்போதும், திருத்தேர் புறப்பாடு தீபாராதனை நேரத்திலும், சுந்தரரும் தீபாராதனை காண்பார்.

தியாகருக்கு வருடத்தில் எட்டு அபிஷேகம் நடைபெற்று வருகின்றது.

திருத்தேர் வைபவம்:

சுவாமிக்கு உரிய தேரில் தியாகராஜர் வீற்றிருப்பார்.

அம்பாள் தேரில் நீலோத்பலாம்பிகா வீற்றிருப்பாள்.

திருத்தேர்கள் விபரம்:

சுவாமி தேர் சுமார் 75 வருடத்துக்கு முன் செய்யப்பட்டது.

அம்பாள் தேர் மிக புராதனமானது. இது 2008–ல் புனரமைக்கப்பட்டது.

சுவாமி தேருக்கும், அம்பாள் தேருக்கும் திருச்சி "பெல்" நிறுவனத்தார் மூலமாக, இரும்பு அச்சும், இரும்பு சக்கரங்களும், சுவாமி தேருக்கு மட்டும் Hyd. Brake–ம் பொருத்தப்பட்டன (1994–ஆம் ஆண்டு).

2015ஆம் ஆண்டு விநாயகர் தேர், சுப்ரமணியர் தேர், சண்டிகேஸ்வரர் தேர் புதியதாக செய்யப்பட்டது. இவற்றிற்கும் வழக்கம்போல் இரும்பு அச்சு, இரும்பு சக்கரங்களும் "பெல்" நிறுவனம் மூலமாக பொருத்தப்பட்டன.

2015ஆம் ஆண்டிலிருந்து பஞ்சமூர்த்திகள் வினாயகர், முருகன், சுவாமி, அம்பாள் மற்றும் சண்டிகேஸ்வரருக்கு தேர்கள் உள்ளன. அதனால் தேரோட்ட நிகழ்ச்சியின்போது ஐந்து தேர்களும் பஞ்சமூர்த்திகளுடன் நான்கு வீதிகளிலும் பக்தர்கள் கூட்டம் தேர்களை இழுத்துச் செல்லும்போது கண்கொள்ளா காட்சியாக அமைகிறது. அதே நேரத்தில் பஞ்சமூர்த்திகளும் தனித்தனி தேரில் வந்து பக்தர்கள் அனைவருக்கும் அருள்பாலிக்கின்றனர்.

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருவாய்மூர் தியாகராஜர் ஆலயம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

12. தியாகராஜர் நடனம்

பரதநாட்டியம் இறைவனாலேயே உருவாக்கப்பட்டு உலகிற்கு வழங்கப்பட்டது என புராண இதிகாசங்கள் மற்றும் தமிழ்க் காப்பியங்களும் கூறுகின்றன. இன்றைக்கும் பரதநாட்டியம் என்னும் தெய்வீக நடனத்தில் சிவபெருமானின் நடன முத்திரைகளைத் தவிர புதிய நடனமுத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரியவில்லை. நடனத்தின் உயர்ந்த நிலை தாண்டவம்; எல்லோரும் ஆடும் நாட்டியங்களை நடனம், நாட்டியம் கூத்து என்ற பெயர்களால் அழைத்து வருகிறோம். ஆனால் தெய்வம் ஆடும் நடனம் ஒன்றுதான் தாண்டவம் என்ற தனிப்பெயரால் குறிப்பிடப்படுகிறது.

தத்துவ அடிப்படையில் சிவத்தை முற்றும் உணர்ந்த திருமூலர் ஆண்டவர் ஆடும் தாண்டவம் ஐந்து வகையாகும் என்கிறார்.

ஆமே பொன்னம்பலம்அற்புதம், ஆனந்தம்
ஆமே திருக்கூத்து, அனவரதத்தாண்டவம்
ஆமே பிரளயமாகும், அத்தாண்டவம்
ஆமே சங்காரந்தருந்தாண்டவங்களே

– திருமந்திரம் தந்திரம் 4–88

- அற்புதத் தாண்டவம் – படைப்புக்கூத்து
- ஆனந்தத் தாண்டவம் – அழகையும் எல்லையில்லாத கருணையையும், காக்கும் திறத்தையும் வெளிப்படுத்தும் உன்னதத் தாண்டவம்
- அனவரத தாண்டவம் – சுவாச இயக்க நடனமாகும் பிரபஞ்சம் முழுவதும் நொடிப்பொழுது கூட இடைவெளியின்றி நடைபெற்று வரும் உயிர் இயக்க நடனம்
- பிரளய தாண்டவம் – பலநூறு கோடி ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் ஊழித்தாண்டவத்தின் உச்சநிலை
- சங்காரத் தாண்டவம் – பிறந்து, இறந்து கொண்டு மாயையில் சுழன்று வரும் ஆன்மாக்களை சிறிது காலம் இளைப்பாறச் செய்வதற்கே இறைவன் புரியும் தாண்டவம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"இந்த உலகம் நிலையற்றது. நிலையானது பரம்பொருள் ஒன்றுதான். நாம் ஒவ்வொருவரும் அந்தப் பரம்பொருளை அடைந்து மரணமிலாப் பெருவாழ்வு பெறவேண்டும், என்று உணர்ந்து ஞானமார்க்கத்தில் செல்ல வேண்டும் என்பதற்காகவே தாண்டவ மூர்த்தியாக பரம்பொருள் ஓய்வின்றி தாண்டவம் ஆடிக்கொண்டே உள்ளார்."

அண்டத்தில் உள்ளதுபோல் பிண்டத்திலும் பரம்பொருள் நடனம்புரிவதை நாம் உணர வேண்டும். நாம் இடைவிடாது தினமும் உள்ளிழுக்கும் சுவாசத்தின் மூலம் வெளியே உள்ள காற்று மண்டலத்திலிருந்து ஓரளவு காற்றை உள்ளே இழுத்துக்கொண்டு சிறிது காற்றை வெளியே விட்டுக்கொண்டு இருக்கிறோம். நம்மையறியாமலே உள்ளிழுக்கும் காற்றிலிருந்து ஓரளவு உயிர்சத்தை கிரகித்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல வெளியிடும் காற்றோடு உடல் முழுவதும் உண்டாகும் அசுத்தக் கரிப்பொருளை வெளிவிடுகிறோம். இந்த சுவாசத்தினால் தான் உடலில் உயிர் நிலைத்திருக்கிறது. இது இறைவன் நம் உடலில் உள்ளே சுவாசமாக இருந்து நடத்திவரும் திருக்கூத்து இந்த பிராண சக்தியிலிருந்து சுவாசத்தின் மூலம் பெறும் பிராணவாயுவுடன் இணைந்து செயல்படும் வியானவாயு (ஆகாய அம்சம்), அபானவாயு (அக்னி அம்சம்), சமானவாயு (நீர் அம்சம்) உதான வாயு (மண் அம்சம்) ஆகிய முக்கிய வாயுக்கள் நான்கும் நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்ற துணைவாயுக்கள் ஐந்தும் நவசக்தியாக இணைந்து உடலில் சிவசக்தி தாண்டவம்புரிந்து வருகின்றன.

மனிதன் அறிவைப் பயன்படுத்தி புதிது புதிதாக உருவாக்கும் சாதனங்கள் எல்லாமே அற்புதத் தாண்டவத்தின் விளைவுதான்.

மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட எல்லா சாதனைகளையும் வாழ்க்கையில் பயன்படுத்தி இன்புறச் செய்யும் நடனம் ஆனந்தத் தாண்டவம்.

மனித உடலில் அவன் அறியாமலே இரவு பகலாக நடைபெறும் சுவாச இயக்கம், ரத்த ஓட்டம் போன்ற யாவும் நடைபெறுவதற்குக் காரணமான நடனம் அனவரதத்தாண்டவம்.

நாள்தோறும் தூக்கத்தைக் கொடுத்து மனிதன் பூதஉடலுக்கு ஓய்வினைக் கொடுக்கும் தாண்டவம் பிரளயத் தாண்டவம். சீவர்களுக்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விஷ்ணு அனந்த சயனம். மார்பில் தியாகராஜர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பக்குவத்தை உண்டாக்கி அவர்களை தன்பால் அணைத்துக் கொள்வதற்கான நடனம் சங்காரத் தாண்டவம். தியாகப்பிரம்மம், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ரமணர் போன்றவர்கள் இந்த உடலில் வாழ்ந்து கொண்டே புறவுலக நினைவுகளிலிருந்து விடுபட்டு இறை நிலையோடு ஐக்யமாகும் நிலையான பிரளய தாண்டவ நிலையை அடைந்துள்ளனர்.

நாம் வெளிவிடும் ஸ்வாசத்தின் போது 'ஸ': என்ற மாயை தன் வசத்திற் கொண்ட எங்கும் பரந்து இருக்கும் ஈஸ்வரன், சுவாசம் உள்ளே செல்லும்போது அஹம் என்ற அவித்யையால் கட்டப்பட்டது ஜீவன், இந்த ஸோஹம் பாவனையில் நெஞ்சம் நிற்க ஐந்து விஷயங்களையும் துறந்தவன் சிவயோகி. நமது தேகத்தில் ஆத்மா ஸோஹம், ஸோஹம் என்னும் மகாமந்திரத்தைத் தானாகவே ஜபிக்கிறது. மூச்சுவிடுவதே ஜபம். இந்த ஸோஹம் என்ற தியானத்தினால் பிராணாயாமம் இல்லாமலே உச்வாச நிஸ்வாசங்கள் மந்திரோச்சாரணத்தால் நியமிக்கப்பட்டு அவற்றுடன் எண்ணங்களும் அடங்குகின்றன. என்கிறார் ஸ்வாமி ஞானானந்தர். உள்மூச்சிற்கு உரிய 'ஹ' என்ற எழுத்தில் வெளிமூச்சுக்குரிய 'ஸ' என்ற எழுத்தும் இணைந்த ஹம்ஸ என்ற பிராணன் ஆத்மாவில் மறைந்துள்ளது. (உச்வாஸே சைவ நிஸ்வாசே ஹம்ஸ இத்யக்ஷரத்வயம் தஸ்மாத் ப்ராணஸ்து ஹம்ஸாக்யா ஆத்மகாரேண ஸம்ஸ்தித:) என்று தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதை கூறுகிறது. ஆகவே உள்மூச்சு, வெளிமூச்சுகள் கொண்ட இயக்கமான ஹம்ஸ என்ற மந்திரமே அஜபாமந்திரம் எனப்படும். மஹாவிஷ்ணு பாற்கடலில் தியாகராஜரை மனதில் இருத்தி இந்த அஜபா மந்திரத்தை உச்சரித்து இதன் அசைவில் அவரைத் தாலாட்டியதாக தெரிகிறது.

விராட் விஷ்ணு ஸமுத்பன்ன விடங்காத்ம ஸ்வரூபவதே நம:
அஜபா ஜப சுப்ரீதாய நம:
ஸ்வாச நிஸ்வாசகம் பிதாய நம:
ஹம்ஸ மந்த்ர ஷடங்காப ஹம்ஸ வ்யத்யாஸ நர்த்தனாய நம:

ஆகிய நாமங்கள் அஜபா நடனத்திற்கு விளக்கமாக அமைந்துள்ளன.

தியாகராஜரது அஜபாநடனம் தான் இதர ஆறு விடங்க ஸ்தலங்களின் நடனங்களுக்கும் ஆதாரமாக உள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஹம்ஸ தாண்டவம் என்பது சுழுமுனை மூச்சு மேலும் கீழும் ஓடும் குண்டலினியை குறிப்பதாக யோக சிகோபநிஷத் கூறுகிறது. (சுஷீம்னாயாம் யதா ஹம்ஸ: அத ஊர்த்வம் ப்ரதாவதி) மூலாதாரத்திலிருந்து பிரம்ம ரந்த்ரம் வரை ஒளிவிடும் ஹம்ஸ நாதமே அஜபா நடனம். இதிலிருந்து சப்த விடங்க ஸ்தலங்களும் உடலில் உள்ள ஏழு சக்ரங்களைக் குறிப்பதாக அமைந்துள்ளன என்பது ஆன்றோர் கருத்தாகும். ஆகம வல்லுநர்களும் பிந்துநாதம் கலா இவற்றிற்கிடையே நிகழும் இயக்கத்தை அஜபா நடனத்திற்கு விளக்கமாகக் கூறுவர். இதை உறுதி செய்யும் வகையில் முசுகுந்த சஹஸ்ரநாமத்தின் பின்வரும் நாமம் அமைந்திருப்பதைக் காணலாம்.

பிந்து நாத கலாக்ளுப்த சாங்கோபாங்க மனோஹராய நம:

(நாதத்திற்கும் பிந்துவிற்கும் இடையே நிகழும் துடிப்பில் தியாகராஜர் மகிழ்கிறார்.)

சிவன் நடனமாடுவது உலகம் முழுவதையும் உள்ளடக்கியது என்றும் அவர் ஆடும்போது வேதங்கள் ஆடும், ஆகமங்கள் ஆடும், இனிய நாதங்கள் ஆடும், பஞ்சபூதங்கள் ஆடும் என்று திருமூலர் கூறுகிறார். ஹம்ஸோபநிஷத் தியாகராஜ நடனத்தை நாதாந்த நடனம் என கூறுகிறது.

லட்சுமி தந்த்ரம் என்ற பாஞ்சராத்ர இலக்கியத்திலும் அஜபா ஹம்ஸ மந்த்ரம் வருவதைக் காணலாம். அதில் 'ஹ' என்பது விஷ்ணுவையும் 'ஸ' என்பது லட்சுமியையும் குறிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. விஷ்ணுவின் உள்மூச்சு, வெளிமூச்சு, இணைந்து பிரம்மஸ்வரூபமான பிராணன் என்ற ஹம்ஸம் ஆடுவது குறிப்பிடப்படுகிறது. ரஹஸ்ய ஸம்ப்ரதாய நெறி தியாகராஜ நடனம் இதயமாகிய ஹ்ருத்சபையில் நிகழ்வதாகவும் அதற்கு எதிராக நடராஜரின் நடனம் மனமாகிய சித் சபையில் நிகழ்வதாகவும் கூறுகிறது. மற்ற உற்சவ மூர்த்திகளைப் போல தியாகராஜரை பல்லக்கில் அமர்த்தி எடுத்துப் போவது கிடையாது. இருமுனைகளும் இடா பிங்களா என்ற நாடிகள், அவற்றிற்கு மேலும் கீழும் அசைந்தாடுவது குண்டலினி, பிராணன், சுழுமுனை இவற்றில் நிகழும் நிகழும் நடனம் தான் தியாகராஜர் நடனம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீராம பண்டிதர் என்ற 18ம் நூற்றாண்டு மராட்டிய அறிஞர் தனது தியாகராஜ மஹாத்ம்யம் என்ற நூலில் 'ஹ' என்பது சிவனையும் 'ஸ' என்பது சக்தியையும் நாசி த்வனியான 'ம்' ஸ்கந்தனையும் குறிப்பதாக ஹம்ஸ மந்த்ர ஸ்வரூபம் என்பதற்கு விளக்கம் தருகிறார்.

திருக்காறாயில் புராணம் தியாகராஜர் ஆடுவது உலக நன்மைக்காகவே என்று கூறுகிறது. அதன்படி திருக்காறாயில் விடங்கதலத்தில் பதஞ்சலியும் வியாக்ரபாதரும் 32வகை நடனங்களைக் கண்டதாக அறியப்படுகிறது.

★ ★ ★

முசுகுந்த சக்ரவர்த்தி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



திருக்குவளை தியாகராஜர் ஆலயம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவதாண்டவங்கள் நிகழ்ந்த தலங்கள்

1. காளிகா தாண்டவம் – (படைத்தல் செய்யும்போது) நெல்லையப்பர் கோயில், திருநெல்வேலி, **தாமிர சபை**
2. சந்த்யா தாண்டவம் – (காத்தல் செய்யும்போது) மீனாட்சி அம்மன் கோயில், மதுரை, **வெள்ளியம்பலம்**
3. சங்கார தாண்டவம் – (அழித்தல் செய்யும்போது) பிரளயத்தின் போது, பேரையூர்
4. திரிபுர தாண்டவம் – (மறைத்தல் செய்யும்போது) குற்றாலநாதர் கோயில் குற்றாலம், **சித்திரசபை**
5. ஊர்த்வ தாண்டவம் – (அருளல் செய்யும்போது) திருவாலங்காடு, **ரத்னசபை**
6. ஆனந்த தாண்டவம் – ஐந்து செயல்களையும் செய்யுமிடம் நடராஜர் ஆலயம், சிதம்பரம் **கனக சபை**
7. கௌரி தாண்டவம் – பார்வதிக்காக ஆடிய போது, திருப்பத்தூர்
8. அஜபா நடனம் – விஷ்ணுவின் மார்பில் ஆடியது, திருவாரூர்
9. உன்மத்த நடனம் – பித்தனைப்போல தலையைச் சுற்றி ஆடுவது, திருநள்ளாறு
10. தரங்க தாண்டவம் – கடல் அலை போல் அசைந்து ஆடுவது, நாகப்பட்டினம்
11. குக்குட நடனம் – கோழிபோல ஆடுவது, திருக்காறாயில்
12. பிருங்க நடனம் – வண்டு மலரைக் குடைவதுபோல ஆடுவது, திருக்கோளிலி
13. கமல நடனம் – காற்றில் தாமரை அசைவதுபோல ஆடுவது, திருவாய்மூர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

14. ஹம்சபாத தாண்டவம் – அன்னம்போல் அடியெடுத்து ஆடுவது, திருமறைக்காடு
15. பிரம்ம தாண்டவம் – துர்வாசருக்காக ஆடியது, திருக்களர்
16. பத்ம நடனம் – தாமரை போல ஆடுவது, திருவொற்றியூர்
17. புஜங்க தாண்டவம் – பாம்பு போல ஆடுவது, திருவெண்காடு
18. வியத்தியஸ்த தாண்டவம் – வலக்கால் தாண்டவம் 10 கைகளுடன், மதுரை–கீழ்வேளூர்
19. அதிரகசிய தாண்டவம் – குஞ்சிதபாதத்தில் பேயார், உத்தரகோசமங்கை
20. 32வகை நடனங்களும் ஆடியது – பதஞ்சலி வியாக்ரபாதருக்காக
21. நிருத்தனாங்கனம் – பூமிதேவி நடனம், திருச்செங்காட்டங்குடி
22. வசிஷ்டருக்கு நடன தரிசனம் தந்த இடம் – ரத்னசபை, திருப்பைஞ்ஜிலி (மேலை சிதம்பரம் தக்ஷிணகைலாசம்), ஆரண்ய விடங்கர்
23. முயலகனை அடக்கி அவன் முதுகின் மீது நடனம் புரிந்த தலம் – ஆடவல்ல நாதர் ஆலயம், தலையாலங்காடு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

13. ஸ்ரீ த்யாகராஜாஷ்டகம்

கல்யாண ஸௌகந்திக புஷ்பஹார
ஸம்சோபி கண்ட்டாய கலாதராய
கல்யாண ஸைலேந்த்ர தனுர்தராய
ஸ்ரீ த்யாகராஜாய நமோ நமஸ்தே (1)

முக்தேந்த்ர நீலாதி ஸுரத்ன ராசி
ஸம் சோபி சிம்ஹாஸன ஸம்ஸ்திதாய
முக்தா குமாராக்ய மகிஸ்துதாய
ஸ்ரீ த்யாகராஜாய நமோ நமஸ்தே (2)

கீசானன ஸ்ரீ முசுகுந்த பூப
ஸம்ப்ரார்த்தனாத் பூதலமாகதாய
கோ சாந்தர ஸ்தாய குமார பித்ரே
ஸ்ரீ த்யாகராஜாய நமோ நமஸ்தே (3)

கோப்த்ரே பசூனாம் குருராஜ ரூப
தர்த்தே ஸதாம் ஸ்ரீபுரஸம்ஸ்திதாய
குப்தஸ்வகாத்ராய ஹ்ருதப்ஜகாய
ஸ்ரீ த்யாக ராஜாய நமோ நமஸ்தே (4)

காந்தாதி ஸௌந்தர்ய ரதஸ்திதாய
காந்தா ஸமா ச்லேஷித கந்தராய
காந்தார்த்த ரூபாய கஜாஸ்ய பித்ரே
ஸ்ரீ த்யாக ராஜாய நமோ நமஸ்தே (5)

நிரந்தராப்யாஸ விசேஷ வேத்ய
போதஸ்வரூபாய நிரஞ்ஜனாய
நிரங்குசானந்த பதப்ரதாய
ஸ்ரீ த்யாக ராஜாய நமோ நமஸ்தே (6)

அனந்த ஹ்ருத் வாரிஜ ஹம்ஸரூப
ந்ருத்தங் கராயாதி குருத்தமாய
அனந்த கல்யாண குணைக தாம்னே
ஸ்ரீ த்யாக ராஜாய நமோ நமஸ்தே (7)

ஸ்ரீமச் சிதானந்த குருஸ்வரூப
ஸ்ரீ த்யாகராஜாங்க்ரி ஸரோஜயுக்மே
அனந்த போத ப்ரதமஷ்ட காகயம்
ஸ்தோத்ரம் ஸுபக்த்யா க்ருதமர்ப்பிதம் மயா (8)

- முத்துசாமி தீக்ஷிதர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

14. சப்தவிடங்கத்தலங்கள் உணர்த்தும் சிவயோக விளக்கம்

மனித உடலில் உள்ள ஆறு ஆதாரங்களுடன் உச்சியைத் திறக்கும் வாயிலான கபாலத்தையும் சேர்ந்த ஏழு தளங்களையும் குறிக்கும் குறியீடுகளாகவே சப்த விடங்கத்தலங்கள் அமையப் பெற்றுள்ளன என சிவயோக நெறி உணர்த்துகிறது. அதேபோல் சிவயோக சாதனையால் எழும் குண்டலினி சக்தியானது ஒரு ஆதாரத்திலிருந்து மறு ஆதாரத்திற்குச் செல்லும் நிலையையே தியாகராஜ நடனங்கள் குறிக்கின்றன. சிவயோகத் தியானத்தில் தோன்றும் ஒளிக்காட்சியையே விடங்க லிங்கங்கள் உணர்த்துகின்றன.

சிவயோக சாதனை செய்யும்போது உண்டாகக் கூடிய ஆறுநிலைகளைப் பற்றி அருணகிரிநாதர் தனது 'ஏறுமயில் ஏறிவிளையாடும் முகம் ஒன்று' என்ற பாடலில் மிக நுட்பமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கண்டு வியக்கலாம்.

சுழுமுனை எனப்படும் புருவமத்தியில் அதாவது இதய ஸ்தானத்தில் தன் புலன்களையும் மனதையும் நிறுத்தப் பாடுபடும் சிவயோகி லட்சிய ஸ்தானமாகிய ஓங்காரம் என்ற மயில்மேல் அமர முடியாமல் வழக்கமாக உள்ள ஏறி இறங்கும் உட்சுவாச வெளிசுவாச விளையாட்டில் ஈடுபடுகிறான். இது முதற்படி இவ்வாறு பழகப்பழக மனம் குவிந்து ஒன்றுபட்டு ஓங்காரம் என்னும் மயில் மீது சிறிது அமர்ந்தவுடன் ஞான விசாரணையில் ஈடுபடுகிறான். இது இரண்டாவது படி, இவ்வாறு புலன்களும் மனதும் சலிக்காமல் இலட்சியத்தில் ஒன்றுபட்ட மாத்திரத்தில் மூன்று வினைகளும் தாமே அழிந்துவிடுகின்றன. இது மூன்றாவது படி. வினைகள் எரிந்து போனபின் குன்றுபோல் அசைவற்று துரியமலை எனப்படும் யோக சமாதியின் நிலையில் ஞானமாகிய வேல் ஏந்தி நிற்கிறான். இதுநான்காவது படி. பின் பலவிதமான மாறுவேடங்களில் ஜீவர்களை அலைக்கழிக்கின்ற ராக துவேஷமாகிய மாயாசூரரை ஞானவேலால் வதம் செய்கிறான். இது ஐந்தாவது படி, அதைத் தொடர்ந்து சுப்ரமணியனாகிய பரஞ்சோதியுடன் ஜீவாத்மாவாகிய வள்ளி இரண்டறக்கலக்க நிர்விகல்ப நிலையில் சிவயோகம் என்னும் பேரின்ப வெள்ளத்தினுள் திளைக்கிறான். இது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆறாவது படி உடலுக்குள் சூட்சுமமாக நடைபெறும் இந்த ஆதார இயக்கத்தை சப்தவிடங்க தலங்கள் நமக்கு ஸ்தூலமாக உணர்த்துவது மிகவும் அற்புதமான படைப்பாகும்.

சைவ சமயம் போதிக்கும் பல்வேறு நெறிகளில் ஒன்றான யோக சாதனை பெறற்கரிய பேரின்பத்தையும் அளவற்ற ஆற்றலையும் பெறுவதற்குப் பெரிதும் துணை நிற்கிறது. சைவம் சிவபெருமானை பரமயோகி என்றே விளிக்கிறது. இந்த யோக சாதனையை உணர்த்தவே தியாகராஜர் விடங்க தலங்களில் ராஜயோகியாக வீற்றிருந்து அருள்பாலிப்பதாக யோக நெறி கூறுகிறது.

யோக சாதனை எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிந்தால் அதற்கேற்றவாறு சப்தவிடங்க தலங்களில் எவ்வாறு அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது என்பதைக் காணமுடிகிறது.

உடலில் கருவாய்க்கும், எருவாய்க்கும் நடுவில் உள்ளது மூலாதாரம். இங்கு உள்ள மூலாதார சக்தி பாம்பு வடிவில் சுருண்டு உறங்கிய நிலையில் இருக்கும். இங்கு சக்தியை விழிப்புறச் செய்து அதனை மேல் நோக்கி எழுப்ப வேண்டும். இதற்கு குருவின் அருளுடன் பிராணாயாமம் என்ற மூச்சுக்காற்றுப் பயிற்சியும் அவசியம். யோக சாதனையால் எழுகின்ற அந்த சக்தி பின்னர் மூலாதாரத்திற்கு நான்கு விரற்கடை மேலுள்ள ஸ்வாதிஷ்டாணம், தொப்புளுக்கு நேரே உள்ள மணிபூரகம், இருதயத்திலுள்ள அனாஹதம், கழுத்தில் உள்ள விசுத்தி புருவ மத்தியிலுள்ள ஆக்ஞா ஆகிய ஆறு இடங்களில் படிப்படியாக மேலேறி சஞ்சாரம் செய்து பின்னர் கபாலவாயில் எனும் பிரமரந்திரம் வழியாக வெளிப்பட்டுத் தலைக்கு மேல் உள்ள ஸஹஸ்ராரம் என்னும் இடத்தை அடைந்து இறை இன்பத்தை அனுபவிக்கிறது.

மனித உடலில் உள்ள இந்த ஆறு ஆதாரங்களும் கபாலவாயில் என்ற ஏழாவது தலமுமே பூவுலகில் சப்தவிடங்கதலங்கள் என்ற பெயரில் நிலை பெற்றுள்ளதாக யோக சாத்திரத்தின் மூலம் அறிகிறோம்.

ஆறு ஆதாரங்களில் முதலில் இருக்கும் மூலாதாரம் என்பது திருவாரூர். இந்த மூலாதாரத்தில் உயிர் சக்தியாகிய குண்டலினி பாம்பு வடிவில் கிடக்கிறது. என்பதைக் குறிக்கவே அங்கு பாம்புப் புற்றில் தியாகராஜர் வீற்றிருப்பதாகக் குறிக்கப்படுகிறது. இந்த மூலாதாரத்தின் அதிதேவதை விநாயகர் திருவாரூர் மூலாதார கணபதி என்ற பெயரில் ஒரு தூணில் எழுந்தருளியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இரண்டாவது ஆதாரம் ஸ்வாதிஷ்டானம் என்பதே திருக்காறாயில் இந்த இடத்தை குண்டலினி சக்தி அடையும்போது யோக சாதனைகளைச் சுற்றி தெய்வீக மணம் கமழும், தெய்வீக வாசனையைக் குறிக்கவே இது கருஞ்சந்தமானகிய காறாயில்வனம் (கார்அகில்) என்று அழைக்கப்படுகிறது.

மூன்றாவதான ஆதாரம் மணிபூரகம் தான் நாகப்பட்டினம், கட்டுக்கடங்காத சக்தியுடன் பீறிட்டு எழுந்த குண்டலினி சக்தி நிதானத்துடன் பாம்புபோல் வட்டமிட்டு இங்கு சஞ்சரிக்கும். ஆகவே பாம்பையும் அதன் மணியையும் குறிக்கும் வகையில் இது நாகப்பட்டினம் எனப்படுகிறது.

நான்காவதான ஆதாரம் அனாஹதம் என்பதே திருநள்ளாறு ஏழு ஆதாரங்களில் நடுவில் இருப்பதால் (நள்+பாதி) ஆறுவழிபாதையில் நடுவில் இருப்பது என்று பொருள்பட நள்ளாறு எனப்பட்டது.

ஐந்தாவதான கண்டத்தில் விளங்கும் விசுத்தியைக் குறிக்கும் தலம் திருக்கோளிலி. குண்டலினி சக்தி அனாஹதத்திலிருந்து விசுத்திற்குச் செல்லும் பாதை மிகவும் கடினமாதலால் உரிய குருவின் துணையின்றி இந்த சாதனை கடும் மயக்கத்தை உண்டாக்கும். சில சமயத்தில் மரணமும் நேரக்கூடும். இந்த இடத்தில் சாதகன் முன்னேறுவது 'நெருப்பாலும் மயிப்பாறும் மயிர்ப்பாலமும்' என்று சித்தர்கள் பரிபாஷையில் கூறப்படுகிறது. இதனைக் கடந்து விசுத்தியை அடைந்துவிட்டால் குண்டலினி சக்தி வெற்றியடைந்து விட்டது என்றே கூறப்படும் குண்டலினி சக்தியின் குற்றங்களைக் களைந்து மேன்மை அடைய வைப்பதால் இது (கோள்+இலி) குற்றமில்லாத இடம் என்பதைக் குறிக்கும் கோளிலி எனப்படுகிறது.

ஆறாவது ஆதாரமான ஆக்ஞா என்பதே திருமறைக்காடு புருவமத்தியில் விளங்கும் ஆக்ஞா என்ற ஆதாரத்தில் குண்டலினி சக்தி ஏறி நிற்கும் போது நெற்றிக்கண் என்ற ஞானக்கண் திறக்கின்றது. இது திறந்து விட்டால் உலகிலுள்ள அனைத்து வேதங்களையும் யோக சாதகன் ஓதாமலே உணர்ந்து விடுகின்றான் என்பதால் இது வேதவனம் என்றும் மறைக்காடு என்றும் குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆறு ஆதாரங்களைக் கடந்த குண்டலினி சக்தி கபாலவாயில் வழியாக வெளிப்பட்டு தலைக்கு மேல் பன்னிரண்டு விரற்கடை தூரத்திலுள்ள சஹஸ்ராரத்தை அடையும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏழாவது தலமான இது திருவாகிய கடவுள் காட்சிக்கு வாயாக (வழியாக) இருப்பதால் இது திருவாய்மூர் என்றழைக்கப்பட்டது.

எட்டாவதாக விளங்கும் இடமே சிதம்பரப் பெருவெளியாகிய சஹஸ்ராரமாகும். இதில் சிவபெருமான் இடைவிடாது நடனம் புரிகிறார். இந்த காரணத்தால் தான் குண்டலியின் ஆதி இருப்பிடமான திருவாரூரை சிதம்பரத்திற்கு மூத்த முதல் தலம் என்று குறிப்பிடுகின்றனர். அதனால் தான் திருவாரூரில் மாலை வழிபாட்டை கண்டவர்கள் சிதம்பரத்தில் கலைகளை ஒடுக்கும் நிகழ்ச்சியான அர்த்த ஜாம வழிபாட்டையும் காணவேண்டும் என கூறப்படுகிறது.

சப்த விடங்கத்தலங்களின் பெயர்கள் யோக நெறியில் சொல்லப்படும் ஆதாரங்களோடு பொருளால் ஒன்றுபட்டு நிற்பது போலவே, இத்தலங்களில் வீற்றிருக்கும் தியாகராஜப் பெருமானின் திருநடனங்களும் குண்டலினி சக்தியின் பயணத்தை ஒட்டியே அமைந்துள்ளதும் மிகவும் வியக்கத்தக்கது.

மூலாதாரத்தில் விழிப்புற்ற கனல் சுவாதிஷ்டானத்தை அடைய மேற்கொள்ளும் நிலை, திருவாரூர் தியாகராஜரின் அஜபா நடனமாகக் கூறப்பட்டுள்ளது. முதலில் ஜெபிக்கப்படாத அஜபா மந்த்ர முயற்சியில் எழுந்த குண்டலினி கனலாக சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. ஆனால் சாதகனின் உடலில் வெப்பம் அதிகரிக்கிறது. இந்த சக்தி கட்டுக்கடங்காமல் நிலை கொள்ளாமல் குதிக்கும் தீக்கொழுந்து போல் காணப்படும்.

நாம் ஒவ்வொருமுறை மூச்சுவிடும் போதும் 'ஸோஹம்' என்ற மந்திரத்தை மனத்தால் உறைத்து நின்று எண்ணுவதே அஜபாதியானமாகும். அஜபா என்பது வாய்மொழியால் உச்சரிக்கப்படாதது என்ற பொருள் கொண்டது. இந்த முறையில் தியானிக்கும்போது ஒரு நாளைக்கு 21,600 முறை இதயத்திலுள்ள சிறு இடைவெளியில் ஏற்படும் அசைவே அஜபா நடனம் என்ற ஞான நடனம்.

சுவாதிஷ்டானத்திலிருந்து மணிபூரகம் செல்லும் கதியை உணர்த்துவது திருக்காறாயில் தியாகரின் நடனமாகிய குக்குட நடனம். துள்ளுதல் குறைந்து சண்டைக்கு செல்லும் கோழி இடமும் வலமும் பார்த்து சாய்ந்து சாய்ந்து மிக எச்சரிக்கையாக செயல்படுவது போல அமைகின்றது. எச்சரிக்கையின்றி செயல்பட்டால் குண்டலினி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சக்தி அவிந்து விடுவதுடன் மீண்டும் அதனை எழுப்பக் கடும் முயற்சி தேவைப்படும் என்பதை இது உணர்த்துகிறது. கோழியும் அக்னியும் மற்றொரு குறியீடு என்பது குறிப்பிடத்தக்கது.

மணிபூரகத்திலிருந்து அனாஹதத்தை அடையும் மனநிலையைக் குறிப்பது நாகைத் தியாகராஜரின் வீசி நடனம் என்கிற பாராவார நடனமாகும். முதலில் மிக்க ஆவலுடன் ஆர்ப்பரித்து கட்டுக்கடங்காது பயணம் செய்த குண்டலியின் நிலை பின்னர் சற்று அடங்கி செயல்பட்டது. இந்த இடத்தில் அது இன்னும் அடங்கி கடல்அலைகள் சுழன்று சுழன்று விழுவதுபோல அமைந்திருப்பதால் பாராவார தரங்க நடனம் எனப்பட்டது (பாராவாரம் = அலை, தரங்கம் = கடல்)

அடுத்து அநாஹதத்திலிருந்து விசுத்திக்குச் செல்லும் வழி மிகவும் கடுமையானதாகையால் இதில் பயணம் செய்யும் சாதகனை அது பைத்தியக்காரனைப் போல் ஆக்குகிறது. அது தீர சாதகர்கள் பாகற்காயும் தூதுவளை, கீரையும் உண்பர் உன்மத்த நிலையில் உள்ள இந்த நடனம் அநாஹதத்தில் குடிகொண்ட திருநள்ளாறு தியாராஜரின் உன்மத்த நடனமாக விளங்குவதில் வியப்பில்லை.

விசுத்தியிலிருந்து ஆக்ஞா என்ற ஆதாரத்திற்குச் செல்லும்வழி சற்று எளியது என்றாலும் அதிலும் தடைகளைக் கடக்க வேண்டி வருகிறது. இந்த பயணம் மேலும், கீழும் பக்கவாட்டிலும் வட்டமிட்டும் சுழன்றும் நடைபெறுகிறது. பூவைச்சுற்றி எழுந்தும் தாழ்ந்தும் வட்டமிட்டும் பறக்கின்ற வண்டின் ஆட்டத்தைப் போன்று இருப்பதால் இது பிரமர (வண்டு) நடனம் என்று அழைக்கப்படுகிறது. கோளிலிப் பெருமானின் நடனம் பிரமர நடனம். தொடர்ந்து ஆக்ஞா சக்ரத்தில் நிலைபெற்று எல்லாவற்றையும் உணர்ந்து கொண்ட குண்டலினி சக்தி அன்னம் நடப்பது போல் அடிமேல் அடிவைத்து அசைந்து அசைந்து சென்று கபாலவாயில் அடைகிறது. ஆகவே இதற்கு ஹம்ஸ பாத நடனம் எனப் பெயரிடப்பட்டது. இதுவே திருமறைக்காட்டுத் தியாகராஜரின் திருநடனமாகும்.

இறுதியாக கபாலம் வாயிலைத் திறந்து கொண்டு மேலே செல்லும் சக்தி தாமரை மலர் குளத்தின் நீரில் மெல்லிய நீரலைகளுக்கேற்ப ஆடியாடி அசைவது போல வருத்தமின்றி எளிதாகச் செல்கிறது. இதனால் இது கமல நடனமாகக் கூறப்படுகிறது. திருவாய்மூர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விடங்கரின் நடனம் கமல நடனம், இதன் மூலம் குண்டலினி சக்தி பயணிக்கும் பலவகையான நிலைகளைக் குறிப்பதே தியாகராஜரின் நடனங்கள் என்பதை உரை முடிகிறது.

யோகப் பயிற்சியின் போது சாதகர்களின் உள்ளுக்குள்ளேயே மாறிமாறி தோன்றும் ஒளியின் வண்ணத்திற்குகேற்ப விடங்க லிங்கங்கள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றில் பெரும்பாலானவை காலப்போக்கில் இடம் மாறி விட்டதாகவும் இவற்றிற்கு பதிலாக ஸ்படிகம் அல்லது மரகத லிங்கங்கள் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

யோக சாதகம் செய்பவனின் உடலில் குண்டலினி எழுந்ததும் அவன் தனக்குள்ளே அதிக சூட்டையும் செம்மணியின் ஒளிபரவுவதையும் உணர்கிறான். அதுவே மாணிக்கத்திரள் எனப்பட்டது. இதை ஒட்டியே மூலாதார க்ஷேத்ரமாகிய திருவாரூரில் உள்ள தியாகர் மாணிக்கத்தியாகர் என அழைக்கப்படுகிறார். சுவாதிஷ்டானத்தை குண்டலினி அடையும்போது யோக சாதகன் (ஆரஞ்சு) இளஞ்சிவப்பு நிறக்காட்சியை காண்கிறான். அதைத் தொடர்ந்து மணிபூரகத்தை அடையும்போது பொன்நிறமான மஞ்சள் ஒளி வெள்ளத்தை காண்கிறான். இதை ஒட்டியே நாகப்பட்டினத்தில் செம்மஞ்சள் நிறமான கோமேதகலிங்கம் உள்ளது.

அடுத்து அனாஹதத்தை அடையும்போது பச்சைஒளி தோன்றுகிறது. இதைக் குறிக்க திருநள்ளாற்றில் பச்சைக்கல்லால் அமைந்த மரகத விடங்கர் உள்ளார். விசுத்தி தலத்தை அடையும்போது கருநீல நிறம் தெரிகிறது. அதற்கு மேலே புருவமத்தியில் நீலநிறம் பிரகாசிக்கின்றது. இந்த நீல நிறம் அறிவுக் கண்ணாக வெளிப்படும். ஆகவே இது நீலலோஹிதம் எனப்பட்டது. அதனை அடுத்து கபால வாயிலில் வெளிறிய நீல நிறம் தோன்றுகிறது. இதனைக் குறிக்கவே ஏழாவது தலமான திருவாய்மூரில் உள்ள தியாகர் நீலவிடங்கர் எனப்படுகிறார். இங்குள்ள லிங்கம் நீலக்கல்லால் ஆனது.

ஏழு நிறங்கள் காணப்பட்டாலும் பின்னால் சொல்லப்பட்ட கருநீலம், நீலம், வெளிர்நீலம் ஆகிய மூன்றுமே நீல நிறத்தின் சாயலே. எனவே சாதகன், நீல நிற ஒளியைத் தன்னுள் காண்பதே சாதனையின் வெற்றியாகக் கொள்ளப்பட்டது. இந்த வெற்றியை நினைவு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கூறவே திருவாரூர் தியாகராஜரின் வலப்புறம் நீல நிற சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப தியாகராஜருக்கு நீலநிறங்கொண்ட கழுநீர் பூக்களால் (நீலோத்பலம்) அர்ச்சனை செய்யப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

மாணிக்கவாசகர் தனது கீர்த்தித் திருஅகவலில் 'கடம்பூர் தன்னில் இடம் பெற இருந்தும்' என்று குறிப்பிடுகிறார். கடம்பூர் என்பது கடம்புகு ஊர், அதாவது ஒரு ஜீவன் வேறொரு கடத்தில் புகுவதற்கு மூலமாக உள்ளது ஆண்குறியே. இத்தகைய ஆண்குறியையே நிலையான இடமாகக் கொண்டதை கடம்பூர் மேவிய விடங்கா போற்றி என்று குறிப்பிடுவதில் விடங்கர் என்பது ஆண்மை, உளியால் செதுக்கப்படாத லிங்கம், காமுகன் என்ற பொருள் கொண்டதால் தியாகராஜருடன் உள்ள முக்திக்கு கொண்டி என்ற பெயர் வைத்தனர். கொண்டி என்பது அடங்காக் காமம் உடையவளைக் குறிக்கும் சொல், வடமொழியில் காமேஸ்வரன், காமேஸ்வரி என்பர். இவர்கள் இடையே தான் ஸ்கந்தர் உள்ளார்.

'ஊனந்தன்னை ஒருங்குடனறுக்கும் ஆனந்தமே ஆறு அருளியும்' என்று கீர்த்தி திருஅகவலில் கூறுவது காமேஸ்வரி வித்தையை விளக்கவருகிறது. தேவர் துயர்நீக்க சிவன் திருமணக் கோலங்கொண்டு குமரனை அளித்து சூரனை சம்ஹாரம் செய்ய அனுப்பினார். மனைவி பார்வதி உள்ள போது ஏன் பார்வதி வயிற்றில் பிறக்கவில்லை என்பதற்கான விடைகாண யோக நெறியைத் தேட வேண்டும். சூரனாகிய இருள் சக்தியைக் கெடுக்க ஆறு ஆதாரங்களும் ஒன்றுபட்டு மேலே செல்லவேண்டும். அந்த சக்தியில் சிவத்தின் அறிவும் சக்தியின் ஆற்றலும் கலந்தே விளங்கும். இதுவே சந்திரஞானம் எனப்படும். சூரன் பெற்ற வரத்திற்கேற்பவே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. சப்தவிடங்க தலங்கள், சோமாஸ்கந்த வடிவம் அனைத்தும் சிவயோக நெறிப்படி அமைந்துள்ளது பலரும் அறியாத ஒரு பெரும் யோக ரகசியம்.

★ ★ ★

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஸ்ரீ போகமார்த்த பூண்முலையம்மை பிராணாம்பாள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆசிரியர் பற்றி

இந்திய அரசின் தொழிலாளர் துறையில் மண்டல இயக்குனராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு. கஸ்தூரிரங்க ஜெயராமன், வயது 84, சென்னையில் வசிப்பவர். தமிழக அரசின் அறநிலையத்துறை சார்பில் பெரும் ஆலயங்களில் மனிதவள தணிக்கை நடத்தியவர். ஆன்மீகத் தேடுதல் நிறைந்தவர். தொழிலாளர் நலம், ஆன்மீகம், சரித்திரம் பற்றிய 10-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். விஷ்ணுபுராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உள்ளார். சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்துடன் கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டு ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்திற்கு எழுதி வருகிறார். திருநள்ளாறு தேவஸ்தானத்துடன் கடந்த 40 ஆண்டுகளாகத் தொடர்பு வைத்துள்ளவர். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம், உருது ஆகிய மொழிகளில் ஆர்வம் உள்ளவர். திருநள்ளாறு தேவஸ்தானம் சார்பில் சனிபகவான் பற்றிய குறிப்புகளை ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் எழுதியுள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி கோஷ் என்ற ஆராய்ச்சிச் செம்மல் வழங்கியுள்ள தியாகராஜ வழிபாடு என்ற நூலைத் தழுவி இந்நூல் வெளியிடப்படுகிறது. ஆசிரியர் இந்த நூலில் தியாகராஜ விடங்கர் பற்றிய ஏராளமான விவரங்களை திரட்டித் தந்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection